# செம்மண்

நிலம் 1 துகள் 28 வள்ளுவர் ஆண்டு 2052, 23- 29 தை 2021 வாரமலர் பக்கங்கள் 24 விலை ரூபா 50/-




# மெல்ல கபளீகரம் செய்யும் பௌத்தம்

■ கமலநாதன் ■

அசோகச் சக்கரவர்த்தியின் மகனான மகிந்த தேரரால் இலங்கையில் பௌத்த மதம் பரப்பப்பட்டது என்றும் அப்போது தேவநம்பிய தீசன் என்ற மன்னன் அனுராதபுரத்தை ஆட்சி செய்தான் என்றும் மகிந்தரின் சகோதரியான சங்கமித்தை கீரிமலைக்கு அருகிலுள்ள கடற்பிரதேசமான ஜம்புகோளப் பட்டினத்தில் வந்திறங்கி (இந்த இடத்தில் பெரிய புத்த கோவில் 2010இன் பின்பு கட்டப்பட்டுள்ளது) அங்கிருந்து அனுராதபுரம் சென்று தான் கொண்டுவந்த வெள்ளரசு மரக்கன்றை நாட்டினார் என்றும் மகாவம்சத்தில் குறிப்புகளுள்ளன.

வட கிழக்கிந்தியப் பகுதியில் இருந்து விஜயன் தனது 700 தோழர்களுடன் நாடு கடத்தப்பட்டு மன்னாருக்கு அருகிலுள்ள தம்பபன்னிப் பகுதியில் (இந்தப் பகுதியில் காற்றாலை மின்சார உற்பத்தி நிலையத்தைத் தம்பபன்னி என்ற பெயரிலேயே பிரதமர் மகிந்த ராஜபக்ச அண்மையில் திறந்து வைத்தார்) வந்திறங்கினார் என்றும் புத்தர் நயினாதீவுக்கு (நாகதீப) வந்தார் என்றும்கூட மகாவம்சத்தில் குறிப்புகள் உள்ளன.

இதன்மூலம் கீரிமலை, நயினாதீவு, மன்னார்ப் பகுதிகளுடன் வடக்கிலும், திருகோணமலைப் பகுதியில் கிழக்கிலுமாகத் தமிழ்ப் பௌத்தத்துக்குத் தொடர்புண்டு என்ற விடயத்தை அறியமுடிவதுடன் நயினாதீவு, ஜம்புகோளப் பட்டினம் ஆகிய விகாரைகள் நீண்டகால வரலாற்றுக்குரியன என்பதுடன் பௌத்தம் இந்தப் பகுதிகளில் இருந்திருக்கக்கூடும் என்பதும் தெரிகிறது. ஆனால், இந்தப் பகுதிகள் தமிழரின் பூர்வீகப் பகுதிகளாக


யார் முதல் தொற்றாளர்? 05

எங்கடை சனத்தை திருத்தேலாது.... 20

புதிய கைத் தொழில் மய நாடாக மாறுகிறதா இலங்கை? 10

தலைகீழ் 18

ஆசியின் கோட்டை இனி இந்தியாவின் பேட்டை! 09

# செம்மண்

வாரப் பத்திரிகை
551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
மின்னஞ்சல்: shemman.redsoil@gmail.com
தொடர்பு எண்: 021 492 7781
உரிமை மற்றும் வெளியீடு: கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிட்

**ஆசிரியர்: தே.பிரேமானந்த்**


## ஏமாற்றுக் களம்!

**ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடர் அடுத்தமாத இறுதியில் ஜெனிவாவில் தொடங்கவுள்ள நிலையில், அதில் முன்வைப்பதற்காக இலங்கை தொடர்பில் மிகக் காட்டமான அறிக்கை ஒன்று ஏற்கனவே தயாராகிவிட்டது. அந்த அறிக்கையின் பிரதி ராஜபக்ச ஆட்சியாளர்களிடம் கையளிக்கப் பட்டுள்ளது. அந்த அறிக்கை தொடர்பான தனது பதிலைக் கொழும்பு அரசு தயார்ப்படுத்திக்கொள்வதற்காகவே அறிக்கை முன்கூட்டியே கொழும்பிடம் கையளிக்கப்பட்டிருக்கின்றது.**

அறிக்கை கொழும்பு ஆட்சியாளர்களை வந்தடைந்துவிட்டது என்பதை தாரக பாலசூரிய உறுதிப்படுத்தியிருக்கிறார். ஜெனிவா கூட்டத்தொடர் தொடங்குவதற்கு முன்பாகவே இந்த அறிக்கை மனித உரிமைகள் பேரவையின் இணையத் தளத்தில் வெளியிடப்பட்டுவிடும். அறிக்கையின் தொடர் நடவடிக்கைகளுக்கு உறுப்பு நாடுகளைத் தயார்ப்படுத்தும் விதத்தில் இவ்வாறு முன்கூட்டியே அறிக்கை வெளிடப்படுவது வழமை.

ஜெனிவா கூட்டத்தொடர் மாசி மாதத்தில் தொடங்கினாலும் பங்குனி மாதத்திலேயே இலங்கை விவகாரம் பேசப்படும். 2015ஆம் ஆண்டில் இலங்கை அரசின் அனுசரணையுடன் நிறைவேற்றப்பட்ட 30/1 தீர்மானத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வலியுறுத்தி 2017இலும் பின்னர் 2019இலும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. 2019 தீர்மானத்திற்கு இலங்கை அரசு வழங்கிய அனுசரணையில் இருந்து ராஜபக்சக்களின் ஆட்சி வெளியேறுவதாக ஏற்கனவே அறிவித்துவிட்டது. என்றாலும் 30/1 தீர்மானத்தை கடந்த 6 வருடங்களாகக் கொழும்பு ஆட்சிகள் நடைமுறைப்படுத்தாதது தொடர்பில் காட்டமான விமர்சனங்களைக் கொண்டதாக இம்முறை அறிக்கை இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அறிக்கை கொழும்பின் கைகளில் கிடைத்ததைத் தொடர்ந்து போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் விசாரிப்பதற்கு ஏற்கனவே நியமிக்கப்பட்ட அதிபர் ஆணைக்குழுக்களின் அறிக்கைகளை ஆராய்வதற்கென மூன்று நபர்களைக் கொண்ட புதிய ஆணைக்குழு ஒன்று அதிபர் கோட்டாபய ராஜபக்சவால் நியமிக்கப்பட்டிருப்பதாக அரசிதழ் அறிவிப்பு வெளியாகி இருக்கின்றது.

ஐ.நா. அறிக்கை கைக்குக் கிடைத்த பின்னரே இந்த நியமனம் செய்யப்பட்டது என்கிற விமர்சனங்களைத் தவிர்ப்பதற்காக கடந்த வார அமைச்சரவைக் கூட்டத்திலேயே இந்த விவகாரம் பேசப்பட்டு அனுமதியும் வழங்கப்பட்டதாக ஆட்சியாளர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்குத் தாங்கள் எந்தவகையிலும் கட்டுப்படப்போவதில்லை என்று என்னதான் வீராவேசப் பேச்சுக்களை ஆட்சியாளர்கள் வெளிப்படுத்தினாலும் அதனை அவர்கள் தன்னிச்சையாக, இலகுவாகக் கடந்துவிட முடியாது என்பதையே இந்தப் புதிய ஆணைக்குழு அறிவிப்புக் காட்டுகின்றது. அதேநேரம் இது ஒரு கண்துடைப்பு நடவடிக்கை என்பதும், ஐ.நாவிற்கான பதில் அறிக்கையில் கொழும்பு எடுத்திருக்கும் நடவடிக்கை என்று காட்டுவதற்கான ஒரு பசப்பு முயற்சி என்பதும் புலனாய்வு செய்து அறியப்பட வேண்டியதல்ல என்பது உலகறிந்த உண்மை. இதே பாணியிலேயே ரணில் - மைத்திரி ஆட்சியும் மனித உரிமைகள் சபையை ஏமாற்றி வந்தது.

இதுபோன்ற உலக அமைப்புக்களையும் மேற்குலக நாடுகளையும் கையாள்வது கொழும்புக்கு ஒன்றும் புதிதல்ல என்பதால் இந்த அறிக்கையாலும் தமிழர்களுக்கு விளையப் போகும் நன்மைகள் பெரிதாக ஏதுமில்லை. அதேநேரம் இலங்கை தானாகவே பொறுப்புக்கூறும் தனது கடமையில் இருந்து நழுவிவிட்டதால் மனித உரிமைகள் பேரவைக்கு வெளியே இலங்கையின் பொறுப்புக்கூறலைக் கொண்டு செல்வதற்கான கோரிக்கை ஒன்றைத் தமிழ்த் தேசியவாதிகளாகத் தம்மை அடையாளம் காட்டிக்கொள்ளும் 3 கூட்டுக்கள் முன்வைத்துள்ளன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழ் மக்கள் விடுதலைக் கூட்டணி ஆகிய கூட்டுக்களே இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளன.

ஐக்கிய நாடுகள் சபை அரசுகளின் அமைப்பு என்பதால் இந்தக் கட்சிகளின் கோரிக்கை இனி வரப்போகும் தீர்மானத்திலோ அல்லது தன்னிச்சையான பேரவை முடிவுகளிலோ எந்தவொரு பெரும் மாற்றத்தையும் ஏற்படுத்திவிடாது. மேற்கு நாடுகளின் நலன்களைப் பேணும் விதத்தில் கொழும்பைக் கையாளக்கூடிய வகையிலான, அதற்கு அழுத்தம் கொடுத்து சீனா பக்கமிருந்து கொழும்பை மேற்கு நோக்கித் திருப்பும் வகையிலான ஒரு புதிய தீர்மானத்தை மட்டுமே ஆகக்கூடுதலாக எதிர்பார்க்கலாம்.

மொத்தத்தில் தமிழ்க் கூட்டுக்களின் கூட்டுக் கோரிக்கையாலும் தமிழர்களுக்கு எதுவும் பெரிதாக உடனடியாக நிகழ்ந்துவிடப்போவதில்லை. தமிழர்கள் தமாக முன்வந்து போராடாத வரையில் இந்த உலக சக்திகளால் ஒரு அளவுக்கு மீறி கொழும்பைக் கையாள முடியாது. ஆனால் ராஜபக்சக்கள் ஆட்சியில் இருக்கும் வரையில் ஜெனீவாவைக் காட்டித் தமிழ்க் கூட்டுக்கள் தமது அரசியலைக் கொண்டு நடத்த மட்டுமே அது உதவும்.

மொத்தத்தில் ஜெனிவா என்பது ஆட்சித் தரப்புக்கும் தமிழர் தரப்புக்கும் ஏமாற்றி விளையாடும் ஒரு களமாகவே இருக்கிறது.

---

இருப்பதால் அங்கிருந்த தமிழர்களே பௌத்தத்தைத் தழுவியிருப்பதற்கான வாய்ப்புக்களும் அதிகம் தெரிகிறது.

தென்னிந்தியாவில் பௌத்தத்தின் செல்வாக்கு அதிகரித்திருந்தமையால் அது தமிழர் பகுதிகளிலும் செல்வாக்குப் பெற்றிருப்பதற்கு அதிகளவில் வாய்ப்புக்கள் உள்ளன. வடக்குக் கிழக்கில் பல தமிழ்ப் பௌத்த விகாரைகள் இருந்துள்ளன. யாழ்ப்பாணம் நாகவிகாரை, நயினாதீவு நாகவிகாரை, சங்கமித்தை விகாரை (ஜம்புகோளம்) கந்தரோடை, வில்கம் விகாரை (திருகோணமலை) கிரியாய் விகாரை, பேருவள விகாரை (திருகோணமலை), லங்கா பட்டுண (வெருகலாற்றுப் பகுதிக்கு அருகிலுள்ள இலங்கைத் துறைமுகப் பகுதி விகாரை) என்பவற்றை அதற்கு உதாரணமாகக் கூறலாம். அதேவேளை அனுராதபுர இராச்சியத்தில் எல்லாளன் என்ற தமிழ் மன்னன் 44ஆண்டுகள் தொடர்ச்சியாக ஆட்சி செய்தான் என்றும் அவனது படைப்பிரிவில் சிங்களவர்களும் இருந்தனர் என்றும் வரலாற் றுக் குறிப்புகள் உள்ளன.

எல்லாளனைப் போரில் வென்ற துட்டகைமுனு என்ற சிங்கள மன்ன னின் படைப்பிரிவில் தமிழர்கள் இருந்தனர் என்றும் எல்லாளனைப் போரில் வெல்வதற்கு முன்னர் பல தமிழ்ச் சிற்றரசுகளை துட்டகைமுனு வெற்றி கொண்டடார் என்றும் மகாவம்சத்திலேயே குறிப்புகள் உள்ளன.

1977ஆம் ஆண்டு அனுராதபுரத்தில் இடம்பெற்ற திட்டமிட்ட இனக்கலவரத்துக்கு முன்னர் ருவான்வெலிசாய புத்தகோவிலைச் சுற்றித் தமிழர்கள் இருந்ததையும் அந்தக் கலவரத்தின் பின்னர் அங்கிருந்து பல தமிழர்கள் தமது காணிகளை ருவான்வெலிசாய பௌத்த துறவிக்கு விற்றதும் பலருக்கும் தெரிந்த விடயம். அங்கிருந்த தமிழர்கள் பௌத்தத்தைத் தழுவாதிருந்தால் ருவான் வெலிசாய பகுதியில் வாழ்ந்திருக்க வாய்ப்பில்லை.

### தமிழர்கள் பௌத்தத்தை எப்போது கைவிட்டார்கள்.?

தமிழ் பௌத்த விகாரைகள் பற்றி முன்னாள் நீதியரசரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் கருத்து வெளியிடுகையில், "கி.பி 6ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் மொழி ரீதியாகச் சிங்களவர் என்று அழைக்கப்படுகின்ற மக்கள் கூட்டம் இலங்கையில் இருக்கவில்லை. கி.பி 2ஆம், 3ஆம் நூற்றாண்டுகளில் தமிழர்களே பௌத்தர்களாக இருந்தார்கள். இதைச் சிங்களப் பேராசிரியரான துமிந் ஆரியரத்ன எழுதிய "தெமழ பௌத்தயோ" என்ற நூலிலும் சுட்டிக்காட்டியிருக்கிறார்" என்கிறார்.

கி.பி6ஆம் நூற்றாண்டில் தமிழ் நாட்டில் பல்லவர்கால பக்தி இயக்கம் உருவான போது நாயன்மார்களும் ஆழ்வார்களும் பௌத்த சமண மதங்களுடன் பொருதியே சைவத்தை வளர்க்கவேண்டியிருந்தது. மடாலயங்களும் சமணப் பள்ளிகளும் கொழுத்தப்பட்டு துறவிகள் அங்கிருந்து விரட்டப்பட்டனர். இதனால் பாதிக்கப்பட்ட தமிழ் பௌத்த துறவிகள் இலங்கையின் வடபாகக் கடற்கரைகளுக்கூடாக வந்து கந்தரோடைப் பகுதியில் நிலைகொண்டிருப்பர் என்பதை அறிவதற்கு பெரிய எடுகோள்கள் தேவையில்லை.

இந்தத் தமிழ்ப் பௌத்தத் துறவிகளும் அவர்கள் சார்ந்த குடும்பங்களும் இந்தப் பகுதியில் குடியேறியதனால் இங்கு பௌத்த வழிபாட்டிடங்களும் மரபுகளும் தோற்றம் பெற்றிருக்கும் என்பதிலும் சந்தேகமில்லை. அவ்வாறே கந்தரோடையில் பௌத்த கட்டுமானங்கள் எழுந்திருப்பதற்கும் வாய்ப்புக்கள் உள்ளன. கி.பி. 6ஆம் நூற்றாண்டில் இலங்கைக்குத் தமிழ்ப் பௌத்த பிக்குகள் துரத்தப்பட்டு வந்து குடியேறுவதற்கு முன்னரே பௌத்தம் இங்கு பரவியிருந்திருக்கவும் அனேக வாய்ப்பிருந்தது. கி.பி 6ஆம் நூற்றாண்டு தொடக்கம் கி.பி 12ஆம் நூற்றாண்டில் யாழ்ப்பாண மன்னராட்சி தொடங்கும் வரையான 6 நூற்றாண்டுகள் பௌத்தத்தின் செல்வாக்கு வடபகுதியில் இருந்திருக்கிறது என்று நம்பலாம்.

யாழ்ப்பாணத்தில் ஆரியச் சக்கரவர்த்திகளின் (திராவிட சக்கரவர்த்திகள் என்று குறிப்பிடப்படவில்லை) செல்வாக்கு ஏற்பட்டதன் பின்னர் பௌத்த சின்னங்களாகவிருந்த கந்தரோடை மற்றும் யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளில் புத்தரின் பாதங்களை வைத்து வணங்கிய பூதவராயர் கோவில்களும் பௌத்த கட்டுமானங்களே (பூதவராயர் கோவில்கள் பின்னர் சிவனின் காலடிகளை வணங்கியதாக மாறின) ஆரியச் சக்கரவர்த்திகளால் துரத்தப்பட்ட தமிழ்ப் பௌத்த பிக்குகள் அனுராதபுரம் ஜேதவனாராமய விகாரையில் தஞ்சமடைந்திருக்கிறார்கள். அவர்களது குடும்பங்களைச் சேர்ந்த அங்கத்தவர்கள் பிணங்களுக்கான சடங்குகளைச் செய்யும் குருக்களாகத் தமிழர் சமூகத்தில் நிலைகொண்டனர் (பிராமணர்கள் இறந்த உடலுக்கு அருகில் செல்வதில்லை).

தமிழர்கள் தென்னிந்திய பௌத்த பிரிவான மகாயான பௌத்தத்தையே பின்பற்றியிருந்தார்கள். அதன் மைய விகாரையாக அனுராதபுரம் ஜேதவனாராமய விகாரை விளங்கியது. பின்னாள்களில் சிங்களவர் மத்தியில் தேராவாத பௌத்தம் செல்வாக்குப் பெற்றதால் மகாயான பௌத்தத்தின் செல்வாக்குக் குறைந்தது. அதற்கு முதன்மையான காரணம் அது தமிழர்களால் பின்பற்றப்பட்ட பௌத்த பிரிவு என்பதாகும்.

## ஆரியச் சக்கரவர்த்திகளின் காலத்தின் பின்பும் பௌத்த மதத்தின் செல்வாக்கு குடா நாட்டில் இருந்திருக்கிறது.

ஆரியச் சக்கரவர்த்திகளின் காலத்தின் பின்பும் பௌத்த மதத்தின் செல்வாக்கு குடா நாட்டில் இருந்திருக்கிறது. 1970-77 காலப் பகுதியில் சிறிமாவோ பண்டாரநாயக்காவின் ஆட்சியின்போது கொழும்பில் நடந்த பௌத்த மாநாட்டுக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து 58க்கு மேற்பட்ட தமிழ்ப் பௌத்தர்கள் சென்றிருக்கிறார்கள்.

கந்தரோடைப் பகுதியில் விகாரைக்கு அருகில் வாழ்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் தனது மகனுக்குச் சித்தார்த்தன் என்று பெயரிட்டதும், யசோதா, யசோ, யசோதரா, ராகுலன் போன்ற பௌத்த மதத்துடன் இணைந்த பெயர்களை மக்கள் வைத்திருப்பதும் ஸ்கந்தவரோதயா பாடசாலையில் பௌத்த மதத்தைப் பின்பற்றிய ஒரு மரவேலை ஆசிரியர் இருந்தார் என்றும் அவரை மாணவர்கள் "பனிப் புத்தர்" என்று அழைத்தனர் என்றும் (1970களில்) அங்கு கல்வி கற்ற ஒருவர் குறிப்பிட்டார். அதேவேளை புத்தூர், கரவெட்டி ஆகிய பகுதிகளில் இரண்டு பௌத்த பாடசாலைகள் இயங்கி வந்ததும் (தற்போது இந்துப் பாடசாலைகள்) அந்தப் பாடசாலைகளுக்கு பௌத்த நிறுவனங்களும் படையினரும் பல்வேறு உதவிகளைச் செய்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

1977ஆம் ஆண்டு ஜெ.ஆர்.ஜெயவர்த்தனாவின் ஆட்சிக் காலத்தில் நவாலியூர் சோமசுந்தரப் புலவரின் மகனான சோ.நடராஜன் பௌத்த துறவியாக மாறிய யாப்பணய தேரர் என அழைக்கப்பட்டார்.

### இந்துக் கடவுளர்களை வணங்கும் பௌத்தர்கள்

இலங்கையில் புராதன சிவன் கோவில்கள் 5 இருந்தன. நகுலேஸ்வரம் (கீரிமலை), திருக்கேதீஸ்வரம் (மன்னார்), முன்னேஸ்வரம் (சிலாபம்) கோணேஸ்வரம் (திருகோணமலை), தொண்டேஸ்வரம் (மாத்தறை - இந்தச் சிவாலயம் பற்றி இன்றுள்ள சைவர்கள் பலருக்கு தெரியாது. போர்த்துக்கேயரால் இடிக்கப்பட்டபின் தேவிநுவர விஷ்ணு கோவிலாகச் சிங்களவர்களால் வழிபடப்படுகிறது) ஆகியவையே அந்த 5 சிவன் கோயில்களும். சிங்கள மக்கள் சிவனை வணங்குவதில்லை.

சிவபெருமான் சோழர்களால் வணக்கப்பட்ட தெய்வம் என்பதால் அது தமிழர்களின் ஆக்கிரமிப்புக் கடவுள் என்பதாக விளங்கி வைத்துள்ளனர். ஆனால் சிவனின் பிள்ளைகளான பிள்ளையாரையும்

முருகனையும் வணங்குகிறார்கள். அதைவிட பத்தினித் தெய்வம் (அம்மன்), விஷ்ணு போன்ற கடவுளர்களையும் வணங்குகின்றனர்.

மிக ஆதியான சைவ மத வழிபாடுகளை பௌத்த கோவில்களில் இன்றும் பேணி வருகின்றனர். சைவக் கடவுளர்களின் கோவில்களுக்கு அருகே புத்தர் சிலைகளையும் வைத்து வணங்கினார்கள் (இதைக் கதிர்காமத்தில் தெளிவாகக் காணமுடியும்). தமிழரும் பௌத்த மதத்தைப் பின்பற்றியவர்கள் என்பதால் அங்கு முரண்பாடுகள் தோன்றவில்லை.

ஆனால் இன்று நிலமை அப்படியல்ல. இன முரண்பாடுகள் கூர்மையடைந்துள்ள இன்றைய நிலையில் பௌத்தம் சிங்கவர்களுக்குரியதாகவும் சைவமும் கிறிஸ்தவ மும் தமிழர்களுக்குரியதாகவும் இஸ்லாம் முஸ்லிம்களுக்குரியதாக வும் மதப் பாகுபாடு செய்யப்பட்ட நிலையில் குமுளமுனை குருந்தூர் மலை ஆதிசிவன் கோவில் அருகில் புத்தரை வைப்பதற்கு எடுக்கப்படும் முயற்சி சர்ச்சைக்குரியதாகப் பார்க்கப் படுவதைத் தவிர்க்க முடியாது.

ஆதி இலங்கை மக்கள் இயற்கை மற்றும் கிராமிய வழிபாட்டைக் கொண்டிருந்தார்கள். அந்தந்தப் பகுதிகளுக்கேயுரிய பாரம்பரிய வணக்கமுறையைப் பின்பற்றி வந்த பண்டைய - ஆதிமூலக் கிராமியத் தெய்வங்களை மாற்றியமைத்து டாம்பீகமான ஆலயங்களை உருவாக்கி ஆகம வழிதான் கோயில்கள் கட்டப்படவும் பூசைகள் இடம்பெறவும் வேண்டும் என்றும் ஒருசாரார் உருவாக்கினார்கள். அதற்கு அவர்களுக்கு ஆட்சி அதிகாரமும் துணை நின்றது. அது போலவே தற்போதுள்ள பௌத்த கோவில்களின் வளர்ச்சியும் பார்க்கப்படவேண்டும். எங்கெல்லாம் இந்துக் கோயில்கள் இருந்தனவோ அங்கெல்லாம் புத்தரும் எழுந்தருளினார். ஆனால் ஆட்சி அதிகாரத்தின் துணையுடன் புத்தரும் விகாரையும் மிகப் பெருமளவில் வளர்ந்துவிட காலப் போக்கில் இந்துக் கடவுளரும் ஆலயங்களும் காணாமற்போயின. அதன் மிச்சசொச்ச எச்சங்களாகவே இன்னும் விகாரைகளில் இந்துக் கடவுளர்கள் வணக்கப்படும் முறை. சிறிய கோட்டுக்கு அருகில் வரையப்பட்ட பெரிய கோட்டைப்போல இந்துக் கோவில்களுக்கு அருகே முளைத்துப் பின்னர் பெருமெடுப்பில் வளர்ந்ததால் விகாரைகள் நிலைத்தன.

இனியும் அதுவேதான் நடக்கும் என்பதற்கான உதாரணங்களாகவே முல்லைத்தீவு குருந்தூர் மலை மற்றும் யாழ்ப்பாணம், நிலாவரை பௌத்த விவகாரங்களும் இருக்கின்றன.

◆ ◆ ◆

கடந்த வாரமளவில் தமிழர் தாயகப் பிரதேசங்களில் பெரிதும் பேசு பொருளாக, சமூக வலைத்தளங்கள் தொடங்கி நாடாளுமன்றம் வரையில் எடுத்துச் செல்லப்பட்ட விடயம், தொல்லியல் ஆராய்ச்சிகள் என்கின்ற பெயரில் தொல்பொருள் திணைக்களத்தினரால் மேற்கொள்ளப்படுகின்ற ஆக்கிரமிப்புகள் தான்.

முல்லைத்தீவு மாவட்டத்தை குறிவைத்து தொடர்ச்சியாக இத்தகைய பௌத்தமயமாக்கல் செயற்பாடுகள் அதிகமாகிக் கொண்டு செல்கின்றன. முல்லைத்தீவு மாவட்டத்தில் வன ஜீவராசிகள் திணைக்களம், வனவளத் திணைக்களம், பாதுகாப்புத் தரப்பினர், வெலிஓயா மற்றும் மகாவலி அபிவிருத்தி திட்டம் எனத் தொடர்ச்சியாக முல்லைத்தீவு மாவட்டம் அச்சுறுத்தலுக்குள்ளாகி வருகின்றது.

இந்த நிலையில்தான், முல்லைத்தீவு, குமுழமுனைப் பகுதியில் அமைந்துள்ள குருந்தூர் மலைப் பகுதியிலும் தொல்லியல் ஆய்வு என்கின்ற பெயரில் பௌத்தமயமாக்கல் செயற்பாடுகள் கடந்த வாரமளவில் மத்திய அரசில் அங்கம் வகிக்கும் இராஜாங்க அமைச்சர்

(23ஆம் பக்கம் பார்க்க)

16 ஆவது வருடத்தில் ....

# துணை தேட துணை நிற்கும் 'மாலை மேட்ரிமோனி'!

Maalai Matrimony



திருமணம் என்பது வாழ்க்கையில் ஓர் அழகான பிணைப்பாகும். இது இரண்டு நபர்களை ஒன்றிணைக்காது. ஆனால் இரண்டு குடும்பங்கள் மற்றும் அவர்களின் கலாசாரங்கள் மற்றும் மரபுகளை ஒன்றிணைக்கும். இது ஒரு புதிய அத்தியாயத்தின் தொடக்கமாகும். இது உங்களுக்கு வாழ்வு முழுவதும் சந்தோசத்தை தரகூடிய விடயமாகும். இவ்வளவும் உங்களுக்கு சரியான துணை இருந்தால் மட்டும் சாத்தியமாகும்.

உங்கள் கணவர் அல்லது மனைவி, அவர்கள் உங்கள் வாழ்க்கையில் இறுதி மட்டும் உங்களுடன் பயணிக்கப் போகிறார்கள். அந்தப் பயணத்திற்கு, சரியான துணையை கண்டுபிடிப்பது ஒரு முக்கியமான படியாகும். பொருத்தமான வாழ்க்கைத் துணையை தேடும் பயணம் உங்கள் நேரம், ஆற்றல், பணம் மற்றும் மிக முக்கியமாக இது உங்கள் பொறுமையினையும் சோதிக்கின்றது.

முன்பைவிட உங்களுக்குரிய பொருத்தமான துணையை தெரிவு செய்ய 'மாலை மேட்ரி மேனி' **(Maalai Marimony)** என்பது இணைய வழி திருமண சேவைத் தளமாகும். குறிப்பாக உலகெங்கிலும் உள்ள தமிழ் சமூக மக்களுக்காக ஆரம்பிக்கப்பட்டுள்ளது. வாடிக்கையாளர்களின் அனைத்து தேவைகளையும் பூர்த்தி செய்வதன் மூலம் இது உங்களின் பொருத்தமான நீண்ட துணை தேடும் பயணத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கின்றது.

### சவால்

உங்களுக்கு சரியான துணையைக் கண்டு பிடிப்பது உங்கள் வாழ்க்கையை சிறந்ததாக மாற்றக்கூடிய ஒரு முக்கியமான பணியாகும். மணமக்கள் அல்லது அவர்களின் பெற்றோர் செய்யும் முதல் விடயம், திருமண தரகரைக் கண்டு பிடிப்பது. ஒரு துணையைக் கண்டுபிடிக்க வாரங்கள், மாதங்கள் அல்லது ஆண்டுகள்கூட ஆகும். ஆம், நீங்கள் அதை சரியாகப் படித்தீர்கள். இது பல ஆண்டுகள் கூட ஆகலாம்.

ஏமாற்றங்கள், தொல்லைகள், பொறுமையின்மை மற்றும் மேலும் குழப்பங்களுடன் இது ஒரு பெறுமதி மிக்க பணியாகும். பொதுவாக, திருமண தரகர்கள் செய்யும் செயல்முறையின் வெளிப்படைத்தன்மை நாம் செலுத்தும் பணத்திற்கு மதிப்புக்குரியது அல்ல. வாழ்க்கைக்குச் சரியான துணையைக் கண்டு பிடிக்கும் பயணத்தை மேற்கொள்ள வேண்டியதன் அவசியத்தை வாடிக்கையாளர்கள் உணர வேண்டும்.

### தீர்வுகள்

மேலே விவாதிக்கப்பட்ட சாவல்களைச் சமாளிக்க சமீபத்திய இணைய தொழில்நுட்பங்களின் உதவியுடன் "மாலை மேட்ரிமோனி" **(Maalai Marimony)** என்ற இணையத்தளம் உருவாக்கப்பட்டுள்ளது. துணையைத் தேடும் செயல்முறையை மேம்படுத்துவதற்காக உரு வாக்கப்பட்ட, வடிவமைக்கப்பட்ட வழிமுறைகளைப் பயன்படுத்துவதன் மூலம் துணையைத் தேடும் சாவல்கள் தற்போது எளிமைப் படுத்தப் பட்டுள்ளன.

தமிழ் கலை, கலாசாரம் புரளும் யாழ் மண் ணில் கடந்த 15வருடங்களாக திருமண சேவையியை நடத்தி இன்று 16ஆவது வருடத்தில் கால்த்தடம் பதிப்பையிட்டு பெருமை கொள்கின்றது மாலை திருமண சேவை.

தற்போது எங்கும் பரந்து விரிந்து காணப்படும் போட்டி வணிகச் சூழலில் பல திருமண சேவை நிறுவனாங்கள் இருந்தாலும் என்றும் மக்களின் நன்மதிப்பினையும் சரியான வரன் தெரிவுமுறையினாலும் இன்று யாரும் எட்டாத முன்னிலையில் மாலை திருமண சேவை மக்கள் மனதில் தனியிடத்தினைப் பிடித்துள்ளது.


கடந்த 15ஆண்டுகளில் கடந்து வந்த பல சோதனைகளையும், சாதனைகளாக்கி மாலை திருமண சேவை என்னும் தனிப் பெயருடன் மற்ற போட்டி திருமண சேவை நிலையங்களை விட எமது கலை கலாசாரத்தினை எப்போதுமே கட்டிக்காக்க வேண்டிய பிரதான பொறுப்புடன் நாங்கள் தொடர்ந்து பயணிக்கின்றோம்.


தற்போது ஒரு படி மேலே சென்று உங்களுக்கான வரன்களை நீங்களே தெரிவு செய்யும் படியாக இணையவழி திருமண சேவை **(www.maalai.com)**ஆரம்பித்து செயற்படுத்தி வருகின்றோம்.

அதுமட்டுமல்லாது வாழ்க்கைத்துணையை தேடும் உங்கள் திருமணத் தேடலுக்கான முற்றுப்புள்ளியாக மாலை **App** (செயலி) தற்போது எல்லா கைத்தொலைபேசிகளிலும் பதிவிறக் கும் செய்யக்கூடியவாறு நவீன தொழிநுட்பத் துடன் நாம் வியாபித்து நிற்கிறோம்.

கடந்த 15 வருட காலத்தில் சுமார் 5,000 மேற்பட்ட திருமணங்களை உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் நடத்தி வைத்துள்ளோம். கடந்த ஆண்டு கூட 300இற்கும் மேற்பட்ட திருமணங்கள் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் எமது மாலை திருமண சேவை ஊடாக வெற்றிகரமாக மிகவும் குறைந்த சேவைக் கட்டணத்துடன் நடத்தி முடித்துள்ளோம்.

கடந்த காலங்களில் எமது மாலை திருமண சேவை நிலையத்திற்கு எவ்வாறு வாடிக்கையாளர்களாகிய உங்கள் பங்களிப்பு மற்றும் அனுசரணை இருந்ததோ அதே போல் இந்த ஆண்டிலும் உங்களுடைய பங்களிப்பு அவசியம். அதற்கேற்ப உங்கள் திருமணத்தேடல்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க எமது மாலை திருமண சேவை தயாராக உள்ளது.





● ஸூடோ ஸ்வாமி

# சுற்றுலாவிகளை வரவேற்க நாடு தயாரா?

சுற்றுலாப் பயணிகளை நாட்டிற்குள் வரவழைப்பதை இலக்காகக் கொண்டு வியாழக்கிழமை கட்டுநாயக்கா பன்னாட்டு வானூர்தி நிலையம் திறக்கப்பட்டிருக்கின்றது. இறுக்கமான சுகாதார முறைகளை நடைமுறையில் கொண்டே இந்த திறந்துவைப்பு இடம்பெறுவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. கொவிட்-19 இன் தாக்கத்தின் காரணமாக இலங்கையின் பொருளாதாரத்திற்கு பல்வேறுதிசையிலிருந்தும் அடிவிழுந்திருந்த நிலையில்,அதிலிருந்து மீளும் முயற்சிகளில் ஒன்றாக இலங்கை சுற்றுலாத் துறையைக் கட்டியெழுப்பும் தொடக்கமாக வானூர்தி நிலையம் மீள இயக்கத் தொடங்கியிருக்கிறது. கடந்த 9 மாதங்களாக வானூர்தி நிலையம் சுற்றுலாப் பயணத்திற்குத் தாளிடப்பட்டிருந்த நிலையில் கடந்த 21ஆம் திகதி அது நீக்கப்பட்டிருக்கிறது.



திங்கட்கிழமை பொதுமக்கள் ஊடக அமைச்சில் ஊடகப் பிரதிநிதிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலிலே சுற்றுலாத்துறை அமைச்சர் சுற்றுலாத்துறைக்காக வானூர்தி நிலையத்தினைத் திறப்பது தொடர்பில் அறிவித்தலை விடுத்திருந்தார். இலங்கைக்குச் சுற்றுலாவரும் சுற்றுலாப் பயணிகளிடமிருந்து உள்ளூர்வாசிகளுக்கும் உள்ளூர்வாசிகளிடமிருந்து சுற்றுலா பயணிகளுக்கும் தொற்று பரவாத வகையில் சுகாதார விதிமுறைகளைக் கடைப்பிடித்தே சுற்றுலாத்துறை இயங்கவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டிருக்கிறார். இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபையால் சான்றளிக்கப்பட்ட 180 சொகுசு விடுதிகள், வரவுள்ள சுற்றுலாப் பயணிகளுக்குத் தங்குமிடத்தினை வழங்கவுள்ளதாகவும், சுற்றுலாவிகள் இலங்கைக்கு வரமுன்பதாக பி.சி.ஆர். பரிசோதனையை மேற்கொண்டிருக்க வேண்டுமென்றும் அமைச்சர் தெரிவித்தார்.

### உக்ரேன் சுற்றுலாவிகளிடம் பரீட்சார்த்தம் பார்ப்பு

உக்ரேன் நாட்டைச் சேர்ந்த 1500 சுற்றுலாவிகளை முதற்கட்டமாக - பரீட்சார்த்தமாக - களமிறக்கி பார்த்த பின்பு, ஏனைய நாடுகளுக்கும் விரிவாக்கம் வகையிலேயே இந்த முயற்சிக்கு அடி எடுத்துவைக்கப்பட்டிருக்கிறது. அணிஅணியாக அழைத்து வரப்பட்ட உக்ரேன் நாட்டு சுற்றுலாவிகள் இலங்கையின் பல இடங்களுக்கும் சென்றிருந்தார்கள். அண்மையில் அவர்கள் சிகிரியா மற்றும் பொலன்னறுவை பிரதேசங்களுக்கு சுற்றுலாவை மேற்கொண்டிருந்தனர். சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவினதும் மொஸ்கோவிற்கான முன்னாள் இலங்கைத் தூதுவரான உதயங்க ரணதுங்கவினதும் ஏற்பாடுகளின் அடிப்படையிலேயே இந்தத் திட்டம் இப்போதைக்கு வலம்வந்துகொண்டிருக்கின்றது.

2019ஆம் ஆணடில் தேவாலயங்கள் மற்றும் சொகுசு விடுதிகள் மீது நடத்தப்பட்ட உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் காரணமாக இலங்கை சுற்றுலாத் துறை பெரும் பின்னடை வைச் சந் தித்திருந்தது. குறிப்பாக, தேவால யங்களை மட்டுமல்லாது விடுதி களையும் இலக்கு வைத்து குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்ட தனால் சுற்றுலாவிகள் நேரடியாகப் பாதிக்கப்பட்டதோடு வெளிநாட்டுப் பயணிகளுக்கு ஆபத்தான இடமாகவும் இலங்கை மாறியிருந்தது. எனினும், பின்னர் மேற்கொள்ளப்பட்ட ஊக்குவிப்பு செயற்பாடுகளையடுத்து இலங்கைக்கான சுற்றுலாவிகளின் வருகை ஏற்றம் கண்டிருந்தது.

### மார்ச்சிற்கு பின்பு இல்லை

கணிசமான அளவு சுற்றுலாப் பயணிகளின் வருகையைக் கடந்த ஆண்டின் தொடக்கத்தில் கொண்டிருந்தது இலங்கை. கடந்த தை மாதத்தில் 2 இலட்சத்து 28 ஆயிரம் சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வந்திருந்தனர். மாசி மாதத்தில் 2 இலட்சத்து ஏழாயிரம் சுற்றுலாவிகள் இலங்கையை வந்தடைந்த போதிலும், மார்ச் மாதத்தில் அது 71 ஆயிரமாகக் குறைவடைந்திருந்தது. மார்ச் மாதத்திற்குப் பின்னரான மாதங்களில் சுற்றுலாப் பயணங்களுக்கு வானூர்தி நிலையம் பூட்டப்பட்டதை அடுத்து எந்தவொரு சுற்றுலாவியும் இலங்கைக்கு வருகை தரவில்லை. இப்போது மார்கழி மாதத்தில் 393 சுற்றுலாவிகள் பதிவுசெய்யப்பட்டிருப்பதாக அறிக்கை ஒன்று குறிப்பிடுகின்றது.

### ஆரோக்கியமான நிலைமை திரும்பவில்லை

இதனிடையே பொதுச் சுகாதார பரிசோதகர்கள் எதிர்வரும் வாரங்களில் இலங்கையின் கொரொனா நிலைமை மோசமடையலாம் என்பதாக எச்சரிக்கை மணி எழுப்புகிறார்கள். பண்டிகைக் காலத்தில் அரசு தமது ஆலோசனைகளுக்கு அமைய கட்டுப்பாடுகளை நடைமுறைப்படுத்

> யாலசரணாலயத்திற்கு சற்றுலாவிகள் சென்றிருந்த போது குழுக்களாகவே பயணித்தனர் பயோபபிள் என்னும் மட்டுப்படுத்தப்பட்ட சூழலைக் கொண்ட நடைமுறையைப் பின்பற்றவில்லை.

தாதனால், நிலைவரம் கையை மீறிப் போய்விட்டதாகக் குமுறுகிறார் பரிசோதகர்கள் சங்கத்தலைவர் உபுல் ரோகன. சுகாதார அமைச்சும் ஏனைய தரப்புக்களும் கொரொனா நிலைமை தொடர்பில் போலியான ஒரு விம்பத்தினை தோற்றுவிப்பதாக தெரிவிக்கும் அவர், சமூகத் தொற்று நிலையை இலங்கை அடைந்துவிட்டதாகவே கருதுவதாகவும் அவர் தெரிவிக்கிறார்.

இதைவிடவும் நாளாந்தம் கொரொனா தொற்றுடன் இனங்காணப்படும் நபர்களின் எண்ணிக்கை உயர் மட்டத்திலேயே நிற்கிறது. தவிரவும் தினசரி கொரொனா தொற்று காரணமாக இறப்புகளும் பதிவாகியே வருகின்றன.

### குற்றச்சாட்டுக்கள்

இலங்கைக்கு சுற்றுலாவிகளைக் கொண்டு வருவது தொடர்பில் உருவாக்கப்பட்ட சுகாதார வழிமுறைகள் மற்றும் கட்டுப்பாடுகள் உக்ரேன் பயணிகள் விடயத்தில் செவ்வனே கடைப்பிடிக்கப்படவில்லை என்னும் குற்றச்சாட்டு பல தரப்புகளினாலும் சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றது. ‘குவாரன்டைன்’என்னும் தனிமைப்படுத்தல் காலம் வெளிநாடுகளிலிருந்து திரும்புவோருக்கு கட்டாயமாக 14 நாள்கள் என்ற இருக்கையில், உக்ரேன் சுற்றுலாவிகள் 6 - 7 நாட்களையே அதற்கு செலவிட்டதாக ஊடக அறிக்கை ஒன்று குறிப்பிடுகின்றது.

கட்டம் கட்டமாக அழைத்து வரப்பட்ட உக்ரேன் சுற்றுலாவிகளில் முதற்கட்டத்திலேயே மூவர் கொரொனா தொற்றுடையவர்களாக அடையாளம் காணப்பட்டிருந்தனர். அவர்களுக்கு சிகிச்சையும் வழங்கப்பட்டிருந்தது.

முகக்கவசம் அணிவது, சமூக இடைவெளியை பின்பற்றுவது போன்ற புதிய ஒழுங்கு முறைகளை கைக்கொள்ளுமாறு சுற்றுலாவிகளிடம் அறிவுறுத்தப்பட்டிருந்தபோதிலும் அதனை அவர்கள் சரிவர பின்பற்றவில்லை என குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிறது. யாலசரணாலயத்திற்கு இவர்கள் சென்றிருந்தபோது குழுக்களாகவே பயணித்தனர் எனவும் பயோபபிள் என்னும் மட்டுப்படுத்தப்பட்ட சூழலைக் கொண்ட நடைமுறையைப் பின்பற்றவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. சுற்றுலாவை ஒழுங்கமைப்புச் செய்த நிறுவனங்கள் பயணம் மற்றும் தரிப்பின்போது கடைப்பிடிக்க வேண்டிய சுகாதார நடைமுறைகள் தொடர்பில் போதுமான அக்கறை எடுத்துக் கொள்ளவில்லைஎனவும் சுட்டிக் காட்டப்படுகிறது.

சுற்றுலாத்துறையை மீள நிமிர்த்துவதற்கென எடுக்கப்பட்ட திட்டமெனக் காட்டப்படும் இந்தப் பரீட்சார்த்த முயற்சியில் ஏற்கெனவே பல சறுக்கல்கள் இனங்காட்டப்பட்டிருக்கின்றன. ஆனால் இதனூடாக இலங்கை 420 மில்லியன் ரூபா வருமானத்தை ஈட்டியிருப்பதாகச் சுற்றுலாத்துறை அமைச்சர் குறிப்பிடுகின்றார். அதனோடு. இப்போது வானூர்தி நிலையத்தினையும் அகலத் திறந்திருக்கிறார்கள். பரீட்சார்த்த முயற்சியில் விட்ட தவறுகளை ஆராய்ந்து திருத்திக்கொள்ளாமல் இலங்கை சுற்றுலாத்துறை அகலக் கால் வைக்குமாயின்,அது இலங்கைச் காதாரத்துறைக்கு சுமையை அதிகரிப்பதுடன் வந்துசெல்லும் சுற்றுலாவிகளையும் தொற்றுக்காவிகளாக மாற்றிவைக்கும்.

# யார் முதல் தொற்றாளர்?

## விடை தெரியாமலேயே போகலாம்

கனிமொழி

கொரோனா பெருந்தொற்று ஒருவேளை கட்டுப்பாட்டுக்குள் வந்தது உலகம் மீண்டும் பழைய நிலைக்குத் திரும்பிவிட்டாலும், இந்த விசக் கிருமி ஏற்படுத்தியிருக்கும் அதிர்வலை இனிக் காலத்திற்கும் அடங்காது போலுள்ளது.

இந்த விசக் கிருமியினால் முதன் முதலில் தொற்றுக்குள்ளான நபரைக் கண்டறிவது ஒரு போதும் நடக்கப்போவதில்லை என்று உலக சுகாதார அமைப்பின் வல்லுநர்கள் அஞ்சத் தொடங்கியிருக்கிறார்கள்.

முதல் நோயாளி என்கிற சொற்றொடரைப் பயன்படுத்துவதில் நாம் மிகக் கவனமாக இருக்க வேண்டும் ஏனெனில் உலகில் பலர் முதல் தொற்றாளர் என்று கணிக்கப்படக்கூடிய நிலையே இப்போதிருக்கின்றது. இந்த முதல் நோயாளியை நாம் கண்டுபிடிக்காமலேயே போகக் கூடும். நாம் செய்யவேண்டியதெல்லாம், அறிவியலைப் பின்பற்றுவதும் ஆய்வுகளைப் பின் தொடர்வதும்தான்'' என்று தெரிவித்திருக்கிறார் மரியா வான் கெர்கோவ்.

சீனாவிற்குச் சென்றிருக்கும் உலக சுகாதார அமைப்பின் தொழில்நுட்ப வல்லுநர்களில் ஒருவர் இவர்.

நீண்ட இழுபறிகளுக்குப் பின்னர் உலக சுகாதார அமைப்பின் தொழில்நுட்ப விசாரணையாளர்களைச் சீனா தனது நாட்டுக்குள் அனுமதித்தது. அதைத் தொடர்ந்து அவர்கள் கொரோனா பெருந்தொற்று சீனாவில் இருந்தா முதன் முதலில் பரவத் தொடங்கியது என்பது தொடர்பான விசாரணைகளைத் தொடக்கியுள்ளார்கள்.

சீனாவின் வுகான் நகரிலேயே முதலாவது தொற்றாளர் உருவானார் என்கிற கருத்தைச் சீனா தொடர்ச்சியாக மறுத்துவருகின்றது. ஆனால், அமெரிக்கா சீனாவிலேயே இந்த விசக் கிருமி உருவானது என்று மீண்டும் மீண்டும் வலியுறுத்துகின்றது. தவிர மேற்குநாடுகள் பலவும் கூட சீனாவே இந்த விசக்கிருமியின் ஊற்றிடம் என்று கருதுகின்றன. அதனாலேயே உலக சுகாதார அமைப்பு அது தொடர்பான விசாரணைகளைத் தொடக்கியுள்ளது.

இதற்கிடையில் சீனாவின் வுகான் நகரில் உள்ள வைரஸ் ஆய்வகத்தில் பணியாற்றிய இளம் ஆய்வாளர் ஒருவரே முதலாவது கொரோனா தொற்றாளர் என்று அமெரிக்கா தெரிவித்திருந்த கருத்தை சீனா மீண்டும் மறுத்துள்ளது. அமெரிக்க அயலுறவுச் செயலர் (அமைச்சர்) பொம்பியோவின் மற்றொரு பொய் என்று அது தெரிவித்தது.

பதவியிலிருந்து விலகிச் சென்ற அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம் ஆட்சியில் அயலுறவுத்துறைச் செயலராக இருந்தவர் மைக் பொம்பியோ. பதவி நீங்கிச் செல்வதற்கு முன்பாக அமெரிக்க உளவுத்துறையை மேற்கோள்காட்டி அவர் விடுத்த அறிக்கையில் வுகான் வைரஸ் ஆய்வுப் படிப்பகத்தின் பணியாளருக்கே முதன்

**ஆய்வகத்தில் பணியாற்றிவந்த இளம் ஆய்வாளரான குஆங் யான்லிங் என்பவருக்கே முதல் தொற்று ஏற்பட்டதாகக் குற்றஞ்சாட்டப் படுகின்றது.**

முதலில் தொற்று ஏற்பட்டது என்று தெரிவித்திருந்தார்.

அதாவது, 2019 மார்கழி மாதம் கொரோனா குறித்து உலக சுகாதார அமைப்புக்கு சீனா உத்தியோகபூர்வமாகத் தகவல் தெரிவிப்பதற்கு ஒரு மாதத்திற்கு முன்பாகவே வுகான் ஆய்வகத்தின் பணியாளருக்கு தொற்று ஏற்பட்டது என்றும் அதனைச் சீனா மறைத்து விட்டது என்றும் அமெரிக்கா தெரிவித்திருக்கிறது.



ஆய்வகத்தில் பணியாற்றிவந்த இளம் ஆய்வாளரான குஆங் யான்லிங் என்பவருக்கே முதல் தொற்று ஏற்பட்டதாகக் குற்றஞ்சாட்டப் படுகின்றது. அவர் திடீரென மாயமாகிவிட்டார் என்று எழுப்பப்பட்ட தகவல்களைத் தொடர்ந்து இந்த விவகாரம் மேலும் சர்ச்சைக்குள்ளானது.

கொரோனா பரவல் குறித்த உண்மைகளை மறைப்பதற்காக சீன அரசே அவரைக் காணாமலாக்கிவிட்டது என்கிற குற்றச்சாட்டும் எழுந்தது. யான்லிங்கைக் காணவில்லை என்கிற தகவல்கள் வரத்தொடங்கியதை அடுத்து அவர் கொரோனா தொற்றுக்குள்ளாகி உயிரிழந்துவிட்டதால் அவரது உடல் எரிக்கப்பட்டுவிட்டது என்ற வதந்திகளும் உலாவரத் தொடங்கின.

இந்த நிலையில் திடீரென சமூக ஊடகத்தில் தோன்றிய யான்லிங், தான் உயிருடனேயே இருக்கிறார் என்று மட்டும் தெரிவித்துவிட்டு மீண்டும் மாயமாகி விட்டார்.

அவர் சீன அதிகாரிகளினால் தலைமறைவாக்கப்பட்டுவிட்டார் என்கிற குற்றச்சாட்டுப் பலமாக உள்ளது. அதேநேரம் அவர் வேறொரு ஆய்வகத்தில் பணியாற்றுவதற்காக மாற்றலாகிச் சென்றுவிட்டார் என்றும் ஒரு தகவல் உண்டு.

யான்லிங் வுகான் ஆய்வகத்தில் தனது





முதுநிலை ஆய்வு மாணவியாகப் பயின்று பின்னர் அங்கேயே பணியாற்றிவந்தவர். 2015ஆம் ஆண்டு அவர் தனது முதுநிலைப் பட்டத்தைப் பெற்றுக்கொண்ட பின்னர் வேறொரு இடத்தில் பணியாற்றினார், அவர் ஆய்வகத்திற்குத் திரும்பி வரவில்லை என்று ஆய்வகத்தின் தலைமை அதிகாரி கடந்த வருடம் மாசி மாதம் தெரிவித்திருந்தார். யான்லிங்கே முதற் தொற்றாளர் என்கிற குற்றச்சாட்டையும் அவர் பலமாக மறுத்தார்.

யான்லிங் ஒருபோதும் தொற்றுக்குள்ளாகவில்லை என்றும் அவர் ஆரோக்கியத்துடனேயே இருக்கின்றார் என்றும் ஆய்வகத்தின் இணையத்தளத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது. கொரோனாவின் முதல் தொற்றாளர் யான்லிங் என்று இணையத்தளங்களில் செய்தி வெளியாகியதைத் தொடர்ந்தே இந்த மறுப்புக்கள் எல்லாம் வெளியாகி இருந்தன.

கொரோனா பெருந்தொற்றுக்கு எதிராகப் போராடிக்கொண்டிருந்த மிக முக்கியமான காலகட்டத்தில் கிளம்பிய இந்த வதந்தியால் ஆய்வகத்தின் பணிகள் பெரிதும் பாதிக்கப்பட்டன என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டிருந்தது.

அப்படியிருந்தபோதும் கடைசியாக வந்த அமெரிக்க அறிக்கை, வுகான் ஆய்வகத்தில் தொற்றுக்குள்ளான பலரில் முதலாவதாகத் தொற்றுக்குள்ளானவர் யான்லிங் என்று தெரிவித்திருந்தது.

சர்ச்சைக்குரிய இந்த வுகான் ஆய்வகத்தில் வௌவால்களில் இருந்து பெறப்பட்ட, கொரோனா வைரஸை ஒத்த வைரஸ்கள் பலவும் கையாளப்பட்டுவந்தன என்பதே இந்தக் குற்றச்சாட்டுக்களுக்கெல்லாம் அடிநாதம்.



# வெளுத்து வாங்கும் மகேந்திரத்தார் 02

■ என். குமரன் ■

## “எங்களை நாங்களே ஏமாத்திக் கொண்டும், துரோகம் செஞ்சு கொண்டும் இருந்தால் எங்க முன்னேறுறது..?”

தமிழனுக்கு ஆண்டு முழுவதும் பொங்கல் தான் என்று தைப் பொங்கல் தினத்தில் பொங்கல் தொடர்பான புதிய பார்வை யைத் திறந்து விட்டவர் மகேந்திரத்தார். மண் ணோடு ஒன்றிய வாழ்க்கையில் இருந்து இன்னும் விலகிவிடாத எளிய மனிதர். அனுபவம்தான் வாழ்க்கை என்பதை அவரோடு உரையாடும் போது உணரமுடிகிறது.

“எங்களுக்குள்ள நாங்களே ஏமாத்திக் கொண் டும், துரோகம் செஞ்சு கொண்டும் இருந்தும் எண்டா நாங்கள் எங்க முன்னேறுறது..?” என்று ஆதங்கப்படுகிறார் அவர்.

“அண்டைக்கு இந்தியன் ஆமி வந்து எங்க ளைச் சித்திரவதை செய்யேக்க, எங்கட பெடி யள் நாட்டை விட்டு எங்கையெண்டாலும் ஓடுங்கோ, நல்லா இருங்கோ எண்டு சொல்லேக்க ஓட வெளிக்கிட்ட எங்கட சனம் இண்டைக்கு வரைக்கும் ஓடி முடியேல்ல..”

“படிச்சவை படிக்காதவை, வேலை செய்யி றவை வேலை செய்யாதவை எண்டு எல்லாரும் வெளிநாடு வெளிநாடு எண்டு போய்க் கொண்டி ருக்கினம். அப்பிடி வெளிநாட்டில என்னத்தை கண்டவையள் எண்டு தெரியேல்ல... ஊரில உழைக்கிறதுக்கு எத்தினையோ வழியள் இருக்கு. அதெல்லாத்தையும் விட்டிட்டு அங்க அப்பிடி என்ன கிடக்கெண்டு தெரியேல்ல.. இண்டைக்கு எங்கட தமிழ்ச் சமூகத்தில பார்த்தா எங்கட நாட் டில இருக்கிற ஆக்களவிட நாட்டை விட்டு ஓடிற ஆக்கள்தான் அதிகமாக் கிடக்கு.. அங்க போனாப் பிறகு பார்த்தா சொல்லினம் வீட்டுக் குள்ளதான் இருக்கிறம். இஞ்ச உலாவித்திரிஞ்ச மாதிரி திரியேலாமக் கிடக்கெண்டு. போன வைக்குத் தெரியாதே இதைத் தான் முதல் போனவையும் சொன் னவை நாங்களும் யோசிச்சு செய்வம் எண்டு.. எல்லாத்துக் கும் காரணம் பணம்தான்..”

நாட்டு நடப்பை மிக லாவக மாக எடுத்து விளக்குகிறார் மகேந் திரத்தார். தமிழர்கள் நாட்டை விட்டு வேறு தேசங்களுக்குச் சிதறி ஓடிக் கொண்டேயிருப்பது குறித்து அவ ருக்குப் பெரும் கவலை. இப்படியே போனால் தமிழரின் நிலை என்னா குமோ என்கிற கவலை.

“பணத்துக்காகதான் எங் கடையாக்கள் இண்டைக்கு ஓடிக் கொண்டிருக்கினம்.. சாதி, சனம், ஊர் உலகம் எல்லாத்தையும் விட்டிட்டு காசிருந்தா காணும் எண்ட நிலைக்கு எங்கடையாக் கள் வந்திட்டினம்.. சனம் மட்டுமில்ல இண்டைக்கு அரசியலும் பணத்துக் காகதான் ஒடுது, நாடும் பணத்துக்காகதான் ஓடுது எல்லாம் பணமயமா போய்ச்சுது. அறிவு, கல்வி, ஒழுக்கம் எண்டு ஒண்டும் இல்லை.. காசி ருந்தா மதிப்பு தன்பாட் டில வரும் எண்ட நிலமை வந்ததால எல்லாரும் காசைத் தேடியே ஓடி னம்..”

போகிற போக்கில் அரசியல் தலைவர்கள் முதற்கொண்டு அத் தனை பேர் மீதும் தன் வார்த்தைகளால் சாட்டை சுழற்றுகிறார். அவரது விளாசலுக்கு நின்று நிதானித்துப் பதில் சொல்லும் திராணியற்றிருக்கிறது தமிழ்ச் சமூகம்.



“நல்லாப் படிச்சவன், நல்ல வேலையை தேடிக் கொண்டு ஊரில எங்கட சமூகத்தோட வாழ்ந்து, சனத்துக்கும் சேவை செஞ்சுகொண்டு இருந் தான் எண்டா எங்கடை யாக்களின்ட நிலை வேற மாதிரி இருக்கும். கம்ப சில போய்ப் படிச்சிட்டு பட்டம் வாங்கினாப் பிறகு வெளிநாட்டுக்கு ஓடுறாங் கள் எங்கட பெடியள்.. அப்பிடிப் போனா எங்கட சனத்தை, எங்கட நாட்ட யார்தான் காப்பாத்திறது? படிக்கிறதுக்கு எங்கடை நாட்டுப் படிப்பு வேணும் உழைக்கிறதுக்கு, வேற நாட்டுக்குத்தான் போகவேணும் எண்டு சொல்லிக் கொண்டு போறாங்கள் அப்பிடி போற வங்களை என்ன சொல்லுறது..”

“சரி, நீங்கள் போறதுதான் போறீங்கள், கொஞ் சக்காலத்தில வந்து நாட்டை காப்பாத்துவியள் எண்டு பார்த்தா, கதை வேற மாதிரியெல்லே போகுது.. எப்பிடியெண்டா, வெளிநாட்டுக்குப் போறாங்கள். அங்கினேக்க படிச்சதுக்கு ஏற்ற வேலை செய்யிறாங்கள், செய்து கொஞ்சக் காலத்தில திரும்பி நாட்டுக்கு வாறாங்கள், ஏன் நாட்டைக் காப்பாத்தவோ, அப்பிடியொண்டும் இல்லை, கலியாணம் செய்யவாம். அங்கயிருந்து வெளிக்கிடேக்கயே சொல்லிப் போடுவாங்கள், தான் படிச்ச படிப்புக்கு ஏத்த நல்ல பெம்பிளை ஒண்டு பாக்கச் சொல்லி. இஞ்ச தாய் தேப்பனும் நல்ல படிச்ச பெம்பிளையாப் பாத்து வச்சிருக்க வந்து தடல் புடலாக் கலியாணம் செய்துபோட்டு ஒண்டு இரண்டு கிழமையில திரும்பி ஓடுறாங் கள். கலியாணம் செய்த பிள்ளையையும் ஸ்பொன்சர் பண்ணிக் கூப்பிட்டு விடுவாங்கள். ஆனால், சில பெடியள் ஸ்பொன்சர் பண்ணே லாம ஏதும் சிக்கல் பட்டு கலியாணம் செய்த பிள்ளையளை அதுகளுக்கு பிள்ளையையும் குடுத்துப் போட்டு ஊரிலையே இருக்க வைச்ச

**சனம் மட்டுமில்ல இண்டைக்கு அரசியலும் பணத் துக்காகதான் ஒடுது, நாடும் பணத்துக் காகதான் ஓடுது எல்லாம் பணமயமா போய்ச்சுது.**

சம்பவங்களும் இருக்குது. அங்க போய் ஒரு அறைக்குள்ள கிடந்து அடிக்கடி சண்டை பிடிச்சு பிரிஞ்சு போற நிலையளும் இருக்கு..”


“வேறு சில பெடியள், உழைக்கிறதுக்கு எண்டு இஞ்ச இருந்து அங்க போய் செய்யாத குளப்படி எல்லாம் செய்து, தண்டனையெண்ட பெயரில அந்த நாட்டு ஜெயிலுக்குள்ள இருந்திட்டு வரு குதுகள். காசுக்காக ஆசைப்பட்டு ஓடிப்போய் தாய் தேப்பன்ட காசைக் கரியாக்கிப் போட்டு அவங்கள் திருப்பியனுப்ப நாட்டுக்கு வந்த கதையும் நிறையவே இருக்கு.. அதைவிடப் பெரிய சோகம் என்னெண்டா சில பெம்பிளையள் வீட்டுக் கஸ்டம் தாங்கேலாம உந்தச் சின்னச் சின்ன நாடுகளுக்கு எல்லாம் வேலைக்கெண்டு போகுதுகள், அங்க போயிட்டு முதலாளிமார் செய்யிற தொல்லையளாலையும், அலங்கோலங் களாலையும் சரியாப் பாதிக்கப்படுதுகள். அண் டைக்கு ரீவில பாத்தன் வேலைக்கெண்டு போன சில முஸ்லிம் பெம்பிளையள் சாப்பிடக்கூட காசில்லாமல் திரும்பி வரவும் முடியாமல் அழுது கொண்டு பேட்டி குடுக்கு துகள்..”


அப்பிடியென்ன இந்த நாட்டில் உழைக்கப் பிழைக்க வழியில்லாம லுக்கு அந்த நாடுகளில போய் இப்பிடிக் கஸ்டப் பட வேண்டியிருக்குது என்பதுதான் மகேந்திரத் தாரின் ஆதங்கம். அந் தக் கஸ்ரத்த இங்கேயே பட்டால் இன்னும் நல்லா, சந்தோசமாக வாழ்ந்துவிட் டுப் போகலாமே கொஞ்சப் பணத்துடனும் என்கிறார் வெள்ளந்தியாக.

“ஆனால், தம்பி ஒரு விதத்தில பார்க்கப் போனால் எங்கடை நாடும், நாட்டுச் சூழ்நிலை யளும் முக்கியமா எங்கடை சனமும்தான் கார ணம் நாங்கள் உப்பிடியே ஓடிக் கொண்டிருக்கிற துக்கு. ஏனெண்டா, இண்டைக்குப் பார்த்தியள் எண்டா எங்கடையாக்களுக்குள்ளயே நானோ, நீயோ எண்ட போட்டி வந்திட்டு.. சந்தைக்கு ஒரு சாமான் விக்கக் கொண்டு போனா ஒருத்தன் வந்து குறைஞ்ச விலை கேப்பான்.. நான் கட்டாது எண்டு சொல்ல அவன் போய் வேறயொராள செட்

(22ஆம் பக்கம் பார்க்க)

தபேந்திரராசா




**குகை ஓவியங்களின் வரலாறும் வளர்ச்சிப்போக்கும் இப்படியி ருக்கின்ற வேளையில்தான் புதிய ஓவியம் ஒன்று கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறது.**

# குகைக்குள் கிடந்த பழைய பன்றி...!

நமது முன்னோர்கள் அனைவரும் வேடர்களே. அவர்களின் வாழ்விடமாகக் குகைகள் விளங்கின. பெருங்கற்களைக் குடைந்தும் இயற்கையாக அமையப்பெற்ற பாறைகளுக்குள்ளும் அவர்கள் தமது வாழ்வைக் கழித்தனர். இன்றைப்போல அவர்களுக்கு அப்போது பல்லாயிரக்கணக்கான தேவைகள் இருக்கவில்லை. உணவு தேடுவது மாத்திரமே அவர்களின் முழு நேரத் தொழிலாக இருந்தது. இயற்கையோடு இசைந்த வாழ்வை வாழ்ந்தார்கள்.

வேட்டையே அவர்களின் முக்கிய தொழிலாகவும் முழுநேர வேலையாகவும் இருந்தது. எழுதப் படிக்கத் தெரியாவிடினும் அவர்களுக்கு நன்கு வரையத் தெரிந்திருந்தது. தமது மனதிலுள்ளதை வரைந்தார்கள். கிறுக்கல்களாகவும் புரியாத மனதின் வெளிப்பாடுகளாகவும் அவை இருந்தாலும் அந்த வரைதல் அவர்களின் வாழ்க்கையைப் பிரதிபலிப்பதாக இருந்தது.



பெரிய பெரிய மிருகங்களைத் தாங்கள் வேட்டையாடுவதுபோல ஓவியங்களை வரைந்தால் தமது வேட்டையின்போது அதிக மிருகங்கள் கிடைக்கும் என்ற நம்பிக்கையின் அடிப்படையிலும், காட்டில் விலங்குகளுக்கு மத்தியில் அவற்றை எதிர்கொண்டு வாழ்வதால் அவற்றைக் கட்டுப்படுத்தும் ஆற்றலைப் பெறலாம் என்ற நம்பிக்கையின் அடிப்படையிலும் பல ஓவியங்களை அவர்கள் தாம் வசித்த குகைகளில் வரைந்திருக்கலாம் என்பது பின்வந்த நம்மவர்களின் கண்டுபிடிப்பு.

எது எப்படியிருப்பினும் நமது முன்னோர்கள் வாழ்ந்த காடுகளில் நிறைந்து கிடக்கின்ற வீடுகள் (குகைகள்) பலவும் இப்போது பாதுகாப்பும் பராமரிப்பும் பெற்றிருக்கின்றன. ஆராய்ச்சிகளுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன.

**குகை ஓவியங்கள்**

வேடுவ மூதாதையர்களின் எண்ணங்கள், நம்பிக்கைகளைப் பிரதிபலிப்பனவாக வெவ்வேறு விதமான வடிவங்களிலும், வண்ணங்களிலும் இந்தக் குகைகளில் வரையப்பட்டுள்ள ஓவியங்கள் இருக்கின்றன. மிகப் பழங்காலத்தைச் சேர்ந்த ஓவியங்களில் பல்வேறு விலங்குகளின் வடிவங்களும், வேட்டைக் காட்சிகளும் இடம்பெற்றிருக்கப் பின்னரான காலத்தில் இந்த ஓவியங்களில் மெல்ல மெல்ல மனித வடிவங்களும் இடம்பெறத் தொடங்கின என்கிறார்கள் வரலாற்றாசிரியர்கள்.

கிறுக்கல்கள், கோடுகள், அடர்த்தியான வண்ணப் பூச்சுகள் (குறிப்பாகச் செந்நிறம் - குருதி - விலங்குக் கொழுப்பு) என்பனவே இந்த ஓவியங்கள் அனைத்தினதும் ஆரம்ப இயல்புகளாக இருக்கின்றன. முன்னோர்களின் இந்தக் குகை ஓவியங்களில் பயன்படுத்தப்பட்ட வண்ணக் கலவையை வேதியல் சோதனைக்குட்டுத்தி அவை வரையப்பட்ட காலத்தைக் கணிக்கிறார்கள்.

*முழுமையான ஓவிய வடிவில் இருக்கின்ற இந்தப் பன்றியே ஆதிகால ஓவிய முறைக்குட்பட்ட முதலாவது பழைய ஓவியம் என்கிற தரத்தில் வைத்து ஆராயப் படுகிறது.*

அத்தோடு ஓவியங்களின் வரைவு முறையை வைத்தும் அவற்றின் வடிவமைப்பைக் கொண்டும் கூடக் காலம் கணிக்கப்படுகிறது. இதுவரை பிரான்ஸ், இத்தாலி, ஸ்பெய்ன், ஆஸ்திரேலியா, ஆபிரிக்கா, தென் அமெரிக்கா, இந்தியா ஆகிய பல நாடுகளிலும் இந்த வகைக் குகைகளும் ஓவியங்களும் கண்டறியப்பட்டுள்ளன.

முதல் முதலாக உலகின் குகை ஓவியம் கண்டறியப்பட்ட பெருமைக்குரியது ஸ்பெய்ன். அங்குள்ள அல்டமிரா என்கிற குகையே முதன்முதலில் குகை ஓவியம் கண்டுபிடிக்கப்பட்ட குகை. ஆனால் மிகப் பழங்கால ஓவியத்தைக் கொண்டது என்று கருதத்தக்க குகை தென்னாபிரிக்காவில்தான் கண்டுபிடிக்கப்பட்டது.

**தென் ஆபிரிக்கக் குகை**

தென்னாபிரிக்காவின் கடலோரத்தில் இருந்த குகை ஒன்றை அகழ்வாராய்ச்சி செய்தபோது உலகின் பழமையான வரைபடம் என்று கருதத்தக்க ஓவியம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. தென்னாபிரிக்கத் தலைநகரான கேப் டவுனுக்குக் கிழக்கே கிட்டத்தட்ட 300 கிலோமீற்றர்கள் தொலைவிலுள்ள ப்ளொம்போஸ் என்கிற குகையில்தான் ஓவியம் என்று கருதத்தக்க அந்த வடிவம் கண்டுபிடிக்கப்பட்டது. 1.5 அங்குல நீளமுள்ள இந்த ஓவியம் ஹஷ்டாக் என்கிற சுருக்கக் குறியீட்டின் வடிவத்தில் காணப்படுகிறது. குறுக்கறுக்கின்ற சிவப்பு கோடுகளால் ஆன இது கிட்டத்தட்ட 73 ஆயிரம் ஆண்டுகள் பழமையானது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஐரோப்பாவிலும் ஏனைய நாடுகளிலும் உள்ள குகை ஓவியங்களுடன் ஒப்பிடுகையில் இது 30 ஆயிரம் ஆண்டுகள் பழமையானது என்றும் கணிக்கப்பட்டுள்ளது. விலங்கிலிருந்து மாற்றமடைந்த மனித இனத்தின் ஆதிவர்க்கமான ஹோமோ சேப்பியன்களால் இது வரையப்பட்டிருக்கலாம் என்பது ஊகம்.


இந்த ஓவியம் இயற்கையாகவே உருவாகியிருக்கலாம் என்றும் சிலர் வாதிடுகின்றனர்.



குகை ஓவியங்களின் வரலாறும் வளர்ச்சிப் போக்கும் இப்படியிருக்கின்ற வேளையில்தான் புதிய ஓவியம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அந்த ஓவியம் ஐரோப்பிய மற்றும் ஏனைய நாட்டுக் குகை ஓவியங்களைவிடவும் (தென்னாபிரிக்கா தவிர்ந்த) மிகப் பழமையானது என்று தெரியவந்திருக்கிறது. அது பன்றி ஒன்றைக் குறிக்கும் ஓவியம்.

**அதிசயிக்கிறார்கள் தொல்லியல் வல்லுநர்கள்**

இந்தோனேசியாவில் விலங்குகள் வாழ்ந்த தடயங்களைக் கொண்டிருக்கின்ற குகை ஒன்றில் தீட்டப்பட்டிருக்கின்ற இந்தப் பழங்கால ஓவியத்தைக் கண்டறிந்திருக்கின்ற தொல்லியல் நிபுணர்கள் ஆச்சரியத்துக்குள்ளாகியிருக்கிறார்கள்.



அதற்குக் காரணம், தென்னாபிரிக்கா தவிர்ந்த மற்றைய நாடுகளில் கண்டுபிடிக்கப்பட்ட குகை ஓவியங்களைவிடப் பழமையான இந்த ஓவியம் இதுவரை எவர் கண்ணிலும் தட்டுப்படாமல் இருந்ததுதான்.

அத்தோடு தென்னாபிரிக்காவில் கண்டுபிடிக்கப்பட்ட வரைதலானது ஓர் ஓவியத்துக்குரிய பண்புகளுடன் இருக்கவில்லை என்கிற விமர்சனங்களும் உள்ளன. இதனால், முழுமையான ஓவிய வடிவில் இருக்கின்ற இந்தப் பன்றியே ஆதி கால ஓவிய முறைக்குட்பட்ட முதலாவது பழைய ஓவியம் என்கிற தரத்தில் வைத்து ஆராயப்படுகிறது.

இந்தக் காட்டுப்பன்றி ஓவியம் 45 ஆயிரத்து 500 ஆண்டுகள் பழமையானதாக இருக்கலாம் என நம்பப்படுகிறது. இந்த ஓவியத்தை ஆச்ரே எனப்படும் ஒரு வகையான அடர் சிவப்பு இயற்கை மண் நிறமிகளால் வரைந்திருக்கிறார்கள். இந்தக் காட்டுப்பன்றி சூலவேசி வார்டி என்கிற இனப் பன்றி என்றும் சொல்லியுள்ளனர்.

இந்த ஓவியத்தை சூலவேசி தீவில் இருக்கும் லியாங் டெடாங்கே என்கிற குகையில் கண்டுபிடித்திருக்கிறார்கள். இந்த ஓவியத்தின் மீது உருவான கால்சைட் என்கிற ஒரு வகையான தாதுப் படிமத்தைப் பொருளின் பழமையைக் கண்டுபிடிக்கும் நிபுணர்கள் யுரேனியம் சீரிஸ் ஐசோடோப் டேடிங் என்கிற முறையைப் பயன்படுத்தி ஆராய்ந்ததில்தான் அது 45 ஆயிரத்து 500 ஆண்டு காலம் பழமை வாய்ந்தது எனத் தெரிய வந்துள்ளது. 136 சென்ரி மீற்றர் நீளமும், 54 சென்ரிமீற்றர் உயரமும் கொண்ட இந்த ஓவியம், கொம்புகளைக் கொண்ட வார்டி ரக ஆண் பன்றியைக் குறிப்பிடுகிறது.

இந்த பன்றி ஓவியத்தின் மேல், பின்புறத்தில் இரண்டு கைகள் இருக்கின்றன. இந்தக் கைகள் வேறு இரண்டு பன்றிகளை நோக்கி இருப்பதாக இருக்கின்றன. ஆனால் அந்தப் பன்றி ஓவியங்கள் அழிவடைந்த நிலையில் காணப்படுகின்றன. 'இந்தப் பன்றி மற்ற இரு வார்டி பன்றிகள் சண்டை போடுவது அல்லது பன்றிகள் தொடர்பு கொள்வதைக் கவனிப்பது போலிருக்கிறது' என்கிறார் இந்த ஆய்வறிக்கைகளை எழுதியவர்களில் ஒருவரான ஆடம் ப்ரும்.

இந்த கை ஓவியத்தை வரைவதற்கு, நிறமிகளைக் கொட்டுவதற்கு முன் ஓவியர்கள் தங்களுடைய கைகளை வைத்திருப்பார்கள் என ஆராய்ச்சியாளர்கள் கூறியுள்ளனர். இந்த ஓவியத்தில் இருக்கும் எச்சிலை வைத்து, அவர்களின் மரபணு மாதிரிகளை எடுக்க முடியும் என நம்புகிறது ஆராய்ச்சியை மேற்கொண்ட குழு. எனவே இந்தப் பழைய பன்றியை வரைந்த நமது மூதாதையர்களும் ஆராய்ச்சி மூலம் வெளிப்படுவார்கள் என்கிற நம்பிக்கை பிறந்திருக்கிறது.

# யார் ஞானி..?

சாம் - ரமேஸ்குமார்

உலகத்தின் போக்கை அறிந்து. உலக வாழ்வை செம்மையாக வாழ்ந்து. அதில் முதிர்ச்சி நிலை அடைவதே ஞானத்தின் முழுமையான வெளிப்பாடாகும் என்கிறார்கள் அனுபூதிமான்கள்.

ஞானம் என்பது பிறர் சொல்லி வருவதல்ல. அது ஆழ்ந்த துன்பங்கள் நிறைந்த வாழ்வின் ஊடாகப் பயணிக்கும் ஒரு படி நிலையினால் பரிணாமம் பெறுவதாகும். ஒரு ஞானி இயல்பாகவே துன்பங்களை வருவித்து பற்றற்று வாழப் பழகுகின்றான். தாமரை இலைத் தண்ணீர் போல.

அப்படிப்பட்ட ஞானிகளை விரல் விட்டு எண்ணி விடலாம். ஆனால் இன்றைய உலகில் சீடர்களின் எண்ணிக்கையைவிடப் போலி ஞானியர்களின் எண்ணிக்கையே மிகவும் அதிகமாக உள்ளது. எங்கு பார்த்தாலும் காவியில் போலி மயமே.

கட்டுச் சொல்பவனில் இருந்து. சமய நூல்களுக்கு உரை எழுதுப்வன் வரை இன்று பெயரளவில் ஞானியாகி விட்டான். எல்லோரும் ஞானியாகி விட்டதால் சகுனிக்கும் ஞானிக்கும் அடையாளம் தெரியாமல் கடவுள்கூட விழி பிதுங்கலாம். அதுவே இன்றைய எழுதப்படாத விதியாகவும் இருக்கலாம்.

தன் ஆன்மாவுக்குள் எப்பொழுது பிறரின் துன்பங்களும் துயரங்களும் கூக்குரலாக எதிரொலிக்கின்றதோ அப்போதுதான் ஒருவன் முழுமைப் பெற்ற ஞானியாகின்றான். அதுவரை அவனும் அஞ்ஞானியே என்கின்றது வேதம்.

வெறும் நூலறிவையும். சாஸ்திர அறிவையும் வைத்துக் கொண்டு. தன் பேரறிவை உணர முற்படுவது. உப்பில்லாப் பண்டத்துக்கு ஒப்பானதாகும். இங்கு உப்பை உதாரணமாக ஆன்ம அனுபவமாக எடுத்துக் கொள்ளலாம்.

என் சுயமே சத்தியம். என் சுயமே உன்னதம். என் சுயமே என் லட்சியம் என்பதைத் தன் வாழ்வின் அனுபவமாக்கிக் கொள்ள விரும்பும் ஒருவன். பிறரைத் தனக்குள்ளும். தன்னைப் பிறருக்குள்ளும் கண்டுணர்ந்து. மனிதர்களில் முன்னிலை, படர்க்கை என்ற நிலைகளையே வேரோடு அகற்ற வல்லவனாகின்றான் அவனே உண்மை ஞானி.

இந்த பிரபஞ்சத்தையும் அதனோடு ஒட்டி உறவாடும் மனிதர்களையும். தன்னையும் வேறுபடுத்திப் பார்க்கும் ஒருவன். ஆழ்ந்த சத்தியத்தை தனக்குள் அறியாதவனாகின்றான். அவன் எப்படித் தன்னிலையில் ஒரு தெய்வீக ஞானியாக முடியும்..? ஆழ்ந்து சிந்தித்து பாருங்கள்.

# டைட்டானிக் அழகியின் ஆதங்கம்...!



1912ஆம் ஆண்டில் தனது முதல் பயணத்தின்போது கடலுக்குள் மூழ்கிய ஆர்.எம்.எஸ்.டைட்டானிக் என்கிற கப்பலின் சோகக் கதையை 1997ஆம் ஆண்டில் படமாக்கினார் இயக்குநர் ஜேம்ஸ் கமரூன். பெரும் விசாலமான ஆடம்பரப் பயணிகள் கப்பலான டைட்டானிக், அதன் முதற் பயணத்தின் போதே பனிப்பாறையுடன் மோதிக் கடலுள் அமிழ்ந்தததும் அந்தக் கப்பலில் சந்தித்துக் காதல் வயப்பட்ட இளசுகளில் ஒன்று இறந்ததுமே அந்தப் படத்தின் கதை. கப்பல் கடலில் மூழ்கிப் பலர் இறந்ததே உண்மைத் துன்பியல் கதையாக இருக்க இந்தப் படத்தின் பக்கமாக ரசிகர்களை ஈர்ப்பதற்காக ஒரு காதல் கதையை கமரூன் புகுத்தினார். ஆனாலும் கப்பலில் இறந்தவர்களின் கதையைவிடப் பிரபலம் பெற்றதும் ரசிகர்களை ஈர்த்ததும் இந்தக் காதல் ஜோடிகளின் கதையே.

பார்வையாளர்களையும் வசூலையும் அள்ளிக்குவித்துப் பெரு வரவேற்புப் பெற்றது படம். 11 ஒஸ்கார் விருதுகளைப் பெற்ற படம் இது. இதில் வரும் காதல் இணையளான நாயகன் லியார்னாடோ டிகாப்ரியோ, நாயகி கேட் வின்ஸ்லெட் இருவரும் பெரும் புகழை அடைந்தனர். மூழ்கப்போவது தெரியாமல் கப்பலுக்குள் சிறகடித்துத் திரிகின்ற இந்த இளம் இணைகளின் மகிழ்வான தருணங்களில் ஒன்றாக - ஒரு கட்டத்தில் நிர்வாணமான நாயகியை நாயகன் ஓவியமாக்குவான்.

ஆங்கிலேயர் மத்தியில் சாதாரண வாழ்வியல் எனினும் பல மொழிகளிலும் பல நாடுகளில் வெளியாகிய டைட்டானிக்கின் இந்தத் தத்ரூபக் காட்சி விமர்சனங்களுக்கு உள்ளாகாமலில்லை. இந்த நிலையில் கடந்த சில தினங்களுக்கு முன்பு நடந்த இணையவழிக் கலந்துரையாடல் ஒன்றில் கலந்து கொண்ட டைட்டானிக் பட நாயகி கேட் வின்ஸ்லேட் இந்தப் படத்தின் மூலம் கிடைத்த புகழால் தனக்கு அவமானங்கள் குவிந்தன என்று ஆதங்கப்பட்டுள்ளார். "டைட்டானிக் வெளியான பிறகு என்னை நானே பாதுகாத்துக்கொள்ளும் நிலைக்கு தள்ளப்பட்டேன். ஒவ்வொரு நபர்களுக்கும் இடையிலான இடைவெளி மிக நீண்டதாக இருந்தது. ஏராளமான உடல் ரீதியான அவமானங்களை எதிர்கொண்டேன். கேலி செய்யப்பட்டேன். பிரிட்டன் பத்திரிகைகள் என்னிடம் அன்பாக நடந்து கொள்ளவில்லை" என்றுள்ளார். ஓர் ஆங்கில நாயகியின் ஆதங்கமாக இது இருப்பதும் பேசுபொருள்தான்.

# ஆஸியின் கோட்டை இனி, இந்தியாவின் பேட்டை..!!



என்.குமரன்

கடந்த வருடம் இடம்பெற்ற ஐ.பி.எல். தொடரை முடித்துக் கொண்டு நேராக ஆஸ்திரேலியா நோக்கிப் பயணமாகியிருந்தது இந்தியக் கிரிக்கெட் அணி. ஒருநாள், ரீ-20, டெஸ்ட் என்கின்ற மூன்று வகையான போட்டிகளிலும் ஆஸ்திரேலியாவுடன் மோதும் நோக்கில் கலந்துகொண்டு முதலில் இடம்பெற்ற ஒருநாள் தொடரினை தாரைவார்த்திருந்தது. பின்னர் இடம்பெற்ற ரீ-20 போட்டித் தொடரினை வென்று முதலில் சந்தித்திருந்த தோல்விக்கு பழிதீர்த்திருந்தது. மூன்று விதமான போட்டிகளில் நடந்து முடிந்திருந்த ஒருநாள் மற்றும் ரீ-20 தொடர்களில் தலா ஒவ்வொன்று வீதம் வென்றிருந்த இரு அணிகளும் மீதமிருந்த டெஸ்ட் தொடரில் யார் வெற்றியீட்டுவது என்கின்ற முனைப்புடன் களம்கண்டன..

4 போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரில் முதல் போட்டியில் ஆஸ்திரேலியா அணி எட்டு விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றிகண்டது. அந்தப் போட்டியிலே யாரும் எதிர்பாராத திருப்பமாக இந்தியா அணி இரண்டாவது இனிங்ஸில் வெறுமனே 36 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுகளையும் இழந்து ரசிகர்களை ஏமாற்றியது. பின்னர் இடம்பெற்ற இரண்டாவது போட்டியிலே இந்தியா எட்டு விக்கெட்டுகளால் வென்று ஆஸ்திரேலியாவுக்கு பதில் கொடுத்தது. மூன்றாவது டெஸ்ட் போட்டியில் ஆஸ்திரேலியா அணி வெல்லும் வாய்ப்பு இருந்தும் இந்திய அணியின் நிதானமான துடுப்பாட்டத்தின் மூலம் சமநிலையில் முடிக்க மூன்று போட்டிகள் பின்னர் தொடர் ஒன்றுக்கு ஒன்று என்கின்ற சமநிலையில் இருந்தது.



நான்காவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டியில் வெற்றிபெறும் அணி தொடரைக் கைப்பற்றும் என்றும் சமநிலையில் போட்டி முடிவுற்றால் தொடரும் ஒன்றுக்கு ஒன்று என்று சமநிலையில் முடிவுறும் எனும் நிலையில் 69 வருடங்களாக முறியடிக்கப்படாது இருந்த அதிக எண்ணிக்கையான ஓட்டங்களை சேஸ்(தாண்டியது) செய்தது மட்டுமன்றி 32 வருடங்களாக ஹாபா மைதானம் எங்களது கோட்டை, யாரும் இந்த மைதானத்தில் ஆஸ்திரேலியாயாவை வெற்றிகொள்ள முடியாது என்ற ஆணவத்தை அடக்கி ஹாபா மைதானம் இனி இந்தியாவின் பேட்டை என்று நிரூபித்து காட்டியுள்ளது ரஹானே தலைமையிலான இளம் இந்திய அணி..!!

பார்டர் அலன் கவாஸ்கர் டெஸ்ட் தொடர் தொடங்குவதற்கு முதலும் சரி, போட்டி ஆரம்பித்து முதலாவது போட்டியில் இந்திய அணி படுதோல்வி அடைந்தபோதும் சரி வார்ன்,பொண்டிங்,வோர்கன் போன்ற முன்னாள் கிரிக்கட் ஜாம்பவான்கள் பலரும் சொன்ன விடயம் அணித்தலைவர் விராட் ஹோலி இல்லாத இந்த தொடர் முழுவதும் அவுஸ்திரேலியா அணி முழு ஆதிக்கத்தை செலுத்தும் என்றும் இந்திய அணி ஆஸி மண்ணில் வரலாறு காணாத தோல்வியை சந்திக்கும் என்றும் தெரிவித்தனர். அவர்களது இவ்வாறான கருத்துகளுடன் சேர்ந்து இந்திய அணியின் முக்கிய வீரர்கள் பலரும் காயம் காரணமாக தொடரை விட்டு வெளியே சென்றனர்.

அதன் பின்னர் தான் சிராஜ், சைனி, நடராஜன், வாஷிங்டன் சுந்தர், கில் என்று ஐந்து புதுமுக வீரர்களை டெஸ்ட் தொடருக்கு ரஹானே தலைமையில் அறிமுகம் செய்து போட்டி முழுவதுமாய் ஆதிக்கம் செலுத்தி கிரிக்கட் ஜாம்பவான்கள் தப்புக்கணக்கு போட்டுவிட்டனர் என்பதை நிரூபித்து அவர்களது கருத்துகளை தவிடுபொடியாக்கி இருக்கின்றனர் இளம் இந்திய வீரர்கள்.

அணித்தலைவர் விராட் ஹோலி இல்லாத இந்த தொடர் முழுவதும் அவுஸ்திரேலியா அணி முழு ஆதிக்கத்தை செலுத்தும் என்றும் இந்திய அணி ஆஸி மண்ணில் வரலாறு காணாத தோல்வியைச் சந்திக்கும் என்றும் ஆஸி. முன்னாள் வீரர்கள் தெரிவித்தனர்.

முதலாவது டெஸ்ட் போட்டியில் தோல்வி அடைந்த பிற்பாடு இரண்டாம் போட்டியில் அணித்தலைவர் ரஹானே அடித்த சதத்தில் இந்தியா வெற்றி பெற அந்தப் போட்டியே இந்தத் தொடரின் மிகப்பெரிய திருப்புமுனையாக அமைந்தது. "ராசியான ரஹானே" என்று சொல்லுமளவுக்கு, அவர் மேல்பேர்னில் பெற்றுக் கொடுத்த செஞ்சரி இந்த தொடரில் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தியதோ.. அதே போல இதுவரை ரஹானே தலைமையில் ஒரு போட்டியில்கூட இந்தியா தோல்வி அடையவில்லை. என்பதுதான் ராசியான ரஹானே என்று அவரை வினிக்கக் காரணம்.

ஹாபா மைதானத்தில் கடந்த 32 வருடங்களாக ஆஸ்திரேலியா அணியின் கைகளே ஓங்கி இருந்த நேரத்தில், முடிந்துள்ள இறுதி டெஸ்ட் போட்டியில் இரண்டு இன்னிங்ஸ்களிலும் மொத்தமாக ஆஸ்திரேலிய அணியின் இருபது விக்கெட்டுகளையும் அனுபவம் இல்லாத பந்து வீச்சாளர்களை வைத்து தகர்த்தெறிந்தது மட்டுமல்லாது, ரஹானே அவரின் சிறந்த தலைமைத்துவத்தின் மூலம் ஆட்டத்தின் முழுக்க முழுக்க தங்களது ஆதிக்கத்தை செலுத்தி வந்தார்.

ஐந்தாம் நாள் ஆட்டத்தில் 328 ஓட்டங்கள் தேவை என்றபோது ஆடுகளத்தின் பிளவு காரணமாக இந்த ஓட்ட எண்ணிக்கையை சேஸ் செய்வது (தாண்டுவது) வீரர்களுக்குக் கடினம் என்று தெரிவிக்கப்பட்டது. அதே நேரத்தில் ரோஹித் சர்மாவின் விக்கெட்டையும் ஆரம்பத்திலேயே இழந்து தடுமாறியபோது, சுப்மன் கில் தனது சிறப்பான துடுப்பாட்ட பங்களிப்பை கொடுத்துவிட்டு செல்ல, இந்திய அணியின் தூணாக நின்று ஆஸ்திரேலியா பந்து வீச்சாளர்களால் வாரி வழங்கப்பட்ட தாக்குதல்களையும், ஏற்பட்ட காயங்களுடன் சிறுக சிறுக குருவி இரையை சேர்ப்பது போல் ஓட்டங்களை சேர்த்துக்கொடுத்துவிட்டு புஜாரா ஆட்டமிழந்தவுடன் மயங்க் அஹர்வால் விக்கெட்டையும் இந்தியா பறிகொடுத்தது. இந்தியாவின் முன்னாள் அணித்தலைவர் கபில் தேவ் ஸ்டைலில் கம்மின்ஸ் பௌன்ஸரில் சிக்ஸர் அடித்த வாஷிங்டன் சுந்தர் அதிரடியாக துடுப்பெடுத்தாடி அணிக்கு நம்பிக்கையை சேர்த்து தன் கடமையைச் சரியாக செய்து ஆட்டமிழக்க,

(16ஆம் பக்கம் பார்க்க)

# புதிய கைத்தொழில் மைய நாடாக மாறுகிறதா இலங்கை...?

● வி.அருணாசலம்

தற்போதைய அரசு பதவிக்கு வந்த பின்னர் ஏற்றுமதியை அதிகரித்தல், இறக்குமதியைக் கட்டுப்படுத்தல், சுற்றுலாத்துறை, கைத்தொழில் உற்பத்திகள், ஏற்றுமதியை மையமாகக் கொண்ட விவசாய உற்பத்திகள் மற்றும் சேவைகளை வழங்குதல், கிராமிய பொருளாதார மேம்பாட்டுக்கான வசதிகளை ஏற்படுத்துதல் எனப் பல்வேறு வழிகளில் மாற்றம் கொண்டு வரப்படுகிறது.

இது **2005 - 2015**வரை மகிந்த தரப்பினரால் மேற்கொள்ளப்பட்ட ஆட்சி நிலமைகளுக்கு முற்று முழுதாக மாறுபட்டதாகும். மகிந்தவின் ஆட்சிக் காலத்தில் **2005 - 2009** வரை போரை முடிவுக்குக் கொண்டு வருவதிலும் இரண்டாவது காலப் பகுதியில் **(2010-2015)** போர் மீள் கட்டுமானத்திலும் அதிக கவனம் செலுத்தப்பட்டது. ஆனால் **2019** நவம்பரில் கோட்டாபய அதிபராகத் தெரிவு செய்யப்பட்ட பின்னர் தகவல் தொழில்நுட்பம், தனியார் முதலீடுகள், ஏற்றுமதி போன்ற விடயங்களில் அதிக கவனம் செலுத்தபட்டு வருகிறது.

**பாரம்பரிய விவசாயத்திலிருந்து மாறுகிறதா...?**

இலங்கையின் மொத்த உற்பத்தியில் விவசாயத் துறையின் பங்கு **7.8** வீதம் மட்டுமே. இலங்கையின் மொத்த சனத்தொகையில் **60** வீதத்துக்கு மேலான மக்கள் இந்த விவசாய முயற்சிகளில் ஈடுபடுகின்றனர். இந்த முயற்சிகளில் ஈடுபடுபவர்களில் பலர் பருவ காலப் பயிர்களைச் செய்பவர்களாக உள்ளனரே தவிர ஏதாவது ''வியாபாரத் திட்டங்களின்'' (பிஸ்னஸ் பிளான்) அடிப்படை யில் விவ சாயம் செய்பவர்கள் அல்லர். தங்களுக்கான



நாள் சம்பளத்தையோ, மாதச் சம்பளத்தையோ இவர்கள் அதில் உள்ளடக்குவதில்லை. பரம்பரை பரம்பரையாக இந்தத் தொழிலை மேற்கொண்டு வருகின்றனர். இதனால் இவர்களுக்கு வேறு தொழில் முறைகள் தெரிந்திருப்பதில்லை.

அதேவேளை வெள்ளம், வறட்சி, படைப்புழுக்களின் தாக்கம் போன்ற இடர்களில் இருந்து தப்புவதற்கான விவசாயக் காப்புறுதிகளைச் செலுத்துவதிலும் பெரும்பாலும் அக்கறை காட்டுவதில்லை. இதனால் இயற்கை இடர்களாலும் வேறு தாக்கங்களாலும் அதிகம் பாதிப்புக்குள்ளாகின்றனர். இவ்வாறான விவசாயிகளின் முயற்சிகளுக்கு வன விலங்குகளால் ஏற்படும் தொல்லைகளுக்கு (யானைகள்) அரசு புதிய தீர்வுகளைக் கொண்டு வர விருக்கிறது. அதேவேளை இந்த விவசாயிகளைப் புதிய விவசாய முயற்சிகளில் ஈடுபட வைப்பதற்கான திட்டங்களையும் வகுத்திருக்கிறது. இதில் தென்னை, தேக்கு, சந்தன மரங்கள் போன்ற நீண்ட காலப் பணப்பயிர்களை நாட்டு வதும் அந்தத் தோட்டங்களுக்குள் ஊடு பயிர்களை (நிலக்கடலை, அன்னாசி, மிளகு, கராம்பு, வெற்றிலை) சமகாலத்தில் மேற்கொள்வதற்கான புதிய ஏற்பாடுகளும் உள்ளன. நாடு முழுதும் இந்த விசேட வேலைத்திட்டத்துக்கான ஒரு லட்சம் விவசாயத் திட்டங்களை (வியாபாரத் திட்டத்தின் அடிப்படையில்) மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான பல புதிய திட்டங்களை ''கிராமத்துடன் உரையாடல்'' என்ற வேலைத்திட்டத்தின் கீழ் செயற்படுத்த ஆலோசிக்கப்பட்டுள்ளது. முதற்கட்டமாக நாட்டின் அதிபரே கிராமங்களுக்கு நேரில் சென்று கிராமங்களில் உள்ள பிரச்சினைகளை ஆராய்ந்து வருகிறார். இதில் போரால் அதிகம் பாதிப்புக்குள்ளாகிய சிங்களக் கிராமங்கள் மீது கூடுதல் கவனம் அளிக்கப்படுகிறது.

**தனியார் வேலை வாய்ப்புகளை அதிகரித்தல்,**

பொதுவாக இலங்கை மக்களின் கனவாக உள்ள அரச வேலை என்ற விருப்பத்தை மாற்றும் விடயங்களில் கவனம் செலுத்தப்படுகிறது. விவசாயம், மீன்பிடி போன்ற பாரம்பரியத் தொழில்களில் ஈடுபடும் குடும்பங்களில் இருந்து இதுவரை ஆடைத் தொழிற்சாலைகள் மற்றும் முப்படைகளுக்கே சிங்கள இளைஞர், யுவதிகள் அதிகம் சென்றனர். இந்த நிலை மாற்றப்பட்டுச் சுற்றுலாத்துறை, தகவல் தொழில்நுட்பத்துறை, ஏற்றுமதித்துறை எனப் பல துறைகள் உருவாக்கப்பட இருக்கின்றன. இதன்மூலம் தற்போது நடைபெறுகின்ற விவசாய முயற்சிகளுக்கு எதுவித பாதிப்பும் ஏற்படாத வகையில் அவர்களின் குடும்ப வருமானம் அதிகரிக்கப்படவிருக்கிறது.

**அபிவிருத்தியில் படையினர்**

புதிய கைத்தொழில் நாடுகளாக உருவெடுத்த தாய்வான், கொரியா, மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகள் **1960**களின் பின்பான காலப் பகுதியில் கைத்தொழில்துறையில் துரித வளர்ச்சி அடைவதற்கு படையினரை அபிவிருத்தியில் ஈடுபடுத்தியது முக்கிய காரணம் ஆகும். தற்போதைய அதிபர் பாதுகாப்புச் செயலாராகக் கடமை ஆற்றிய காலத்தில் கொழும்பு நகர அபிவிருத்தியிலும் சுத்தம் பேணுவதிலும் படையினரை அதிகம் பயன்படுத்தினார். படையினரில் பெரும்பாலானவர்களுக்கு சைக்கிள்கள் வழங்கப்பட்டு கொழும்பில் சுற்றுச் சூழலைப் பேணும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. **2019** அதிபர் தேர்தல் காலத்தில் "படையினரை மீண்டும் குப்பை அள்ளுவதற்குக் கோட்டாபய பயன்படுத்துவார் அவரைத் தேர்தலில் தோற்கடிக்க வேண்டும்'' என்று அவருக்கு எதிராகப் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா பரப்புரை செய்தார். கொவிட் **19** தொற்று விடயத்திலும் படைகள் செயற்பாட்டு வலையமைப்பே அதிக முக்கியத்துவம் பெற்றிருக்கிறது. இலங்கையின் **25** மாவட்டங்களுக்கும் மேஜர் ஜெனரல் தரத்திலுள்ள ஓய்வூதியம் பெற்ற **25** அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். இதன் மூலம் அரச துறையினரின் செயற்பாட்டை மட்டும் வைத்து நாட்டை முன்னேற்ற முடியாது என்றே அரச தலைவர் தீர்மானித்துள்ளார் என்று கொள்ளலாம். அரச திணைக்களங்களால் சமர்ப்பிக்கப்படும் புள்ளிவிவரங்களில் பல அடி மட்ட மக்களைச் சந்தித்து நேரடியாகப் பெறப்படுவதல்ல, அவை அலுவலகத்தில் இருந்தவாறு தொலைபேசியில் பெறப்படுகின்றவை, அவற்றை அடிப்படையாக வைத்து அபிவிருத்தியை முன்னெடுக்க முடியாது என்ற அதிபரின் முடிவு அரச ஊழியர்களுடன் பொலிஸ் மற்றும் முப்படையினரையும் சேர்த்து அனுப்பும் பொறிமுறை ஒன்றாக மாறியிருக்கிறது. இதில் அரசுக்குப் பொறுப்புக் கூறும் அலுவலர்களாக படையினரே இருப்பர்.

இதுபோன்ற ஒரு வழிமுறையையே விடுதலைப்புலிகள் தமது நிழல் நிர்வாகத்தில் மேற்கொண்டிருந்தார்கள். சு.ப. தமிழ்ச்செல்வனின் பொறுப்பில் **64** திணைக்களங்கள் இயங்கின. இவற்றில் துறைசார் அனுபவங்களுள்ள பலர் மாதாந்தச் சம்பளத்துக்குப் பணியாற்றினார்கள். ஆனால் அத்தனை துறைகளுக்கும் புலிகளின் நிரந்தரப் போராளி ஒருவர் பொறுப்பாளராகவும் பொறுப்புக் கூறும் நபராகவும் நியமிக்கப்பட்டிருந்தார்.



**ஒல்லாந்தரைப்போல விவசாய முயற்சிகள்**

இலங்கையில் ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்திலேயே ஏற்றுமதி வர்த்தகம் அதிகரித்தது. நாடு முழுதும் கால்வாய்கள் வெட்டப்பட்டு நீர் வழிப்போக்குவரத்து மேற்கொள்ளப்பட்டது. எந்த நிலத்தில் எத்தகைய பயிர்களை நாட்ட முடியும் என்பதைக் கண்டறிந்ததுடன் இலங்கையில் நில அளவையை மேற்கொண்டவர்களும் ஒல்லாந்தர்களே.

> **"இலங்கை மக்களின் கனவாக உள்ள அரச வேலை என்ற விருப்பத்தை மாற்றும் விடயங்கள் என்பவற்றில் கவனம் செலுத்தப்படுகிறது."**

பருத்தி, புகையிலை, கற்றாழை, முருங்கை, வாழை போன்ற பயிர்களை வேறு நாடுகளில் இருந்து கொண்டுவந்து இலங்கையில் உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்தனர். பருத்திப் பஞ்சு ஏற்றப்பட்ட துறைமுகம் பருத்தித்துறை எனப்பட்டது. யானைகள் ஏற்றுமதி செய்த இடம் ஆணையிறவு ஆனது. இத்தகைய ஏற்றுமதிக்கான விவசாயப் பொருள் உற்பத்தி மற்றும் ஏற்றுமதியில் புதிய அரசு அதிக கவனம் செலுத்தி வருகிறது. இது ஒல்லாந்தர் காலத்தை ஒத்தது ஆகும்.

இந்த ஏற்றுமதி வர்த்தகத்தில் மிளகு, அன்னாசி, வெற்றிலை, கராம்பு, கற்றாழை, கஞ்சா (கஞ்சா உற்பத்தியைச் சட்டபூர்வமாக்கி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் நடவடிக்கை

(15ஆம் பக்கம் பார்க்க)

# நிலவைப் பார்த்து வானம் சொன்னது... 7

எழுத்தாளர்
மு.சிவநேசன்
எழுதும் தொடர்



அதிஷ்டலாபச் சீட்டை கொள்வனவு செய்வதில் பலரும் ஆர்வமாக இருப்பது நாங்கள் தினம் தினம் காணும் காட்சியே. இதில் பலருக்கும் சந்திப்பது ஏமாற்றமே. பலரிடம் ஏமாற்றப்பட்ட இப் பணத்தில் ஒரு பகுதியே பரிசாக அறிவிக்கப்படுகின்றது.

கடந்த மார்கழி (டிசெம்பர்) 11ஆம் திகதி இடம்பெற்ற யூறோ சீட்டிழுப்பில் பிரரான்ஸில் வதியும் ஒருவருக்கு இருநூறு மில்லியன் யூரோக்கள் பரிசுத்தொகை அறிவிக்கப்பட்டுள்ளது.

வழமையாக பரிசினை வென்றவர்கள் பிரபல்யமாகி விடுவதுண்டு. அவர்களின் பேட்டிகள், இலட்சியங்கள், படங்கள் என்று பத்திரிகைகள் அமர்க்களம் பண்ணிவிடும். அவர்களது பேட்டிகளும் பெருமை பேசல்களும் தாங்க முடிவதில்லை.

இங்கே பரிசினை வென்றவரின் சீட்டு இலக்கம் அறிவிக்கப்பட்ட நிலையில் அவர் தன்னை அடையாளம் காட்டச் சம்மதிக்கவில்லை. அவரது எளிமை மற்றும் பாதுகாப்பு காரணங்களுக்காக அவர் தன்னை வெளிப்படுத்தவில்லை.

தான் தொடர்ந்தும் வழமையான வாழ்க்கை முறையையே பெரும்பாலும் தொடரப் போகிறார் எனவும், அதில் பெரும் மாற்றங்கள் இருக்காது என்றும் தெரிவித்த அவர், மற்றவர்களைப் போல பணம் கிடைத்தவுடன் உல்லாசமாக உலகத்தை சுற்றி வரவும், ஊதாரிச் செலவுகள் செய்யவும் தயாரில்லை.

தனது பரிசுத் தொகையின் பெரும்பகுதி இன்றைய இக்கட்டான சூழ்நிலையில் மருத்துவ துறையினது மேம்பாட்டுக்காகச் செலவிடப்படும் என்றுவிட்டார்.

அதன் பயனாக தன்னைச் சூழ மகிழ்ச்சியாக இருக்கவேண்டிய முகங்களை பார்க்க வேண்டுமென தான் கனவு காண்கிறார் எனக் குறிப்பிடும் அந்த பெருந்தன்மையை உலகம் வியந்து நிற்கின்றது.

சென்ற கிறிஸ்மஸ் புத்தாண்டுக் கொண்டாட்டங்களைவிட இம்முறை ஏதும் விசேடமான உணவு வகைகூட தனது வீட்டில் இருக்காதாம்.

இப்படிப்பட்ட சிறந்த மனிதர்களைக் கொண்டுள்ள இந்த உலகத்தின் இன்றைய அவஸ்தைகள் விடுபட்டாக வேண்டுமெனில் ஒவ்வொருவரும் சமூகப் பொறுப்புடனும் தமது பாதுகாப்பு பற்றிய அக்கறையுடனும் வாழப் பழகியாக வேண்டும்.

எங்களை நாங்கள் கொஞ்சமேனும் அர்ப்பணிக்க, நடைமுறைகளை சற்று சிரமப்பட்டு மாறத் தயாரா என்பதே கேள்வி.

மாறாக வைத்தியர்களை தாக்கும் பதிவுகள், வைத்தியசாலை கண்ணாடிகளை நொருக்குதல், தவறான விமர்சனங்கள், தப்பியோடும் அளவிற்கு பொறுப்பற்ற நோயாளிகள் என்று நிலமைகள் மோசமடையவே செய்கின்றன.

○ ○ ○

67 வயதில் நினைத்தால் வீட்டில் போய் நிம்மதியாக இருக்கலாம் என்கின்ற நிலைமையிலும் கொரோனா நோயாளிகளை மீட்பதில் ஓய்வு ஒழிச்சல் இன்றி தீவிரமாக இருக்கிறார் இத்தாலிய புற்றுநோயியல் வைத்தியர் லியூஜி கவன்னா, பியசென்ஸா நகர வைத்தியசாலையில். தொடக்கத்திலேயே நோய் நிலமை தீவிரமாக இருந்ததாம் கடந்த பங்குனி (மார்ச்) மாதத்தில்.

> நோயாளிக்கு ஆபத்தான சூழ்நிலை உருவாக இடம் கொடாத அர்ப்பணிப்பு மிக்க சேவையை வைத்தியர்கள் வழங்கப் போதிய கால அவகாசத்தை இந்த நோய் கொண்டுள்ளதே போதுமானது.

பலரை வைத்திய சிகிச்சைக்காக சேர்ப்பதில் சிக்கலான இடப் பிரச்சினை, திடீரென தேவைப்படும் அதிக வசதிகள், வீடுகளில் தமது சொந்தச் சூழலில் தங்க விரும்பும் பெருமளவு நோயாளர்கள், அவர்களுக்கான உச்சக்கட்ட கண்காணிப்பு, சுய பாதுகாப்புக்காக சிரமமான அங்கிகள் என்று தாங்கள் பட்ட அவஸ்தைகளை அடுக்கிக் கொண்டே போகிறார் அவர்.

இப்பொழுது தாங்கள் இத்தகைய சூழ்நிலைக்கேற்ப தங்களைத் தயாராக வைத்திருக்க பழகிவிட்டதாகவும் குறிப்பிடுகிறார். சலிக்காது வீடுகளிலும் வைத்தியசாலைகளிலும் நோய்வாய்ப்படும் ஒவ்வொருவரையும் திருப்திப்படுத்தத் தேவையான உளவள அணுகுமுறைகள் அவர்களிடம். இதற்கு மிகவும் அர்ப்பணிப்பே அவசியமாகின்றது.

ஒரு ஆறுதலான விடயம் என்று அவர் குறிப்பிடுவது தொற்று ஏற்பட்டவுடன் நிலமை மோசமடைவதில்லை. நோயாளியின் நோய் நிலமையை கட்டுப்படுத்த அவர்களின் ஒத்துழைப்புடன் போதிய கால அவகாசம் கிடைக்கின்றது. தொடக்கத்திலேயே ஆளை முடித்துவிட இது ஒன்றும் மாரடைப்பு கிடையாது என நிம்மதிப் பெருமூச்சு விடுகிறார் அவர்.

நுரையீரல் கண்காணிப்பு அவசியமான ஒன்று, தீவிர நிலைக்கு வர முன்பே நோயை கட்டுப்படுத்த பெரும்பாலும் முடிகிறது என்கிறார்.

இவ்வாறான சாதகமான (பொசிட்டிவ்) சிந்தனைகள் இந்த வேளையில் களப் பணியாளருக்கு அவசியமான ஒன்று. நோயாளிக்கு ஆபத்தான சூழ்நிலை உருவாக இடம் கொடாத அர்ப்பணிப்பு மிக்க சேவையை வைத்தியர்கள் வழங்கப் போதிய கால அவகாசத்தை இந்த நோய் கொண்டுள்ளதே போதுமானது.


தொடக்ககால அனுபவங்களை வைத்து திட்டமிட்டு பாதுகாப்பாகவும், குழுக்களாகவும் இயங்கி வருவது இப்பொழுது நோயாளர் எண்ணிக்கை கணிசமாக உயரும்போதும் சுலபமாகிவிட்டது என்கிறார்.

அவர்களது அனுபவப்படி HCQS எனப்படுகின்ற ஹைட்றோகுளோறோகுயினின் மருந்தே அதிகம் முதலில் பயன்படுத்தப்படுகின்றது. அத்தோடு நிலமையின் தீவிரத்தை பொறுத்து ஒரு ஆன்டிபயோட்டிக் பாவனை என்கின்ற போதும் அதன் எதிர்விளைவுகள் ஆபத்தானவை என்பதால் தீவிரமாகக் கண்காணிக்க வேண்டிய இக்கட்டான நிலைமை என்கிறார் சலிப்பின்றி. எனவே நோய் அறிகுறிகள் கண்டவர்கள் தம்மை வெளிப்படுத்தி சரியான கண்காணிப்புடனான சிகிச்சை முறைகளுக்கு ஒத்துழைத்தாக வேண்டுமே தவிர, தமக்குத் தாமே சிகிச்சை அளிக்க முயலக் கூடாது.

ஒட்சிசன் சிலின்டர்கள், வாயு முகமூடிகள், என்பன தயாராக வைத்திருக்க வேண்டியதுடன் இவற்றுக்கான பலமட்ட ஒத்துழைப்புக்களையும் முகாமை செய்தாக வேண்டுமென்கிறார். தவிர நோயாளிகளின் குடும்பங்களோடு தொடர்பிலும் கண்காணிப்பிலும் தாங்கள் கொண்டுள்ள கரிசனை மிகவும் முக்கியமான ஒன்று என்கிறார்.

எனவே தேவைப்படுவதெல்லாம் பெருமளவில் இணைந்து துணிந்து செயலாற்றத்தக்க தொண்டர்களும், நன்கொடையாளர்கள், மற்றும் தொண்டு நிறுவன உதவிகளுமே தவிர உபத்திரவங்கள், இடைஞ்சல்கள், விமர்சனங்கள், மயிர் பிடுங்கல்கள் அல்ல.





# நண்பனின் வீடு எங்கே?


அப்பாஸ் கியரோஸ்டாமி என்கிற ஈரானிய இயக்குநரின் மிகச் சிறந்த படம் என்று கொண்டாடப் படுவதே வினாக் குறியுடன் முடிவடைகின்ற "நண்பனின் வீடு எங்கே?" என்கிற இந்தப் படம்.

**1987**ஆம் ஆண்டில் வெளியாகியது. நாடகப் பாணியிலமைந்த இந்தத் திரைப்படத்தின் முதன்மைப் பாத்திரம் அகமது. அந்தப் பாத்திரத்தில் நடித்தவர் பாபக் அஹமத்பூர்.

**1989**ஆம் ஆண்டில் லோகார்னோ திரைப்பட விழாவில் வெண்கலச் சிறுத்தை என்கிற விருதை வென்றது. ஃபஜ்ர் திரைப்பட விழாவில் கோல்டன் பிளேட் என்கிற விருதை வென்றது. அத்தோடு உலகளவில் கியரோஸ்டாமி என்கிற ஈரானிய இயக்குநரைப் பேச வைத்த படமும்கூட.

எட்டு வயதுடைய சிறுவன் அகமது. அவன் நண்பனின் பாடக் கொப்பியைத் தவறுதலாகத் தனது பைக்குள் எடுத்து வைத்து வீட்டுக்குக் கொண்டு சென்றுவிடுகிறான். அதை அவன் தனது நண்பனிடமே திரும்பக் கொடுப்பதுதான் படம்.

இந்தக் கதை மூலம் குழந்தைத் தன்மையையும், குழந்தைகளில் குடிகொண்டிருக்கின்ற மிச்சசொச்ச மனிதத்துவத்தின் அழகையும் வெளிப்படுத்துகிறது படம்.



**கதை**

கிராமப்புறப் பாடசாலையில் குழந்தைகளின் கூச்சல் சத்தங்கள் நிறைந்திருக்கின்றன. மிகவும் கண்டிப்பான ஆசிரியர் ஒருவர் வகுப்புக்குள் நுழைகிறார். குழந்தைகள் அவரவர் இடத்தில் அமைதியடைகிறார்கள்.

இங்குள்ள பாடசாலைகளைப்போல ஒழுக்கம், வீட்டுப்பாடம் ஆகியவை மட்டும்தான் கல்வி என்றொரு நம்பிக்கையை வலுவாகக் கொண்ட வழக்கமான பாடசாலைதான் அதுவும். ஆனால், இந்த நடைமுறைக்கு மாறாக முகமது ரெசா என்கிற சிறுவன் வீட்டுப் பாடம் செய்யாமல் வந்திருக்கிறான். அவனுடைய வீட்டுப்பாடக் கொப்பியை ஆசிரியர் கேட்கிறார். அழுதவாறே எழுந்து நிற்கிறான் அவன். தனது ஒன்றுவிட்ட சகோதரர்களின் வீட்டில் தனது வீட்டுப்பாடக் கொப்பியை மறந்து வைத்துவிட்டு வந்ததாகக் கூறுகிறான்.

அதைக் கேட்ட ஆசிரியர் ஆத்திரமடைகிறார். நாளைக்கு வீட்டுப்பாடம் செய்யாமல் வந்தால், பாடசாலையை விட்டுத் துரத்திவிடுவேன் என்று அவனுக்கு எச்சரிக்கிறார்.

அதே வகுப்பிலிருக்கிற சக நண்பன் அகமது, இதையெல்லாம் அமைதியாகப் பார்த்துக் கொண்டிருக்கிறான். பாடசாலை முடிந்து அகமது வீடு திரும்பிய பின் வீட்டுப்பாடம் செய்வதற்காகத் தனது கொப்பியை எடுக்கிறான். அப்போது முகமது ரெசாவின் வீட்டுப்பாடக் கொப்பி தனது பைக்குள் இருப்பதைக் காண்கிறான். தவறுதலாக அதை எடுத்து வந்துவிட்டதை உணர்கிறான்.

அதை ரெசாவிடம் கொடுத்தால்தான், மறுநாள் அவனை ஆசிரியரிடமிருந்து காப்பாற்றிக் கொள்ள முடியும். தனது அம்மாவுக்கு விடயத்தைச் சொல்கிறான். அவள் அகமது சொல்வதைக் கணக்கில் எடுக்கவில்லை. ரெசாவிடம் கொண்டு சென்று கொடுப்பதற்கு அவனது வீடும் அகமதுக்குத் தெரியாது.

அவன் போஷ்டே என்ற கிராமத்தில் வசிக்கிறான் என்பது மட்டும் தெரியும். ரொட்டி வாங்குவதற்காக அகமதுவை அவனுடைய அம்மா வெளியே அனுப்ப இதுதான் தருணமென்று நண்பனின் கொப்பியை எடுத்துக் கொண்டு போஷ்டே கிராமத்தை நோக்கிப் போகிறான். அந்தக் கிராமத்தின் சிறிய சரிவான ஒழுங்கைகள் வழியே ரெசாவின் வீட்டைத் தேடி ஓடிக்கொண்டே இருக்கிறான் அகமது. அப்போது சந்திக்கின்ற அவனுடைய வகுப்பு நண்பன் ஒருவன், போஷ்டேயின் கானேவர் என்கிற பகுதியில் ரெசா வசிக்கிறான் எனக் கூறுகிறான்.

> “ மீண்டும் போஷ்டேவுக்கே ஓடுகிறான். இப் போது இருள் சூழ்ந்துவிடுகிறது. நாய்கள் குரைக்கின்றன. ஆனாலும் அகமது பதை பதைப்புடன் ரெசாவைத் தேடுகிறான். ”

கானேவர் பகுதியை அடைந்த பின்னரும்கூட அகமதுவால் ரெசாவின் வீட்டைக் கண்டறிய முடியவில்லை. அந்தப் பகுதி வீதிகள் முழுதும் அலைந்து பலரிடம் விசாரித்த பிறகு, ரெசாவும் அவனுடைய அப்பாவும் கோகர் கிராமத்துக்கு அப்போதுதான் புறப்பட்டுப் போயினர் என்று தெரியவருகிறது. கோகர் என்பது அகமது வசிக்கும் கிராமம். அங்கிருந்துதான் அவன் இங்கே தேடி வந்திருக்கிறான். சரி என்றுவிட்டு மீண்டும் தனது ஊருக்கே ஓடுகிறான். அங்கு சென்ற பிறகுதான் அவர்கள் குறிப்பிட்ட பெயர் வேறெரு ரெசா என்று அகமதுவுக்குத் தெரியவருகிறது.

மீண்டும் போஷ்டேவுக்கே ஓடுகிறான். இப்போது இருள் சூழ்ந்துவிடுகிறது. நாய்கள் குரைக்கின்றன. ஆனாலும் அகமது பதை பதைப்புடன் ரெசாவைத் தேடுகிறான். கடைசிவரை ரெசாவின் வீட்டை அவனால் கண்டறிய முடியவில்லை. களைத்துப்போய் வீடு திரும்புகிறான். அவனுடைய மனதில் குற்ற உணர்வு குடிகொண்டிருக்கிறது.




மறுநாள் பாடசாலை தொடங்குகிறது. வகுப்பில் வீட்டுப்பாடங்களை ஒவ்வொருவரும் செய்திருக்கிறார்களா என்று ஆசிரியர் பார்த்துக் கொண்டிருக்கிறார். பாடசாலையிலிருந்து வெளியேற்றப்படுவதற்குத் தயாராக, நம்பிக்கையிழந்த நிலையில் ரெசா இருக்கிறான். சற்று நேரம் தாழ்த்தி வகுப்புக்குள் வருகிறான் அகமது. தன்னுடைய வீட்டுப்பாடத்துடன், ரெசாவின் கொப்பியிலும் வீட்டுப்பாடத்தைச் செய்திருக்கிறான். அதை ரெசாவிடம் கொடுக்கிறான். ரெசாவிடம் அதை வாங்கிப் பார்க்கும் ஆசிரியர், அவனைப் பேசாமல் விட்டுவிடுகிறார். அந்தக் கொப்பிக்குள் ரெசாவுக்காக அகமது வைத்த பூ ஒன்றும் இருக்கிறது.

**குழந்தைகளைக் கவனத்தில் கொள்ளாமை**

அகமது தனது நண்பன் ரெசாவின் வீட்டைத் தேடிச் செல்லும்போது, பல பெரியவர்களை எதிர்கொள்கிறான். அவர்கள் அவனுக்கு உதவவில்லை. அல்லது இருவருக்கும் இடையிலான தொடர்பு கொள்ளலில் நிகழும் புரிதலின்மையால் அந்தத் தொடர்பாடல் குழப்பத்தில் சென்று முடிகிறது.

படம் முழுக்கப் பெரியவர்கள், குழந்தைகளுக்குக் கட்டளைகள், வேலைகள் போன்றவற்றைப் பிறப்பித்துக்கொண்டே இருக்கிறார்கள். இவை எல்லாவற்றுக்கும் இடையில் குழந்தைகள் கீழ்ப்படிய வேண்டியது அவசியம் என்றொரு கருத்து திரும்பத் திரும்பப் பல கதாபாத்திரங்களால் வலியுறுத்தப்படுகிறது. அதிகாரத்துக்குக் கீழ்ப்படிய வேண்டும், அரசுக்குக் கீழ்ப்படிய வேண்டும், மதத்துக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்று வலியுறுத்தப்படுவதன் தொடர்ச்சியை இத்துடன் பொருத்திப் பார்க்கலாம்.

அடுத்தவர் வலியை உணரும் ஒத்த உணர்வு, குழந்தைத் தன்மையைப் புரிந்து கொள்ளுதல் ஆகிய அம்சங்களை இந்தப் படம் ஆழமாக விவரிக்கிறது. குழந்தைகளை நாம் எவ்வளவு தூரம் புரிந்துகொண்டிருக்கிறோம் என்ற கேள்வியை இந்தப் படம் எழுப்புகிறது. சக மனிதர் மீதான கரிசனை, தன்னலமற்றதன்மை ஆகியவையே இந்த உலகை நகர்த்திச் செல்பவை என்பதை இந்தப் படமும் இடித்துரைக்கிறது.



# வெளியிலை சொல்லலாமோ?

■ கதிரேசன் காத்தவராயன்

அதிலையொருக்காச் சுப்பிரமணியம் மாஸ்ரர் வீட்டடிக்குப் போனன். உலகம் அடிபட்ட மனிசன். கதை பேச்சிலை எப்பவும் ஒரு ஞாயம் இருக்கும். பிழையெண்டு கண்டால் லேசிலை சும்மா விட மாட்டார். எனி என்னை உன்னைப்போலை கதை காவுகிற குணமும் இல்லை. எதையும் நம்பிக் கதைக்கக் கூடிய ஆள். வழக்கமாய் நல்ல கலகலப்பாய் இருக்கிற ஆள் இண்டைக்கு கொஞ்சம் கடுகடுப்போடை இருக்கிறார்? என்னவாயிருக்கும் எண்டு யோசிச்சுக்கொண்டு போயிருந்தன்.

"என்ன கதிரேசு கண்டு கனகாலம்?"

"எண்டார் மாஸ்டர்! ஒரு பதினைஞ்சிருவது நாள்தானே? கனக்க எண்டுறியள்!" எண்டபடி அவருக்கு முன்னாலை இருந்துகொண்டன்.

கதைக் குரலுக்கு அவற்றை பெடியன் சுதனும் வந்தான். அவனொரு பட்டதாரி வாத்தி. தேப்பனை உரிச்சுப் படைச்ச மாதிரி.. அறிவு... குணம் எல்லாம்.

"உங்கடை மருமேளின்ரை றான்சரலுவல் என்னவாம்? அப்பீலை கான்சல் பண்ணியாச் செண்டு அறிஞ்சன்?" எண்டு கேட்டபடி அவனும் இருக்க சம்பரும் துரையரும் வந்தினம்.

"ஓமோம் தம்பி..! நான் முதலிலையே சொன்னனான், சும்மா மினைக்கெடாம போறவழியைப் பாரெண்டு! கேட்டாத்தானே? சட்டம் ஒழுங்கு முறையள் தெரிஞ்ச இடங்களிலைதானே தம்பி உதுகளை எதிர்பாக்கலாம்? எனி என்ன வெளி மாவட்டத்துக்கே போகச் சொன்னவங்கள்? பக்கத்தி ஊர்தானே? ஆனாலென்ன! இவள் பிள்ளை போக வேண்டின பள்ளிக்கூடத்துக்கு டிப்பாட்மென்றிலை இருக்கிற ஆளொராளின்ரை மச்சாள்காறியைப் போட்டதாலைதான் குழப்பமாம். இது கௌரவப் பிரச்சினை. வேறை ஒண்டுமில்லை" எண்டு சொல்லி நிப்பாட்டினன்.

"அது சரிதான்... போக விருப்பத்தோடை மனாரிலை பள்ளிக்கூடமும் போட்டுக்கொண்டு வந்த என்ரை மருமேனைப் போக விடுகிறாங்கள் இல்லையாம்.. என்ன கோதாரியாக் கிடக்குது, விரும்புறவனை மறிக்கிறாங்கள்... விரும்பாதவனைப் போ எண்டு கலைக்கிறாங்கள்... என்ன மாஸரர் உதுகளொண்டும் விளங்குதில்லை?" எண்டு கேட்டார் தம்பர்.

"ம்... ம்ம்.. உதுகளைத்தான் கதைச்சுக் கொண்டிருந்தனாங்கள்... ஒரு வருசத்துக்கான ஒரே இடமாற்றத்தை மூண்டு தரம் செய்யப் போறாங்களாம். ஜனவறி ஒண்டு கடமையேற்கிறது பெப்ரவறி இருவத்தெட்டிலை கடமையேற்கிறது ஓகஸ்ற் கடைசியிலை கடமையேற்கிறதெண்டு முடிவாம். பிறின்சுப்பல்மார் ரைம்ரேபிள் போடுறதுக்குப் படுகிறபாட்டை விட்டாலும் பிள்ளையளின்ரை படிப்பல்லே சீரழியுது?" பெருமூச்சொண்டோடை மாஸ்ரர் நிப்பாட்டினார்.

> ❝ ஓஎல்லுக்குப் படிப்பிக்கிறவை பெப்ரவரி வரைக்கும் மீட்டல் செய்யவும் ஏஎல்லுக்குப் படிப்பிக்கிறவை ஓகஸ்ற் வரைக்கும் படிப்பிக்கிறதுக் காயாமல்லே ❞

"அது மாஸ்ரர்! ஓஎல்லுக்குப் படிப்பிக்கிறவை பெப்ரவறி வரைக்கும் மீட்டல் செய்யவும் ஏஎல்லுக்குப் படிப்பிக்கிறவை ஓகஸ்ற் வரைக்கும் படிப்பிக்கிறதுக்காயாமல்லே அப்பிடி எண்ணீனம்..."

"அப்பிடியெண்டால் அவை அந்த சோதினை வகுப்புகளுக்கு மட்டுமே படிப்பிக்கினம்? நல்லாப் புலடாவிடப் பழகியிருக்கிறாங்கள் என்ன?" எண்டு துரையர் சொல்லிக்கொண்டிருக்க நான் குறுக்கை நுழைஞ்சு "பாடத்துக்குப் பாடம் பொருத்தமான பதிலாக்களை நியமிக்க முடியேல்லை எண்டதிலை தெளிவாயிருக்கிறாங்கள்போலை? பாடத்துக்குப் பாடம் பொருத்தமாய் மாத்தினால் போறவர் விட்ட மிச்சம் மீதியைப் படிப்பிக்கிறதுதானே முறை?" எண்டன்.

"கதிரேசங்கிள் உதுகள் விளங்கின ஆக்கள் டிப்பாட்மென்ருகளிலை இல்லை எண்டதுதான் பிரச்சனையே. குடுத்த கடனை வசூலிச்சு முடியும் மட்டும் இடமாற்றம் இல்லையெண்டால் வங்கியளிலை வேலை செய்யிறவைக்கு பென்சனிலை கூட வீட்டை போறது முடியாமலுக்கல்லே போகிடும். அங்கை ஐஞ்சு வரிசமெண்டால் அத்த இடம்தான். மாற்றமேயில்லை. மற்றமற்ற திணைக்களங்களிலை எல்லாம் இடமாற்றமெண்டுறது சுவிச்சைப் போட்டமாதிரி நடக்குது. எங்கடையாக்கள்தான் படிச்ச ஆக்கள் படிப்பிக்கிற ஆக்கள் எண்டு சொல்லிக்கொண்டு திரியிறதோடை சரி" எண்டான் சுதன்.

"அதுக்குச் சொல்லுகிற காரணமிருகல்லே அதைத்தான் கவனிக்கவேணும். மற்ற இடங்களிலை பேப்பரோடையும் பைலோடையும் நிண்டிடும். நாங்கள் உயிருள்ள சீவனுகளோடையல்லே பிளங்குறம்? அதையும் இதையும் ஒப்பிடேலுமே?" மாஸ்ரர் சொல்லிப்போட்டுச் சிரிச்சதுக்குள்ள நிறையக் கிடக்கிற மாதிரிக் கிடக்குது.

"அப்ப டாக்குத்தர்மார் நேர்ஸ்மார் என்னவாம்? சும்மா போங்கோப்பா. பகலிலையே பசு மாட்டைத் தெரியாதவன் இரவிலை எருமை மாட்டைப் பிடிப்பானாம்?" எண்டபடி வந்து சேந்திட்டன்.


உங்களுக்கான விடுமுறை வீடு ஒன்றை கட்டுவதற்கு
2 பரப்பு, 3 பரப்பு, 4 பரப்பு, 8 பரப்பு காணிகள்




நாவற்குழி நகரில்...!

யாழ் நகரில் இருந்து 12.9km

A9 இல் இருந்து 3.9km A32 இல் இருந்து 1.2km

நெய்தல் கடற்கரை நகர்

Neithal Beach City

Conference Hall · Restaurant · Boating

Beach Volleyball · Fishing · Children Park

Archery Club · BBQ Corner · Indoor Games



தொடர்புகளுக்கு: 077 743 5557

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்

● பேர் அறிஞன்

# வளமிகு வாழ்விற்கான வழிகாட்டலின் நிலை…?

சிந்தனையில் மாற்றத்தை அடைவதுதான் மாற்றத்திற்கான முதற்படியாக அமைய முடியும். சிந்தனை மாற்றமென்பது தானாக, தன்னியல்பாக அடைய வேண்டிதொன்றுதான் எனினும் அதற்கான விதைகள் தூவப்படல் வேண்டும். பின்னர் சரியான திசை நோக்கியதாக வழிப்படுத்தப்படல் வேண்டும்.

நான் அறிந்துகொண்டதை நீயும் அறிந்துகொள், என்னையே பின்பற்று எனக் கூறுவது ஆலோசனை அல்லது வழிகாட்டல் அல்ல. அது செலுத்துதல் அல்லது மேய்த்தல் எனவே கொள்ளப்படவேண்டியதொன்று.

நாம் இந்த தொடக்க அறிவையாவது கவனத்தில் கொண்டுதான் திட்டங்களை வகுக்கின்றோமா? நடைமுறைப்படுத்துகின்றோமா?

தனது பட்டறிவு பொது அறிவு மற்றும் கண்டும் கேட்டும் ஈடுபட்டும் பெற்றுக்கொண்ட அறிவுகளின் வழி தவறுகளைத் திருத்திக்கொள்ளவோ, தனது செல்வழியைத் தனக்கும் பிறருக்கும் பயனுள்ளதாக, பிறருக்கு இடையூறின்றியதாக அமைத்தல் தொடர்பாக உலக மாற்றங்களுக்குள்ளாகத் தனக்கான அடையாளத்தைப் பேணியவாறு ஏற்படுத்தும் முயற்சியையோ அல்லது முயற்சிக்கான முன்னாயத்தத்தையோ சிந்தனை எனலாமா? அப்படித்தானெனின் அதற்கான ஊக்கவிசை எப்படியானதாக இருத்தல் வேண்டும்?

முன்பகுதிகளில் வலியுறுத்திய சுய வினாக்களுக்கூடான சுயபரிசோதனை எனும் ஒரு விடயம் சிந்தனை மற்றும் சிந்தனை மாற்றத்துக்கான வழிகளைத் திறக்கும் திறவுகோலாக அமையலாம் என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும். இது சடங்குகள் சார்ந்தும் பண்பாடுகள் சார்ந்தும் அவசியமானது. அடுத்து எமது செயல்கள் ஒவ்வொன்றும் சார்ந்ததாக இருத்தல் வேண்டும்.

இவ்வாறான விடயங்களில் எமது பங்கு பணி பற்றிய வினாக்கள் நாம் எங்கே நிற்கின்றோம்? என்ன செய்கின்றோம்? அதனால் அடைவது என்ன? போன்ற அடிப்படையில் முக்காலத்துக்கும் எழுப்பப்படுமாயின் எமது அந்தர நிலையை அடையாளங்காண முடியுமாக இருக்கும்.

நான் - சூழல் - சமூகம் - உலகம் எனும் வெவ்வேறு புள்ளிகளில் எனது நிலை என்ன? நான் எங்கே இருக்கிறேன்? எங்கே செல்லப்போகிறேன்? எதுவாகப்போகிறேன்? போன்ற தொடர் வினாக்கள் என்னுள் எழுப்பப்படுவதுடன் ஒவ்வொரு தொகுதியிலிருந்துமான மாதிரிகளுடன் ஒப்பிடப்படுவதும் சிந்தனை மாற்றத்துக்கு உதவலாம் எனும் நோக்கில் ஒருவனை வழிப்படுத்த வேண்டியுள்ளது.

16

நாம் (சமூகம்) அதிலொரு பகுதியை மட்டுமே செய்துகொண்டிருக்கிறோம். அவன் முன்னேற முடியுமானால் உன்னாலும் முடியும். அவன் இப்படியாகத்தான் அந்த நிலையை அடைந்தான். நீயும் முயற்சிசெய் எனும் ஒரு விடயம் தான் அது.

இங்கு செலுத்துதல் என்பதற்கப்பால் குறிப்பிடும்படி ஒன்றுமே இல்லை. அவனுக்கும் இவனுக்கும் இடையிலுள்ள உள உடல் வேறுபாடுகளோ சமூகக் காரணிகளோ சூழலின் வேறுபாடுகளோ கொஞ்சமேனும் கவனிக்கப்படுவதில்லை. கவனிக்கப்படுமானால் காரணிகளின் வேறுபாடுகளை இல்லாது செய்தல் அல்லது இயலுமானரை குறைத்தல் என்பதை நோக்கியதாக சிந்திக்க முடியும்.

இவையெல்லாம் ஒரு தனியனில் செல்வாக்குச் செலுத்துகின்றன என்பதை ஏற்றுக்கொள்வதுகூட சிந்தனை மாற்றத்துக்கான ஒரு வழியாக பார்க்க வேண்டிய நிலையே எம்முன் உள்ளது.

ஏற்கனவே கூறியது போல கோட்பாடுகள் வரைவிலக்கணங்கள் போன்றவற்றை நம்பியே எமது செயலொழுங்கு வரையப்பட்டிருக்கிறது. அதன் வழியேதான் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. இச் செயலொழுங்கானது மாற்றப்படல் வேண்டும். உளம் சார்ந்தோ உடல் சார்ந்தோ பௌதீகச் சூழல் சார்ந்தோ ஆளமான ஆய்வுகளை நோக்கி நகரவேண்டும். ஏற்கனவே முடிவான விடயங்களை வாய்ப்புப் பார்த்தல் அது சரிதானென நிறுவுதல் போன்ற பயனற்ற விடயங்களில் காலத்தைக் கடத்துவதிலிருந்து விடுபட வேண்டும்.

விடுபடுதலுக்கான ஒரு வழியாக முதலில் செய்யக் கூடியது எழுத்துத் தேர்வுகளுக்குப் பதிலாக ஆய்வுகள் செயன் முறைகளுக்கான வாய்ப்புகளை ஏற்படுத்துதல். மேலும் புத்தாக்கங்களுக்கு அதிக முன்னுரிமையளித்து அதனூடாகத் தொழில் வாய்ப்புகள், பதவியுயர்வுகள் வழங்கப்படலாம். இவை புதியன நோக்கிய நகர்வை முன்னுந்தும். இங்கு புதியன என்பது சிந்தனையாவும் அதன் செயன் முறையாகவுமே இருக்கும். இது பங்குபற்றுனனுக்கு மட்டுமல்லாது பிறருக்கும் உடனடி மற்றும் நீண்ட நாள் பயன்களை வழங்கும்.

புதிய சிந்தனை என்பதற்கப்பால் சிந்தனை மாற்றம் எனுமோர் அவசிய தேவைக்கு வழிகாட்டத் தயாராவது யார்?

(தொடரும்)

**கோட்பாடுகள் வரை விலக்கணங்கள் போன்றவற்றை நம்பியே எமது செயலொழுங்கு வரையப்பட்டிருக்கிறது. அதன் வழியேதான் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. இச் செயலொழுங்கானது மாற்றப்படல் வேண்டும்.**

# மிதக்கும் ரயில்..!



சீனாவில் அடுத்தகட்ட சாதனையாக அதிவேக மிதக்கும் ரயிலை அறிமுகம் செய்துள்ளனர். காந்த இயக்கவியல் அடிப்படையில் இயங்கும் இந்த ரயில் மணிக்கு 620 கி.மீ. வேகத்தில் பயணிக்கும் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

சீனாவின் தென்மேற்கு ஜியோ தாங் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் இந்த ரயிலை வடிவமைத்துள்ளனர்.

உயர் வெப்ப (*high temperature superconducting*) தொழில்நுட்பத்தின் மூலம் இந்த ரயில் தாண்டவாளங்களில் தொட்டுச்செல்லாமல் மிதந்தப்டி அதிவேகமாகப் பயணிக்கக்கூடியது.

இந்த ரயிலில் சக்கரங்கள் இல்லாததால் உராய்வு மிகவும் குறைவாகவே இருக்கும். காந்தமயப்படுத்தப்பட்ட தண்டவாளத்தின் மீது இந்த ரயில் காற்றில் மிதந்தபடி வேகமாகப் பறக்கும்.

தற்போது இதன் 69 அடி நீள மாதிரியை அறிமுகப்படுத்தி உள்ள ஆராய்ச்சியாளர்கள், அடுத்த மூன்று முதல் 10 ஆண்டுகளுக்குள் இது முழு செயற்பாட்டுக்கு கொண்டுவரப்படும் எனக் கூறியுள்ளார்கள். இந்த ரயில் மணிக்கு 620 கிமீ வேகத்திவ் பயணிக்கக் கூடியது. இதன் மூலம் பயணித்தால் லண்டனிலிருந்து பாரீஸுக்கு 47 நிமிடங்களில் போய்விடலாம்.

இந்த நிலையில் மேலும் இந்த ரயிலை மணிக்கு 800 கி.மீ. வேகத்தில் பயணிக்கும் வகையில் உருவாக்கும் முயற்சிகளையும் ஆராய்ச்சியாளர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.









# பாலைவனத்து ஊற்றடி நீ எனக்கு! 4

● கலியுக பித்தன்

**இளசுகளைக் கிறங்க வைக்கும் காதல் தொடர்**

"ரித்து... ரித்து..." அவள் மறைந்த பின்னும் தன்னை மறந்து சத்தமிட்டுக் கத்தினான் வருண். அவனது குரலில் ஏக்கம் நிரம்பி இருந்தது. ரித்துவின் மனதில் என்ன இருக்கிறது என்பது தெரியபோகும் கணத்தில் தெரியாமல் போகும் போது அந்த ஏக்கம் வருவது இயல்புதானே.

"சொல்ல வந்தத சொல்லிட்டு போடி... ரித்து.....து..." குரலில் ஏதோ ஆர்வமும் தென்பட்டது...

ரித்துவோட மனதில் ஏதோ ஒன்று இருக்கிறதென்று நினைத்து கொண்டிருந்தவனின் மனதிற்குள் இப் து அது என்னவாக இருக்கும் என்கின்ற எண்ணம்தான் ஓடிக்கொண்டிருந்தது..

"தம்பி வருண், அவங்க போய் அரை மணித்தியாலம் ஆச்சு.. நீங்க போங்க, அவங்க வந்து மிச்சம் சொல்லுவாங்கதானே" ஜெய் சொல்லி முடித்தான்.

அன்று மாலை ரித்து, வருணை தொலைபேசியில் அழைக்க, வருணும் ஆவலோடு அழைப்பை ஏற்று பேசலானான்.

"ஹலோ வருண், நாளைக்கு உன்னோட தனியா பேசோனும்... நாளைக்கு ஈவினிங் கம்பஸுக்கு பக்கத்துல இருக்கிற ஆஞ்சநேயர் கோவிலுக்கு வா..."

"என்ன பேசோனும்? "

"நாளைக்கு ஈவினிங் வாயேன். பேசுவம்"

"எதை பத்தியென்டு இப்போ சொல்லு ரித்து"


ரித்துவிடம் இருந்து பதில் இல்லை...

"ஹலோ... ஹலோ... ரித்து...."

அழைப்பு துண்டிக்கப்பட்டு விட்டதை உணர்கிறான் வருண்.

கம்பஸ்ல ரித்து ஏதோ சொல்ல வந்து பாதியிலையே சொல்லாமல் போனதால் உண்டான ஏக்கத்தோடு இருந்தவனுக்கு, இந்த அழைப்பில் ரித்து கூறிய வார்த்தைகளும், திடீரென்று அழைப்பை துண்டித்த விதமும் வருணை திக்கு முக்காட வைத்தன.

காலையில் வேளைக்கே கம்பஸ் போன வருண் ரித்துவின் வருகைக்காகக் காத்துக்கொண்டிருந்தான். கார்த்திக், ஜெய், ஜெனி மூவரும் வந்தார்கள். ரித்து மட்டும் வரவில்லை. அவள் ஏன் வரவில்லை என்று யாருக்கும் தெரிந்திருக்கவில்லை. போன் பண்ணினால் எந்தவொரு பதிலும் இல்லை. ரித்து வராதது மற்ற மூன்று பேருக்கும் சாதாரணமான ஒரு சம்பவமாக இருந்தாலும் வருணுக்கு அது மிகப்பெரிய சங்கடமாவே தோன்றியது. ஆனாலும் அதை அவன் காட்டி கொள்ளாமல் அன்றைய நாளின் மாலை பொழுதுக்காக தவித்துக் கொண்டே இருந்தான். ரித்து நேற்று போன் பண்ணியதையோ, ஈவினிங் கோவிலுக்கு வர சொன்னதையோ அவன் யாரிடமும் சொல்லவில்லை. சொல்ல கூடாது என்பதற்காக அல்ல, சொல்ல வேண்டும்மென்று அந்த நேரத்தில் அவனுக்கு தோன்றவில்லை.



கம்பஸ் முடிய நேராக அந்த கோவிலுக்கு போகிறான் வருண். ஈவினிங் வா என்று சொன்ன ரித்து எத்தனை மணிக்கென்று சொல்லவில்லை. அதனால் இவன் வேளைக்காகவே அங்கே போய் அவளை எதிர் பார்த்துக் கொண்டிருந்தான். மணிக்கூட்டைப் பார்த்தான். நேரம் மூன்றறரை காட்டியது.

ரித்துவிற்கு மெசேஜ் செய்தான்.. பதில் இல்லை... போன் செய்தான்.. பதில் இல்லை...

இயல்பாகச் சுத்தும் கடிகார முட்கள்கூட இன்று கஷ்டப்பட்டு சுத்துவதாக அவன் எண்ணிக் கொண்டான்.

நேரம் நாலாகியது. இவனுடைய பொறுமை கடைசி கட்டத்தை நோக்கி போய் கொண்டிருந்தது...

திரும்ப போன் பண்ணன்... திரும்பவும் பதில் இல்லை.. ஏக்கம் கொஞ்சமாக குறைந்து கோபம் கொஞ்சம் கொஞ்சமாக வர தொடங்கியது வருணுக்கு...

நேரம் நாலரை ஆனது... மனைவியை டெலிவரிக்கு உள்ளே அனுப்பி விட்டு அந்த ஹொரிடோர் நீட்டுக்கும், சிவாஜி கணேசன் மாதிரி அங்கும் இங்குமாக நடந்து திரியிற கணவன்மார் மாதிரி வருண் தன்னோட பைக் ஐ சுத்தி சுத்தி நடந்தான். கடிகார முள்ளைவிட இவன் கொஞ்சம் வேகமாகவே சுத்தினான். பொறுமையின் அளவு குறைந்து கொண்டே போனது.

நேரத்தை பார்த்தான் ஐந்து மணிக்கு ஐந்து நிமிடம் இருந்தது. போன் பண்றான்.

அவன் எதிர்பார்த்ததுதான்.. பதில் இல்லை...

பொறுமையிழந்த வருண் பைக் மேல ஏறி இருந்து பைக்கை ஸ்ராட் பண்ண, அவனுக்கு போன் வருது. எடுத்து பார்த்து பேசுறான்...

"ஹலோ ரித்து...." வருண் சொல்லி முடிப்பதற்குள் போன் கட் ஆகுது... இந்த முறை பிரச்சினை வருணோட சைட்லதான். வருணோட போன் சார்ஜ் இல்லாமல் உயிரை விட்டது... அஞ்சும் கெட்டு அறிவும் கெட்டு பைக் மேல தலையை முட்டி கொண்டான் வருண்.

திடீரென்று ஒரு பைக் சத்தம் கேக்க தலையை நிமிர்த்தி பார்த்தான். மஞ்சள் சுடிதாருக்கு வெள்ளை துப்பட்டா போட்டு கறுப்பு ஸ்கூட்டியில, துப்பாட்டாவோட சேர்த்து தலை முடியையும் காற்றிலே மிதக்க விட்டு, ரித்து வந்துகொண்டிருந்தாள். அவள் வருவதை கொஞ்சம் ஸ்லோ மோஸனில் பார்த்த வருணுக்கு ஒரு தேவதை வருவதை போலவே இருந்தது. தன்னை மறந்து அவள் வருவதையே பார்த்து கொண்டு நின்றான்... பார்த்துகொண்டு இல்லை இரசித்துக் கொண்டு நின்றான்...

(தொடரும்...)

---

## புதிய கைத்தொழில்...

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

முன்னெடுக்கப்பட்டு வருகிறது. ஏற்கனவே கடனாவில் கஞ்சாவுக்கான தடை நீக்கப்பட்டுள்ளது) எற்றுமதி ஊக்குவிக்கப்படுகிறது. இனி இலங்கையில் இவ்வுற்பத்தி மூலம் அதிக வெளிநாட்டுச் செலாவணியை உழைக்கும் வாய்ப்புண்டு.

**முடிவுப்பொருள் ஏற்றுமதி**

இலங்கையில் உற்பத்திப் பொருள்களில் பெருமளவானவை முதல் நிலைப் பொருள்களாகவே ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தன. இனிப் பெறுமதிசேர் முடிவுப்பொருள்களாக அவற்றை ஏற்றுமதி செய்வதற்கு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகிறது. கொரோணாப் பகுதியில் அண்மையில் 155 ஏக்கர் பரப்பில் தென்கிழக்காசியாவிலேயே பெரிய டயர் தொழிற்சாலையை அதிபர் ஆரம்பித்து வைத்தார். அது ஒரு சிங்கள முதலீட்டாளரால் நிறுவப்பட்டது. எதிர்காலத்தில் தமிழ் முதலீட்டாளர்களும் பெரும் கைத்தொழில் முயற்சிகளை மேற்கொள்ள வாய்ப்புள்ளது. இந்தியாவின் தற்போதை பிரதமர் மோடி குஜராத் மாநில முதலமைச்சராக இருந்தபோது இத்தகைய கைத்தொழில் முதலீட்டாளர்களைக் குஜராத் மாநிலத்தில் முதலீடு செய்ய வைத்து அந்த மாநிலத்தை முன்னேற்றியிருந்தார்.

இந்தியாவிலிருந்து முச்சக்கர வண்டிகள், மோட்டார் சைக்கிள் இறக்குமதிகள் இலங்கையில் தடை செய்யப்பட்டுள்ள நிலையில் குறைந்த விலையில் சிறிய கார் வகையை இலங்கைக்கு இறக்குவதற்கு இந்தியா திட்டமிட்டிருந்தது. அவை நிறுத்தப்பட்டுக் குறைந்த விலையில் சிறிய ரக கார்களை இலங்கையிலேயே தயாரிக்கும் பரீட்சார்த்த முயற்சி வெற்றியடைந்துள்ளது. இலங்கையில் உற்பத்தி செய்யக்கூடியவற்றைச் செய்தும், உள்நாட்டிலேயே தயாரிப்பதாலும் அந்தியச் செலவாணியை மீதப்படுத்துவதுடன் வேலையற்றோர் தொகையையும் குறைக்க முடியும்.

இலங்கையின் பிரதான உற்பத்திகளான விவசாயம் மற்றும் கடற்றொழில் அறுவடைகள் கைத்தொழில் மயமாக்கப்படுவதுடன் புதிய கைத்தொழில் முயற்சிகள், சேவைகள் என நவீன பொருளாதார விடயங்களில் கவனம் செலுத்தும் அரசுக்குக் கொழும்புத் துறைமுக நகரம் அதிக பங்களிப்பைச் செய்யவிருக்கிறது. இந்தத் துறைமுக நகரம் 10ஆண்டுகளுக்கு முன் கட்டி முடிக்கப்பட்டிருந்தால் இன்றைய சூழலில் இலங்கையின் கைத்தொழில் மய ஏற்றுமதி வர்த்தகம் மேலோங்கியிருந்திருக்கும். இந்த விடயத்தில் இதற்கு முந்தைய நல்லாட்சி அரசு மந்தமாகச் செயற்பட்டதாகவே தெரிகிறது. எனினும் தென்னாசியாவின் அதி நவீன கைத்தொழில் மய நாடாக இலங்கையை மாற்றுவது வியத்மக என்கிற சிந்தனையாளர் குழாத்தினரின் மற்றுமோர் ஏற்பாடு என்பதும் தெளிவு.




செல்வராசா - செட்டிகுளம்

# அண்ணாவில் தொற்றிய மோகினிப் பேய்

கதை 20

அது 1972ஆம் ஆண்டாக இருக்க வேண்டும். நான் பாடசாலையில் படித்த காலம். அப்போது ஒரு நாள் பாடசாலை முடிந்து வீட்டுக்கு வந்தபோது எங்கள் மூத்த அண்ணாவுக்குப் பேய் பிடித்து விட்டது என்று கதைத்த ஊரவர்கள் எல்லோரும் ஒன்றாய்க்கூடி எமது வீடே பெரிய ரகளையாக இருந்தது. அண்ணா மிகவும் மூர்க்கமாக நடந்து கொண்டார். அவரைப் பார்க்கப் பயமாக இருந்தது. என் மீது அதிகம் அன்பு கொண்ட அவர் என்னைக்கூட முறைத்துப் பார்த்தார்.

எங்கள் ஊரில் இருக்கின்ற தீயவற்றை விரட்டுகின்ற ஐயா ஒருவர் வீட்டுக்கு வந்து மந்திரம் ஓதி அண்ணாவுக்கு நூல் கட்டித் திருநீறு போட்டார். ஆனால் அண்ணனின் நிலை மாறவில்லை. அண்ணா வீட்டை விட்டு ஓட முற்பட்டார். எட்டுப் பத்துப்பேர் சேர்ந்து பிடித்தால்கூட திமிறிக் கொண்டு அவர் எழும்புவதைக் கண்டேன். அப்போது எனக்குப் பத்து வயதிருக்கும். பேய் என்றால் என்னவென்று எனக்குத் தெரிந்திருக்கவில்லை. அண்ணாவின் குழப்பத்தைப் பேயாக நினைத்துக் கொண்டேன். அன்றிரவு பெற்றோல்மாக்ஸ் கொழுத்தி வைத்து ஊரவர்கள் பலர் கூடி எங்கள் வீட்டில் தங்கி அண்ணாவைப் பத்திரமாகப் பார்த்துக் கொண்டார்கள். அண்ணா தனது நல்ல நண்பர்களுடன் கூடக் கதைக்கவில்லை. அதுதான் ''பேயறைந்தது போல'' இருப்பது என்பதையும் மற்றவர்கள் கூறக் கேட்டேன்.

மல்லாவியில் இருக்கும் மந்திரவாதி ஒருவரிடம் கூட்டிச் சென்றால்தான் அண்ணாவைச் சுகப்படுத்தமுடியும் என்று பலருமாக முடிவெடுத்துக் கார் ஒன்றில் மறுநாள் புறப்பட்டனர். நானும் அவர்களுடன் சென்றேன். அண்ணாவைக் காரின் பின்சீற்றில் நடுவில் இருத்தி அவரின் இருபுறமுமாக அவரைப் பலர் பிடித்திருந்தார்கள். நான் அப்பாவுடன் முன்சீற்றில் இருந்தேன்.

அந்த மந்திரவாதியின் வீடு மல்லாவிச் சந்தி தாண்டிக் கொஞ்சத்தூரத்தில் றோட்டுக் கரையில் இருந்தது. அண்ணாவைக் காரில் இருந்து இறக்கி எல்லோரும் இறுக்கிப் பிடித்துக்கொண்டு போனபோது மந்திரவாதியின் வீட்டி லிருந்த தேசி மரத்தில் காய்த்திருந்த பச்சைத் தேசிக்காய்களைப் பிடுங்கி அண்ணா தோலுடன் கடித்துச் சாப்பிடுவதைக் கண்டேன். அப்போது அவர் மிகவும் கோரமாகக் காட்சியளித்தார்.

**ஒரு கழிப்புக் கழித்த இடத்தைக் கடந்து சென்ற போது மோகினிப் பேய் இவருடன் சேர்ந்துவிட்டது.**

அந்த மல்லாவி மந்திரவாதி வயதுமுதிர்ந்த கிழவர். பெரிய மீசை வைத்திருந்தார். கற்பூரத்தைக் கொழுத்தி வைத்துவிட்டுக் கொஞ்ச முத்துகளைக் குலுக்கிப் போட்டார். அதில் நிமிர்ந்து கிடந்த முத்துகளை எண்ணிவிட்டு ''ஒரு கழிப்புக் கழித்த இடத்தைக் கடந்து சென்ற போது மோகினிப் பேய் இவருடன் சேர்ந்து விட்டது'' என்றார். ஏதோ பலவித மந்திரங்களைச் சொல்லி ஒரு தேசிக்காயை எடுத்து அண்ணாவின் தலையில் வைத்து ஒரு சிறிய வாளால் வெட்டினார். மந்திரத்தை வேகமாக ஓதிக்கொண்டு திருநீற்றை அண்ணனின் தலையிலும் முகத்திலும் அடித்தார். திமிறிக்கொண்டிருந்த அண்ணா இப்போது அந்த மந்திரவாதியைக் கும்பிட்டார். பின்னர் அவருக்கு முன் தலையைக் குனிந்தபடி இருந்தார். ஓர் அமானுசத் தோற்றத்துடன் இருந்த அண்ணாவை ஒரு சில நிமிடங்களில் பெட்டிப் பாம்பாக மாற்றினார் அந்த மந்திரவாதி.

அரை மணிநேரத்துக்குப் பின் அண்ணாவை அழைத்துக்கொண்டு எங்களை வீட்டுக்குப் போகலாம் என்றார் மந்திரவாதி. அவரது வீட்டிலிருந்து அண்ணா மிகச் சாதாரணமாக வெளியே நடந்து வந்தார். என்னைத் தோளில் பிடித்தபடி சாதாரணமாக எல்லோருடனும் சிரித்துக் கதைத்தார். ஒரு முச்சந்தியில் கழிப்புக் கழித்துக் கிடந்தது என்றும் அதைக் கடந்த பின்பு தனக்கு ஏதோ நடந்துவிட்டதை உணர்ந்தார் எனவும் காரில் திரும்பிச் செல்லும்போது அண்ணா கூறினார்.

அண்ணாவில் தொற்றியது ஒரு மோகினிப் பேய் என்று மந்திரவாதிக் கிழவர் கூறியதையும் நாங்கள் புறப்படும்போது அண்ணா கூறியதையும் வைத்துப் பார்க்கின்றபோது பேய் என்கிற ஒன்று இருப்பதை என்னால் உணர முடிந்து. அதன் பின்னர் அண்ணா எந்தவித பிரச்சினையும் இன்றிச் சாதாரணமாக இருந்தார்.

## கலவரமேதுமின்றி வெளியேறினார் ட்ரம்!

அமெரிக்க அதிபர் ட்ரம் தனது பதவியிலிருந்து கலகமோ ஆர்ப்பாட்டமோ இன்றி அமைதியாக வெளியேறினார். உலகின் மிகப் பெரிய மக்களாட்சி நாடுகளில் ஒன்றான அமெரிக்காவின் அதிபர் மாற்றம் அமைதியற்றதாக, வரலாற்றில் இதுவரை இல்லாததைப் போன்றதாக அமையும் என்று உற்றுக்கவனிக்கப்பட்டு வந்த நேரத்தில் எந்தவித அசம்பாவிதமும் இன்றி ட்ரம் வெள்ளை மாளிகையைவிட்டு வெளியேறினார்.

தேர்தல் தோல்வியைத்தான் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதற்கு அறிகுறியாகப் புதிய அதிபர் ஜோ பைடனின் பதவியேற்பு நிகழ்வில் ட்ரம் பங்கேற்கவில்லை. இதனை அவர் முதலிலேயே அறிவித்துமிருந்தார். ஆனால், புதிய அதிபருக்கான வாழ்த்துச் செய்தியை அவர் வெள்ளை மாளிகையில் விட்டுச் சென்றார் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது. அதுபோன்றே புதிய முதல் பெண்மணிக்கான வாழ்த்துச் செய்தியை ட்ரம்பின் மனைவி மெலினாவும் விட்டுச்சென்றிருக்கிறார்.

தேர்தலில் தனக்கு ஏற்பட்ட தோல்வி மோசடிகளால் நிறைந்தது என்று அதனை ஏற்பதற்கு ட்ரம் மறுத்துவந்தார். இதனால் அவர் வெள்ளை மாளிகையைவிட்டு வெளியேறாமல் வில்லங்கம் கொடுப்பார் என்று எதிர்பார்க்கப்பட்டது. கடைசி நேரத்திலும் ட்ரம் ஏதாவது செய்வார் என்று அவரது ஆதரவாளர்களும் எதிர்பார்த்திருந்தனர். அப்படியொரு நிலை வந்தால் ட்ரம் கட்டாயமாக வெள்ளை மாளிகையைவிட்டு அதிகாரிகளால் வெளியேற்றப்படுவார் என்றும் தெரிவிக்கப்பட்டது. ஆனால், அமைதியாக கூடியிருந்த அதிகாரிகள் மற்றும் பொதுமக்களுக்குத் தனது கைகளை அசைத்துப் பிரியாவிடை வழங்கிய ட்ரம் மற்றும் அவரது மனைவி அமெரிக்க அதிபருக்கான தனி உலங்குவானூர்தியில் ஏறிப் புறப்பட்டனர்.

அமெரிக்காவின் மக்களாட்சி மீண்டும் காப்பாற்றப்பட்டதாக, அதற்குக் ட்ரம் களங்கம் விளைவிக்காமலே வெளியேறியிருக்கிறார் என்றும் இப்போது பாராட்டப்படுகின்றது.



## ஆசியின் கோட்டை...

(09ஆம் பக்கத் தொடர்ச்சி)

மறுமுனையில் நிதானம், அதிரடி என்று மாறி மாறித் தனது பாணியில் ரிசப் பாண்ட் ஆடி ஹாபா தங்களது கோட்டை என்று சொல்லித்திரிந்த ஆஸ்திரேலிய அணி இந்த இன்னிங்ஸை தங்கள் வாழ்நாளில் மறக்கவே முடியாத வண்ணம் ஒரு பெரிய பேரிடர் வலியை கொடுத்து இந்திய அணியை இறுதி வரை ஆட்டமிழக்காது நின்று காப்பற்றி, ரஹானே தலைமையில் 2-1 என்ற கணக்கில் தொடரை வென்று பார்டர் - கவாஸ்கர் ட்ராபியை வென்று கிரிக்கெட் வரலாற்றில் ஒரு பெரிய சாதனையை உலக அரங்கில் நிகழ்த்தி காட்டியுள்ளனர்.

போட்டி முடிவுற்றதும், அணியை இறுதிவரை நின்று வெற்றியீட்ட வைத்த ரிஷாப் பாண்ட் கையில் இந்தியக் கொடியை ஏந்த விட்டு ஆடுகளத்தில் அணி வீரர்கள் அனைவரையும் வலம் வர வைத்ததுடன், வெற்றிக் கிண்ணத்தை அறிமுக வீரராக களமிறங்கிய நடராயணன் கையில் வழங்கிய இந்தியஅணியின் தலைவர் ரஹானேயின் அன்பும் மனிதமும் இங்கே நிச்சயம் சொல்லப்பட வேண்டியதொன்று..!



# சித்திரமே கதை பேசு!

■ ப்ராடி

வாசிப்பவர்களுக்கு ஆர்வத்தை ஏற்படுத்துவற்காக ஓவியங்களை அல்லது ஒளிப்படங்களை இடையிடையே இணைப்பது பத்திரிகைகள், சஞ்சிகைகளின் வழமை. 'செம்மண்'ணுடைய பக்கங்களிலும் அதனை நீங்கள் அவதானிக்கலாம். சிலவேளைகளில் கட்டுரைகளில் உள்ள விடயங்களைத் தெளிவுபடுத்துவதற்கான படங்களாகவும் இவை இருக்கும்.

உதாரணமாக, கணினியொன்றின் பாகங்கள் பற்றிய எழுத்தாக்கமொன்றில் அவற்றுக்கான படங்களையும் இணைப்பதன் மூலம் வாசிப்பவரை இலகுவாகப் புரிந்துகொள்ளச் செய்திடலாம். இவற்றிலே முதன்மையாக இருப்பது எழுத்தாக்கம்; அவற்றுக்கு உறுதுணையாக இணைக்கப்படுபவை படங்கள்.




பிரான்ஸ் தேசத்தின் 16000 ஆண்டுகள் பழைமையான குகை ஓவியத்தின் பகுதி



பொன்னியின் செல்வனில் வந்தியத்தேவன் சண்டையிடும் காட்சி

சில புதினங்கள், தொடர்கதைகள் - சஞ்சிகைகளில் பிரசுரமாகும்போது அவற்றின் களம், கதை மாந்தர் போன்றோரையும் அத்தியாயத்தில் இடம்பெறும் சம்பவங்களையும் சித்திரங்களாக வரைந்திருப்பர். இது வாசகர்களை ஈர்ப்பதற்கான ஓர் உத்தி. சித்திரங்களுக்காகவே புகழ்பெற்ற தொடர்களும் இருக்கின்றன.



ஓவியர் ரமணியின் கோடுகள் பேசிடும் போரே நீ போ!

தமிழகத்தின் 'கல்கி'யில் தொடராக வந்த பொன்னியின் செல்வனுக்கு ஓவியர் மணியம் வரைந்த கோட்டுச் சித்திரங்கள் உயிரூட்டியது வரலாறு. இப்போது இயக்குநர் மணிரத்தினம் எடுத்துவரும் திரைப்படத்திற்கான மேற்கோளும்கூட அந்தப் படங்களே! ஏனெனில் அந்தளவிற்கு அந்தப் படங்கள் பொன்னியின் செல்வன் காதாபாத்திரங்களாகத் தமிழர்கள் மனங்களில் ஆழப் பதிந்துள்ளன.

நம்நாட்டில் செங்கை ஆழியானின் 'போரே நீ போ' தொடர் வெளிவந்தபோது 'ரமணி' மாஸ்டரின் சித்திரங்கள் கதையோட்டத்தோடே வாழ்ந்தமை நமக்கு நன்கு தெரிந்த அண்மைய சான்று.

அச்சுப் பதிப்புத் துறையில் சித்திரங்கள் மற்றும் ஒளிப்படங்களின் பங்களிப்புப் பற்றி எழுதிக் கொண்டே போகலாம்.

**குகை மனிதர்கள் இத்தகைய கதை சொல்லும் சித்திரங்களை வரைந்தார்கள். மெல்ல மெல்ல இந்தச் சித்திரங்கள் குகைகளிலிருந்து களிமண் தகடுகளுக்கும் உலோகங்களுக்கும் சுவர்களுக்கும் பெயர்ந்து வந்தன.**

இப்படி கதை சொல்லிகளாக சித்திரங்கள் எப்போது செயற்பட ஆரம்பித்தன? என்று தேடத் தொடங்கினால் அது எம்மை கற்காலத்துக்கே அழைத்துச் செல்லும்.

ஆமாம், மனிதன் குகைகளில் வாழ்ந்த காலத்தில் அவனுக்கு தீர்க்கமானதொரு மொழிக் கட்டமைப்பு இருந்திருக்கவில்லை என்பது ஆய்வாளர்களது கருத்து. சைகையையும் சில ஒலிக்குறிப்புகளையும் பயன்படுத்தி உரையாடிக்கொண்டிருந்த மனிதன், கற்களால் குகைச் சுவர்களில் விளக்கப்படங்களைக் கிறுக்கத் தொடங்கினான். விலங்குகளையும் சக மனிதர்களையும் கோடுகளால் அடையாளப்படுத்தினான். அவற்றைக்கொண்டு தனது அனுபவத்தை குகைச் சுவர்களில் பதிவுசெய்தான். குடும்ப உறுப்பினர்கள் முதல் தன்னால் வேட்டையாடப்படும் அல்லது தனக்கு ஆபத்தை விளைவிக்கும் விலங்குகள், சூழவுள்ள இயற்கை அம்சங்கள் என்று பலவற்றை தொடர் ஓவியங்களாக வரைந்துவைத்தான்.

குகைகளில் இயற்கையழிவுகளுக்குத் தப்பி நிற்கும் ஓவிய்ங்கள் இன்றைய ஆராய்ச்சியாளர்களுக்குப் பல கதைகளைச் சொல்கின்றன.

ஒருவருடைய அல்லது ஒரு குழுவினுடைய எண்ணங்களை இன்னுமோர் தரப்புக்குக் கடத்தும்



குகைகளில் ஓவியங்களைத் தேடும் ஆய்வாளர்

ஊடகமாகச் சித்திரங்கள் பரிணமித்தன. இதனால், மனித நாகரிகம் வளர்ந்தபோது ஓவியத்துக்கும் அந்த வளர்ச்சிக் கட்டங்களில் முக்கிய இடம் தரப்பட்டது.




சோட்டா பீம் கார்ட்டூன் தொடர்

'ஒளிப்படக் கலை உருவான பின்னர் ஓவியங்கள் மவுசிழந்துவிட்டன' என்று சொல்லியவர்களும் இருக்கிறார்கள். ஆனால், ஒளிப்படங்களால் ஓவியங்களை ஈடுசெய்ய இயலாது என்பதுதான் உண்மை. ஏனெனில் இரண்டும் தனித்தனியான சிறப்பம்சங்களைத் தனக்குள்ளே கொண்ட வேறுவேறான கலைகள். இரண்டும் சந்திக்கும் தருணங்களுண்டு. அவை அற்புதங்களை விளைவிக்கும்.

நாம் ஒளிப்படங்களைப் பற்றி இங்கே அதிகம் பேசப்போவதில்லை. நமது முதன்மை நோக்கு கதைசொல்லும் சித்திரங்களைத் தேடுவது!

குகை மனிதர்கள் இத்தகைய கதை சொல்லும் சித்திரங்களை வரைந்தார்கள். மெல்ல மெல்ல இந்தச் சித்திரங்கள் குகைகளிலிருந்து களிமண் தகடுகளுக்கும் உலோகங்களுக்கும் சுவர்களுக்கும் பெயர்ந்து வந்தன. ஒரு காலகட்டத்தில் காகிதங்

(22 ஆம் பக்கம் பார்க்க)



அடுத்தவாரம் - இரும்புக்கை மாயாவி!

சிறுகதை

# தலைகீழ்

முகமது ஃபைசல்

யாராச்சும் பேப்பரை தலை கீழா வைத்து படிப்பாங்களா? பேப்பர் என்றால் சும்மா வெறும் பேப்பர் இல்லை. தினப் பத்திரிகை, வாரப் பத்திரிகை, மாத சஞ்சிகை, சினிமா புத்தகம் எல்லாம்தான்.

முதன் முதலில் எல்லோரும் தலை கீழாகத்தான் எழுதுவோம். பிறகு போகப் போக நேராக எழுத ஆரம் பித்துவிடுவோம். ஆனால் இவன் இன்னமும் தலைகீழாகத்தான் எழுது கிறான். மாறவேயில்லை. வயசு என்ன? இப்போதும்கூட தலை கீழாகத்தான் எழுதுகிறான்.

இவன் தலை கீழாக எழுதுவதை அவனே வாசிக்க வேண்டும். அப் படி அவன் வாசித்தால் எல்லோருக் கும் நன்றாகப் புரியும். பின்னே என்ன குழப்பம்? இவன் இப்படியே எழு தட்டும், வாசிக்கட்டும் என்று இவன் உம்மாவும் சொல்லிவிட்டாள். வாப்பா எதுவும் சொல்லாமலே விட்டுவிட் டார்.

மரத்தில் இலைகள் எல்லாம் தலை கீழாகத்தானே இருக்கு. அது நமக்கு புரியவில்லையா? யாரும் மரத்தை வாசிக்க படித்து பட்டம் பெற வேண் டுமா? என்று தன் மகனைப்பற்றி கதை எடுப்பவர்களுக்கு இவன் உம்மா பதில் கொடுத்துவிடுவாள். இவனுக்கு பெயர் என்ன என்று நினைக்கிறீங்க. இவனுக்கு வாப்பா வைத்த பெயர் - இவன்-

வாப்பாவின் கூட்டாளிகள் மக னைப் பற்றிக் கேட்டால் "இன்றைக்கு எந்த மனிதன் நேராக நிற்கிறான் யாரைப் பாரு தலைகீழாத்தானே நிற் கிறான்" என்பது அவரின் நறுக்கென்ற பதில். இது இவனுடைய ஊரில் எல் லாத் தெருக்களிலும், பேச்சளக்கும் எல்லோரும் அறிந்து வைத்திருக்கும் விடயம்.

இவன் பள்ளிக்கூடத்து வாத்தியார் மிகவும் பொறுமையான மனிசன். இவன் வாத்தியாரிடம் அப்பியாசக் கொப்பியையும் தலை கீழாய்த்தான் நீட்டுவான். ஆனாலும் அதிக மார்க் இட்டிருப்பார். 80, b93 இவன் கொப்பிகளில் எங்கு பார்த்தாலும் இருக்கும். "உன் தலைமேல் எழுதிய எழுத்துடா இது" என்று தொப்பை வயிறு குலுங்க சிரிப்பார்.

இவன் வாத்தியார் கேட்கும் கேள்வி களுக்கு வாயால் நேராக பதில் சொல் வான். இவனிடம் வாத்தியார் "வாயால் எழுதேன்" என்று பல முறை சொல்லி யிருக்கிறார்.

இப்படித்தான் ஒரு முறை இவன் சிறு பிள்ளையாக இருக்கும் சமயம் கையைப் பிடித்து நேராக எழுதப் பழக்கியும் பார்த்தாள் உம்மா றாவியா. அவள் கைகளிலே இவன் தலை கீழாய் உறங்கத் தொடங்கிவிட்டான். றாவியாவும் உடம்பு பெருத்த ஆள் என்பதால் கொஞ்ச நேரம் கைகளில் தாங்கியிருந்துவிட்டு இவன் நன்றாக உறங்கியதும் கட்டிலில் கொண்டு போய் கிடத்திவிட்டாள்.

இரண்டு கால்களும் இல்லாமல் சக் கரங்கள் பொருத்திய சிறு பலகைத் துண்டில் எச்ச வாயை வைத்து அமர்ந்துகொண்டு ஒரு கைக்கு பாதணி அணிந்து அந்தக் கையால் கெந்திக் கெந்தி பல வீதிகளைக் கடக்கும் விதியுடையவர்களும் தலை கீழ் ஆனாவர்கள்தான். சூரியன், நில வுக்குக்கூட கால்கள் இல்லை ஆனால் தலை நிமிர்ந்து நிற்கிறதே. எல்லோ ருக்கும், எல்லாவற்றிக்கும் ஒரு திறமை, ஆற்றல் இருக்கிறது. இதை நீங்கள் போற்ற வேண்டாம் தூற்றா மலிருந்தால் போதுமே என்று பாட சாலை விழாக்களில் பேசி எல்லோர் மனங்களையும் கொள்ளை கொண்ட இவன்தான் வீட்டிலே மூத்த பிள்ளை.

இரண்டாவது, பெண். ஊமை. பிறவியிலேயே. பார்த்தால் ஊமை என்று யாரும் சொல்ல மாட்டார்கள். முகத்தில் அப்படியொரு வெளிச்சம். கழுத்தில் சின்னதாக ஒரு அரைப் பவுனும் இருக்காது தங்க மாலை. எட்டு அல்லது ஒன்பது துளிப் பாலில் ஒரு துளி கறுப்பு பொட்டு வைத்தாற் போல் கண்களும். அவளைத் தூக் கும் அழகின் இறகுகள் ஆகின.

மூன்று வயசு இருக்கும்போது வீட் டைத் தலைகீழாக்காமல் தூங்கவே மாட்டான். இவன். "டேய் இவன விர்ரா அந்த கோழிய தலகீழா புடிக் காத கொத்தும் என்ட இவனே கோழிய விர்ரா...... ஆ....." என்று கத்திக் கத்தி இவனோடு பெரும் பாடாப் போச்சு றாவியாவுக்கு.

இப்போது இவனுக்கு இருபத்தி நாலு வயசு இருக்கும். ஒரு பதின் நான்கு வயசு இருக்கும் போது வாப் பாவின் விசிறியை எடுத்து கொசு அடிப்பான். அடித்த கொசுக்களை தலைகீழாக வரிசைப் படுத்தி வைப் பான். அதை இந்த இருபத்தி நாலு வயசிலும் மறக்காமல் செய்து வரு கிறான்.

இவனோடு மேற்படிப்பைத் தொடர வெளியூர் கிளம்பிய நண்பர்களை யும் சேர்த்து ரூமில் மூன்று பேர் தான். கடந்த ஆறு மாதங்களும் ரூமில் சுவாரசியமாக கழிந்தன. ஒரு நாள் இவன் ஊரில் இருந்து வரும் போது கொண்டுவந்த மண் சட்டியில் பசும் பாலை சூடாக்கிக் கொண்டி ருந்தான். பால் சூடாகி பொங்கி வரும்போது "டேய் மச்சான் இங்க பாரு இந்த பால தலைகீழா பிடிச்சித் தூக்கிக் காட்டுறன்" என்று பொங்கி வந்த பாலை சிறு கோப்பையினால் அள்ளி கையை மேலே உயர்த்தி மீண்டும் மீண்டும் சட்டிக்குள் ஊற்றி னான்.

அதிசயமென்று ஓடிவந்து பார்த்த நண்பர்களில் ஒருவன் "என்ற வாப்பா இவன் பின்னால போனா தலைக்க இருக்கிறதும் அழிஞ்சி போயுடும் ஆள விடு நான் படிக்கனும்" என்று சொல்லிச் சென்று ரூமில் அடைந்து கொண்டான். இரண்டு நாளைக்கு முன்தான் தன் தங்கச்சிக்கு கல்யா ணம் என்று சொல்லி பெட்டி படுக் கையை கட்டியவன் இன்னும் திரும்பி வரவில்லை.

அந்த வார கல்லூரி விடுமுறையை ஊரிலே கழிக்க பஸ் ஏறி விட்டார்கள் இவன் நண்பர்கள் இருவரும். ஊருக் குப் போய் இறங்கிய பின் தான் ஊர் தலைகீழாகிக் கிடப்பது தெரிய வந் தது.

எண்ணிலடங்கா வண்ணத்துப் பூச்சி கள். பல நிறங்களில் ஊரையே நிறைத்துப் பறந்து கொண்டிருந்தன. ஆள் நடமாட்டம் மிகக் குறைவு. சிறுவர்களின் கண்ணில் படாமல் பூத் தது அந்த வண்ணத்துப் பூக்கள் - என்றாலே தலை கீழ்தான்.

ஒரு பூச்சியை எட்டிப் பிடிப் போமே என்று இவன் நண்பர்கள் இருவருக்கும் தோணவேயில்லை பாருங்களேன்.

"நம்மட ஊர இந்த வண்ணத்துப் பூச்சிகள்தான் தூக்கி இப்புடித் தலை கீழா போட்டிருக்குமோ" என்று பேசு வதிலேயே குறியாய் இருந்தார்கள்.

ஊருக்குத் தெற்கே இருக்கும் புளிய மரத்தில், சொல்லும் போதே எச்சில் ஊறுது. அவ்வளவு இனிப்பும், புளிப்பும் கலந்த பழங்கள் குலை குலையாத் தொங்கும்.

மரத்தின் கீழ் இவனும் தலை கீழாய்த் தொங்குகின்றான். அருகில் சென்று கேட்ட நண்பர்களுக்கு வண்ணத்துப் பூச்சிகளை தலை கீழாய் நின்று பார்த்தால் ஒரு பூந்தோட்டம் எழுந்து பறப்பது போலிருக்கும் என்று சொல் கிறான். இவனுக்கு பைத்தியம் பிடித்து விட்டது என்று அவர்கள் எண்ணா மல் போனால் அதுவும் தலைகீழ்தான்.

இவன் பேச்சைக் கேட்டு நின்ற குளத்துப் பள்ளி வாத்தியார் அக்கம் பக்கம் யாராச்சும் வர்ராங்களா என்று பார்த்துவிட்டு ஒரு புறமாக ஒதுங்கி தலைகீழாய் நின்று வண்ணத்துப் பூச்சிகளைப் பார்க்கத் தொடங்கினார். இதை கண்டும் காணாதவர்கள்போல் கடந்து செல்கிறார்கள் இவனின் நண்பர்கள் இருவரும். வாத்தியாரின் தொப்பை வயிறு அவரை ஒரு நிமி சம்கூட தலை கீழாய் நிற்க விடவில்லை.

இன்னும் சில தினங்களே இருக் கின்றன இவன் தங்கையின் கல்யா ணத்திற்கு. மாப்பிள்ளை வீட்டிலி ருந்து வந்த தகவலைச் சொல்ல இவனை ஊரெங்கும் தேடித் திரிகி றாள் றாவியா.

பட்டாம் பூச்சிகள் தலை·மேல் பறந் தால், அதன் நிழல்கள் தலை கீழா கத்தான் பறக்கின்றன. என்று தனக் குள்ளே பேசிக்கொண்டு தலை கால் புரியாத சந்தோசத்தில் குதித்துத் திரிந்த இவனைக் கண்ட றாவியா கையோடு வீட்டிற்கு அழைத்துச் சென்று "மவேன்! வீடே தலை கீழாக் கிடக்கு கெதியா வெளிசாக்கனும்டா, தங்கச்சிட கலியாண வேலயும் தலக்கி மேல கிடக்கு, நீ இப்புடி தல கீழா நின்டு திரிஞ்சா எப்புடிடா மவன்" என்றதும்

"அங்க பாரு உம்மா சுவருல பல்லியும் தல கீழாத்தான் இரிக்கி .....ஹி...ஹி......ஹா..."

சத்தமாக சிரித்துவிட்டான்.

"இவனுக்கு எல்லாம் பகிடிதான்" என்று முதுகில் செல்லமாய் தட்டி விட்டாள் றாவியா.

இவனுக்கு தலைகீழாய் பாடம் சொல்லிக் கொடுக்க முடியாது என்று இவனைத் தனியே கூப்பிட்டு



“ வண்ணத்துப் பூச்சிகளை தலை கீழாய் நின்று பார்த்தால் ஒரு பூந்தோட்டம் எழுந்து பறப்பது போலிருக்கும் என்று சொல்கிறான். இவனுக்கு பைத்தியம் பிடித்து விட்டது என்று அவர்கள் எண்ணா மல் போனால் அதுவும் தலைகீழ்தான். ”

கல்லூரிக்கு இனி வரவேண்டாம் என்று அதிபர் சொன்னதை உம்மாவைத் தவிர வேறு யாரிடமும் இவன் சொல்ல வில்லை.

"கோ.... றாவியா... ஆ... கோ... ஒ... வெளியால வாகா றாவியோ..." படபடத்த பதற்றம் நிறைந்த குரலில் செய்னுதீன் மனைவி ஓடி வந்து

"இவர்ர போட்டுலதான உன்ட புரிசனும் கடலுக்கு போற"

"அதுக்கென்னடி இப்ப?" அவள் தோளைக் குலுக்கிக் குலுக்கி கேட்டாள் றாவியா.

"நடுக் கடல்ல போட்டு தல கீழா பெரன்டுட் டாம்டி"

சொன்னதுதான் தாமதம்

"என்ட அல்லா... ஓ... என்ற அல்லா... ஓ... நான் என்ன செய்வன் இப்ப... டே... மகேன்... வாடோ.. ஓ.. போய்ப் பாக்க.. ஏ..."

ஒப்பாரியோடு வந்த றாவியாவின் துடி துடித்த குரலுக்கு பதில் குரலாய்

"எங்க போய் யார பாக்கப்போற றாவியா" கணவனின் குரல்.

கொஞ்ச நேரம் ஆடிப்போன றாவியா எதிரில் வந்து நின்ற புரிசனையே பார்த்துக்கொண்டு நின்றாள்.

"போட்டு கடல்ல பெரன்டுட்டாமே..."

இது செய்னுதீன் மனைவி.

"எவன் சொன்ன.. கத... அது? கரையேரக்க கொஞ்சம் லோடு கூடிட்டு.. இவனுகள் எல்லாத்தையும் தல கீழாத்தான் சொல்வானுகள்.. ஒரு பிரச்சினையுமில்ல.." என்றதும் றாவியா விட்டாள் பாரு ஒரு பெரும் மூச்சு அருகில் வந்த பட்டாம் பூச்சிக் கூட்டத்தை ஒதுக்கிக் கொண்டு போனது.

"இஞ்சப் பாருங்க புள்ளட கலியாணம் முடியங்காட்டிலும் கடலுக்கு போக வேணாம்" என்று கட்டளை போட்டாள் றாவியா.

"வாங்கோ ஊட்ட போக.. ரோட் டுல நின்டு பேசாம... இனி ஊரே தெரண்டு வரப் போகுது.. மாப்புள வீட்டயும் கோல் பண்ணி சொல்லுங்க பிரச்சன ஒன்டுமில்லண்ணு.. கேள்விப்பட்டு கேள்விப்பட்டு வார ஆக்கள நான் பாக்குறன் நீங்க போய் தண்ணிய வாருங்கோ.."

நிறுத்தாமல் பேசிய றாவியா மீண்டும் "இஞ்சப் பாருங்கோ இந்தக் கலியாணத்த ஒரு எசகு பிசகும் வந்துடாம நடத்தி முடிச்சோமென்டா ஏழு கடலையும் தாண்டின மாதிரித் தான்.. போய்த் தண்ணிய வாருங்கோ.. நான் சமக்கிறன்"

"ப்...பா... நீ பேசப் புடிச்சா தொங் கலே தெரியமாட்டா" என்றவாறு தொண்டைக் குள்ளிருந்து வந்த சளியை சுவர் ஓரத்தில் துப்பிவிட்டு பூனை பேண்டு மூடுவது போல மூடி கிணற்றடிக்குச் சென்றார் றாவியா வின் கணவன் கபூர்.

கிணற்றடிக் கிடுகு வேலியில் அவர் வழமையாக செருகி வைத்த பிறஸ்ஸை எடுத்து வாய் நிறைய நுரை தள்ள பல் துலக்கிக் கொண்டு வாசலில் நிற்கும் நெல்லி மரத்துக்கும், கிணற்றடிக்கும் திரும்பித் திரும்பி நடந்து கொண்டிருக்கும் கபூரின் மனதில் சிறு கவலை.

"இன்னும் குளிக்காம கெணத்தடி யில என்னதான் நடக்குது கெணத்துத் தண்ணிய ஒவ்வொன்டா எண்ணுறயளா...?" என்ற றாவியாவின் குரல் கிணற்றடிக் கிடுகு வேலியை பிய்த்தடித்துக் கொண்டு வந்த மாத்திரத்தில் கபூரின் மனதுக் குள்ளிருந்த கவலையின் கதவை "பளார்" என அடைத்து விட்டது.

கல்யாணத்துக்கான வேலைகள் தொடங்கி விட்ட இந்தத் தருணத்தில் வீட்டுச் சுவர்களுக்கு பெயிண்ட் பூசும் ஆட்களும் வந்து வேலையை தொடக்கிவிட்டார்கள். இனி றாவியாவுக்கு ஓரிடத்தில் அமரும் அவகாசமும் பறிபோய்விட்டது. வீசிக்கொண்டிருக்கும் மெல்லிய காற்றில் பெயிண்ட் வாசமும் கலந்து பக்கத்து வீடுகளில் இருப்பவர்களுக்கு கல்யாணச் சாப்பாட்டை ஞாபகமூட்டியது.

கபூரின் மனதுக்குள் ஒரு குடைவு. முகமே சரியில்லை. உற்சாகமும் இல்லை என்னமோ போலிருந்தார்.

"என்ன மொகமெல்லாம் வாடி வதங்கினாப்போலிருக்கு. ஒடம்புக்கு ஏதுமென்டா சொல்லுங்க டொக்டருகிட்ட போகலாம்" என்று அவ்வளவு வேலைகளுக்கு மத்தியிலும் கணவனை நெருங்கி பரிவாக கேட்டாள் றாவியா.

"எனக்கு என்ன ஒடம்புக்கு? நான் நல்லாத் தான் இருக்கன்... வாய் பேசாப் புள்ள கல்யாணம்... பண்ணிக்கிட்டு வாழப்போகுது.. அதான் மனசு நெனச்சு கொஞ்சம் கவல வருது.." என்றார்.

தன் கவலையை வெளிக்காட்டாமல் ஒரு தியாகிபோல் நின்றாள் றாவியா.

ஒரு படியாகக் கல்யாணம், சாப்பாடு, மருதாணி, பாக்கு, வெற்றிலை, புது உடுப்பு, சொந்த பந்தங்களின் வரவு, செலவு எல்லாம் முடிந்துவிட்டது.

அது மாப்பிள்ளைக்கும், பெண்ணுக்கும் முதல் நாள் இரவு. "வாய் பேசா ஊமைய கல்யாணம் பண்ணிக்க ஊரில் இப்படி நாலு பேர் இருந்தால்போதும் அல்லாஹ் அள்ளிக் கொடுப்பான் இந்த ஊருக்கு செல்வத்த" என்று கல்யாணத்திற்கு வந்தவர்களில் பாதிப் பேரு மெது மெதுவாகப் பேசிக்கொண்டிருந்ததன் எதிரொலி இன்னும் இவன் காதுகளில் ஒலிக்கிறது.

நண்பர்களை வரவேற்ற களைப்பில் ஒரு வாழைப் பழத்தைக் கையில் எடுத்து தோலுரித்து மெது மெதுவாகச் சாப்பிட்டு ஒரு கிளாஸ் குளிர்பானத்தையும் குடித்துவிட்டு மேசை மீது அந்தக் கிளாஸை தலை கீழாக வைத்துச் சென்றான் இவன் தனது அறைக்கு.

வழமை போல் பொழுது புலர்கிறது. கல்யாணம் நடந்து ஓய்ந்த வீடு எப்படி இருக்கும்?

எங்கு பார்த்தாலும் சுருட்டி எறியப்பட்ட தாள்த் துண்டுகளும், வாழைப்பழ தோல்களும் கலைந்து கிடக்கும் பிளாஸ்டிக் கதிரைகளும், புதிய பெயிண்ட்டு பூசப்பட்ட சுவர்களின் சில இடங்களில் தடவப்பட்டிருக்கும் சுண்ணாம்பும், காகங்கள் வந்து தாகம் தீர்த்து அலம்பிக் குளித்துவிட்டுப் போய் சில மணி நேரம் ஆன நீர்த் தேக்கம் போல் அமைதியாக கிடந்தது வீடு.

விடியற் காலை ஆறு மணியை மீறிக் கொண்டு போகும் ஹால் மணிக்கூட்டு முட்கள்.

"டேய் மகேன்... எழுந்திருடா... உங்க வாப்பா எங்கடா படுத்திருக்காரு? காணயுமில்ல.. ஊடெல்லாம் தேடிட்டன்.. நீயும் எழும்பித் தேடு. மனிசன் எங்கடா போய்த் தொலஞ்சாரு..?" இது றாவியா.

"கொஞ்சம் பொறுங்க என்ன ஏதென்டு தெரியாம பொரியாதொங்கோ... உம்மா" என்று சொல்லியவாறு தலையணையை இரவெல்லாம் முட்டி மோதிய முகத்துடன் எழுந்தான் இவன்.

"இன்னா! வாராங்கம்மா வாப்பா" விரிந்து கிடந்த கேற்றைத் தள்ளி மெதுவாக அடைத்து விட்டு மௌனமாக வந்தார் கபூர்.

பேய் முழி முழித்தாள் றாவியா.

"மகேன் இங்க கொஞ்சம் வா.." என்று வாசலில் கேட்பாரற்றுக் கிடந்த கால் தட்டியைத் தூக்கி உதறி உள்ளிருந்த மண்ணையெல்லாம் வெளியேற்றிவிட்டு வீட்டின் இடது பக்கமாக இருக்கும் தனி அறைக்கு முன்பதாக போட்டுவிட்டு உள்ளே நுழைகிறார் கபூர்.

"என்னா வாப்பா" என்றான் இவன் அறையினுள்ளே இருந்து கொண்டு.

"தலகீழா நின்னு பாத்தா வண்ணத்துப் பூச்சிகள் வருதாமே..ஏன்டா...உன்ட ஸ்க்கூல் வாத்தியாரு சொன்னாரு.. நானும் அந்த புளிய மரத்தடிக்குப் போய் தலகீழா நின்னுட்டு தான் வர்றன் அப்புடி ஒன்டையும் காணலியடா.." என்று மகனின் காதுக்குள் குசு குசுத்தார் கபூர்.

இவனின் வாயிலிருந்து வந்தது அடக்க முடியாத சிரிப்பு. "அது...ஹி....ஹி...." சிரித்தபடி அறையை விட்டு வெளியேறுகிறான் இவன்.

"என்னயாம் வாப்பாவும் மகனும் காலமில்லாக் காலம் சிரிச்சிக் கொட்டுறயள்?" என்றாள் றாவியா நடந்துகொண்டு.

நல்ல நேரம் பார்த்து புதுத் தம்பதியினரின் அறையிலிருந்து "ங்குவா... ங்குவா.. ங்குவா..." குழந்தை அழும் சத்தம் வந்தது.

"என்னடியிது இப்பதிய புள்ள அழுற சத்தம்" என்றார்.

"அது மருமகன்ட டெலிபோன்லயாக்கும் யாரோ கோல் எடுக்குறாங்க.. நீங்களுமா தலகீழா யோசிக்கத் தொடங்கிட்டயள்?" என்று சொல்லிக்கொண்டு தன் புடவை முந்தானையை இடுப்பில் எடுத்து இறுக்கமாக செருகி நடந்தாள் றாவியா. ■

# நூல் அறிமுகம்!




## "கம்பன் கடலமுதம்"

எழுத்தாளர் முருகுப்பிள்ளை சிவநேசனின் எழுத்தில் மருத்துவர் நீரஜா ஞாபகார்த்தம் சார்பில் வெளியாகி இருக்கிறது இந்த நூல். இலக்கிய உலகில் ஆர்வமுடன் இளைஞர்களும் திளைக்க வேண்டும் என்கிற அவரது பேரவாவால் விளைந்தது இந்தப் பயிர். சமூகம் தறிகெட்டுப் போய் விடாது அறம்சார் வாழ்க்கைப் பாதையில் பயணிக்கவேண்டும் என்கிற வேணவா கொண்ட, சமூக அக்கறையுள்ள எழுத்தாளர் அவர். எங்கே இன்றைய இளைஞர்கள் திசைமாறிச் சென்றுவிடுவார்களோ என்று காலாகாலத்திற்கும் மூத்தவர்களிடம் இருக்கும் பதற்றம் அவரிடமும் இருப்பதால், அத்தகைய இளைஞர்களை இழுத்துவந்து இலக்கிய உலகில் மூழ்கடித்துவிட்டால் அவர்களைக் காப்பாற்றிவிடலாம் என்பது அவரது ஆசை. அதற்காக அவர் ஏற்கனவே முகப்புத்தகக் கணக்கு மூலமாக இளைஞர்களை இலக்கு வைத்து நவீன தொழில்நுட்பத் தாக்குதலை நடத்தினாலும் அது போதாது என்று கருதி, இரட்டைக் குழல் துப்பாக்கியாகத் தொழிற்படட்டும் என்கிற நோக்கில் தனது முகப்புத்தக எழுத்துக்களை நூலுருவாக்கியுள்ளார்.

வாசிப்புக் குறுகிவிட்டதொரு காலத்தில் இலக்கியச் சுவையை, தேனை இளைஞர்கள் நாவில் தடவிவிட அவர் எடுத்திருக்கும் முயற்சி கல்லில் நாருரிக்கும் வேலை என்பதை அவர் தெரிந்தேதான் செய்திருக்கிறார். அதற்காக அவர் எடுத்துக்கொண்டது கம்பராமாயணம். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட திருக்குறளுக்கு முன்பாக ஆயிரம் ஆண்டுகள் பழமைவாய்ந்த கம்பராமாயணத்தை தான் தெரிந்தெடுத்ததற்குக் காரணம், கதை சொல்லி புத்திபுகட்டும் வழி ஓரளவுக்கேனும் எடுபடும் என்பதால்தான் என்று அவரே சொல்லி விடுகிறார்.

கம்பராமாயணத்தில் உள்ள முதல் பாட்டிலிருந்து 181ஆவது பாட்டு வரைக்கும் இந்த நூலில் அழகிய தமிழில் சுருக்கமாக, நீண்டி முழக்காமல், முகப் புத்தகச் சுருக்கத்துடன் விளக்கம் தந்திருக்கிறார். பாடல்களையும் அவற்றுக்கான பொழிப்புரையையும் அப்படியே படித்துக்கொண்டு சென்றால் இராமாயணம் என்கிற மிகப்பெரிய இதிகாசத்தைப் படித்தோம் என்கிற உணர்வே இன்றி இலகுவாகக் கடக்கச் செய்துவிடுகின்றது அவரது எழுத்து.

இறுக்கிச் சுருக்கிச் சொல்வது சிவநேசனுக்குப் புதிதல்ல. ஆனால், அந்த இறுக்கத்துடன் இலக்கியத்தை அவர் அணுகியிருப்பது புதிது. ஏனெனில் இத்தகைய இலக்கியங்களை மணி ஐயர் போன்றவர்களின் கதாபிரசங்கங்களின் வழி கேட்டு ரசித்துக் காமுற்றவர்களின் வழித் தோன்றல்களுக்கு ஏற்றவகையில் முகப்புத்தகக் காலத்திற்கு ஏற்றபடி நறுக்கெனச் சொல்லியிருப்பது இதன் சிறப்பு.

கம்பரை, அவரது கவியை, கம்பர் இயற்றிய இராமாயணத்தை அணுஅணுவாகச் சிவநேசன் எப்படி ரசித்தார், புசித்தார் என்பதை அவரது தேன்சொட்டும் விளக்கங்களே வெளிப்படுத்தி விடுகின்றன. கம்பன் மீதிருக்கும் தனது காதலின்பால் சிலவேளைகளில் பாடலின் விளக்கத்தை கம்பனை மெச்சும் வரிகள் மேவிவிடவும் அவர் இடந்தந்திருக்கிறார். அது இலக்கிய சுவைஞர்களுக்கே உரிய பலவீனம். தாம் சுவைத்த ருசியை அடுத்தவனும் இழந்துவிடாத வகையில் பருக்கி விடவேண்டும் என்று துடிப்பது அவர்தம் வாஞ்சை. அதுவே சிலநேரம் வாசகனை இடறி விடவும்கூடும் என்பதை அவர் தனது இரண்டாவது பதிப்பில் கவனத்தில எடுத்துக்கொண்டால் சிறப்பு.

# எங்கடை சனத்தை திருத்தேலாது!

உரைச் சித்திரம்

■ நவஜோதி யோகரட்ணம்

மனிதன் தனிமையாக மகிழ முடியாது. மற்றவர்களோடு பேசி மகிழ்ந்து சிரிக்கும்போதுதான் மற்றவர்களுக்கும் அந்தச் சிரிப்புத் தொற்றி எல்லோரையும் மகிழச் செய்கின்றது.

ராஜி போன் செய்து கதைக்கத் தொடங்கும் போதே சிரிப்பு வந்துவிடும் புனிதாவுக்கு.

''இந்தக் கொரோனா வந்ததும் போதும் எங்கட சனங்கள் விதம் விதமாகச் சமைக்கிறதும் சாப்பிடுகிறதும்தான் வேலை புனிதா''

ஏதோ ஒரு கூட்டத்தில் பேசப்போன முன்னைய பிரபல நடிகர் எம்ஆர்.ராதா அவர்கள் 'ஏண்டா டே ஏண்டா கத்துறிங்கள்' என்றுதான் பேச்சைத் தொடக்கினாராம். அதே தோரணையில்தான் ராஜியும் கதையைத் தொடக்குவாள். அவள் கதைக்கிற விதத்தில் 'படா'ரென்று சிரிப்பு வந்துவிடும்.

''எங்கட வீட்டிலும் இதுதான் எனக்கு வேலையாகக்கிடக்குப் புனிதா. ஆனால் வெளிநாட்டிலிருந்து வந்த சில சனங்கள் இந்தக் கொரோனாக் காலத்தில வேலைக்கும் போக முடியாமல், இந்தப் பயலுகள் சட்டங்களையும் அடிக்கடி மாத்தி, வேலையையும் இழந்து சரியாக் கஷ்டப்படுகுதுகள். தெரியுமே? செய்திகள் பார்த்தனியே புனிதா?''

புனிதா சிரித்துக்கொண்டாள். கொரோனாவுக்குப்பிறகு ஒவ்வொரு வீட்டுக்குள்ளும் ஆளுக்கொரு ஒலி, ஒளி பரப்புக்கள் றூமுக்குள்ளால் தொடங்கி இப்போ எதைக் கேட்பது என்று தெரியவில்லை புனிதா.

''ஆனா இப்ப கொரோனா வந்ததும்போதும் வட்சப்பின்ர ஆக்கினை தாங்கேலாமல் கிடக்கு. உதுகளுக்கெல்லாம் விசர் புனிதா. தமிழ் பொம்பிளையளின்ர படத்தை உடம்பு கூசுகிறமாதிரி போடுதுகள். ஐயோ நேற்று மலேசியாவில ஒரு தமிழ் பொம்பிளையைக் கொல்லுற மாதிரி... என்னால சொல்லமுடியாது நெஞ்சு நொருங்கி நடுங்கிப்போனேன். வட்சப்பில வாறதுகளை அழிக்கவே கையெல்லாம் வலி எடுக்குது.''

''பொம்பிளைகளைப்பற்றிக் கேவலமாக வந்தா உடனும் அழிச்சிடுவன். தெரிவு செய்து பார்க்க வேண்டும் ராஜி. பல நல்ல விடயங்களையும் அனுப்புகினம்தானே!''

''சும்மா கிட புனிதா''

ராஜி போன் செய்து புனிதாவுடன் கதைத்தால் சில வேளைகளில் முழுத்தரிப்புக் கிடையாது. தற்போது தான் வாழ்ந்துகொண்டிருக்கிற லண்டன் தமிழ் மக்களின்ர புதினங்கள் அது இது என்று பலதும் பேசி மகிழும் ராஜி, மறக்காமல் தான் வாழ்ந்த கிராமத்தைப் பற்றியும் சுவையாக ஒன்றைப்பற்றிச் சொல்லாமல் போன் அமைதி பெறாது.

புனிதாவுக்கு சிரிப்பு பீறிட்டு வயிறு நோவெடுத்துவிடும்.

''ஐக்கிய ராச்சியத்தில் வேலைகள், பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் எல்லாம் ஆரம்பித்தாலும் சனங்கள் அச்சத்தோடுதான் திரியுதுகள் ராஜி. இந்தக் கொரோனோ காலத்தில் நோய் ஒருபுறம், சாவு ஒரு புறம், கஷ்டம் ஒரு புறம். அத்தோட சாப்பாடு இல்லாமல் முப்பத்திநாலு வயதுப் பெண்ணும் அவளின் ஒன்றரை வயதுக் குழந்தைப்பொடியனும் செத்துக் கிடந்ததுகளாம். எனக்கு நெஞ்சு வலிச்சுது ராஜி.''

''உண்மையாயோ புனிதா? இதென்ன கொடுமை! எங்க பாத்தனி புனிதா? பசியால செத்ததுகளோ?'' பதறிப் போய் அங்கலாய்த்தாள் ராஜி.

''பிபிசியில பார்த்தனான்''

ராஜி மிகவும் மனித நேயம் கொண்டவள். வெளிப்படையாக எதையும் கதைக்கும் சுபாவம் அவள் சொத்து. அதனால் புனிதாவின் இதயத்தில் அவள் மீது ஒரு தனி அன்பு. அவள் தொடர்ந்தாள்...

''ஏதோ சனங்களுக்குச் சாப்பாட்டுச்சாமான்கள் கொடுக்கிறமாதிரி உதவி செய்யிறது மாதிரி செய்தியில் காட்டினாங்கள்தானே புனிதா?''

''அதுவும் சிலர் செய்யினம்தான். எத்தனை நாளுக்குதான் செய்வினம் ராஜி?''


''அதுகள், அந்த 'மேர்சி பேகுமா' என்ற பொம்பிளையும் அவளின் குழந்தைப்பொடியனும் பசியால் சாகிறதுக்கு ஒரு மாதத்துக்கு முன்னர்தான் கொஞ்ச அரிசியும் சாமான்களும் கொடுத்ததாக பத்திரிகையில் போட்டிருக்கு.

''பத்திரிகையில பாத்தனியோ புனிதா?''

''இன்ரனெற்றில்தான் போட்டிருக்கு. இப்ப உடனுக்குடன் படம் எடுக்கிறதும் ஊடகங்களில போடுறதும்தானே நடக்குது? அதுவும் செத்தாக்களின்ர படங்களைப் போட்டால் பெரிய செய்திதானே!''

''புனிதா! அதுகள் எந்த நாட்டாக்கள்?''

''உகண்டாவாம். கிட்டடியிலதான் எங்களைப் போல தஞ்சம் கேட்டு வந்ததுகளாம். ஆதரவற்ற பொம்பிளையாம் ராஜி. அதோட அதுக்கு மொழிப் பிரச்சினையும் என்றால் என்ன செய்யிறது?''



''இதில என்ன புனிதா கறுப்பு வெள்ளை என்ற நிறம் இருக்கு. அதுகளும் எங்களைப்போல மனிதப்பிறவிகள். அந்தத் தாயும் பிள்ளையும் ஆ.. ஐயோ.. இதென்ன வேதனை! இந்தத் தேசத்தில... எனக்குத் தெரிஞ்சிருந்தால் நான் வீட்டில சமைக்கிறதுகளைக் கொண்டுபோய்க் கொடுத்திருப்பேனே!''

''அந்தப் பொம்பிளை பாவம் ராஜி. ஐக்கிய ராச்சியச் சட்டப்படி வேலை செய்யிற அனுமதிப் பத்திரம் காலாவதியாப் போயிட்டுது என்ற குற்றமாம். அதால அந்தப் பொம்பிளைக்கு வேலை செய்யிற உரிமை இல்லாமல் போச்சாம். இந்தக் கொரோனா வந்ததால அதுகள் எங்க வெளியிலயும் போகேலாது. வீட்டிற்குள் முடக்கினால் அதுகள் என்ன செய்யுங்கள்? பசியால் சாப்பாடு இல்லாமல் அநியாயமாக அதுகளின்ர உயிர் போயிட்டுது. இந்தக் கொடுமை யாருக்கும் வரக்கூடாது ராஜி''

''கேட்கவே வெட்கமாயிருக்கு புனிதா''

''ஓம் ராஜி! ஒரு ஒழுங்கில்லாத செயலுகளால இளம் தாயும் மகனும் உயிரிழந்திட்டுதுகள். அதுகளுக்கு கொரோனாத் தொற்று வந்திருந்தால் அதாலதான் செத்தது என்று செய்திகள் வந்திருக்கும். அதுக்குள்ள செய்திகளைச் சோடிச்சிருப்பினம்.''

''ஊடகங்கள் தங்களது பொய்த் துயரங்களைப் பரப்பாமல் இருக்கட்டும்!'' ராஜி கவலையோடு வெளிப்படுத்தினாள்.

இந்தக் கொரோனோவால் எத்தனை விதமாகின்றது சனங்களின் சோகங்கள்.

''கொரோனாவில் சனங்களின் கஸ்டங்களைப் பார்த்த மன்சிஸ்டர் புட்போல் பிளேயர் மார்கஸ் ரஷ்ஃபோர்ட் உதவ வந்திருக்கிறான். உணவுக் கஷ்டம் உள்ள குடும்பங்களுக்கும், மாணவர்களுக்கும் உணவுப் பொட்டலங்களும் உணவுகள் வழங்கும் திட்டங்களை முன்னெடுக்கப் போறானாம். பெரிய செய்தியாகக் கதைக்கினம் ராஜி.''

''அதுவும் துன்பப்பட்டு வளர்ந்த பிள்ளையாக்கும் புனிதா''

சரியாச் சொன்னாய் ராஜி. ரஷ்ஃபோர்ட்டும் ஆதரவற்ற தாயோடு மட்டும் இருந்து வளர்ந்த பிள்ளையாம். அவனும் சின்னப் பிள்ளையா இருக்கேக்க சரியான வறுமையாம். சாப்பாட்டுக்குக் கடும் கஷ்டமாம். இப்ப அந்தப் பையன் என்னமாதிரி பெரிய விளையாட்டு வீரனாக வந்திட்டான் ராஜி. என்ர மகன் மாதிரித்தான் அவனுக்கு இருபத்திரண்டு வயதுதான்.

இப்ப கொரோனா காலக் கோடை விடுமுறையில் வறுமையில் வாழும் பள்ளிக்கூடப் பிள்ளையளுக்கு இலவச உணவு வவுச்சர்கள் வழங்கப்படும் என்று அறிவிச்சிருக்கிறான்.. அப்படியான உதவிகளை அரசால செய்யேலாது என்று சொன்ன எங்கட பிரதமரையெல்லோ தலைகுனிய வைச்சிட்டான்.''

''பாத்தியே புனிதா? அந்தப் பிள்ளை தான் பட்ட கஷ்டத்தை உணர்ந்து தன்ர வருமானத்தை இப்படி ஒடுக்கப்பட்ட சனங்களுக்கு கொடுக்க முன்வந்திருக்கிறான். எங்கட பிள்ளைகளும் இப்படி நடந்தால் எவ்வளவு மனதுக்கு ஆறுதலாக இருக்கும்?''

''கடைசியாக எங்கட பிரதமர் பொறிஸ் ஜொன் சனும் மார்கஸ் ரஷ்ஃபோர்ட்டிற்கு வாழ்த்தும், நன்றியுமெல்லே சொல்லியிருக்கிறார் ராஜி. அதோட நிக்காமலுக்கு லண்டனில் வைத்தியசாலையில் வேலை செய்த ஆட்களுக்கு வியாழக்கிழமைகளில மாலை எட்டு மணிக்கு கைதட்டி நன்றி சொன்ன மாதிரி இந்தப் பெடியன் ரஷ்ஃபோர்ட்டுக்கும் ஒரு நாளைக்கு கைதட்டலாம்தானே!''

''ஓம் ராஜி. பிதமருக்கு ஒருக்கா போன் பண்ணிக் கதைச்சுப் பாப்பமே!''

''உனக்கு நான் ஏதும் சொன்னால் ஒரே பகிடியும் சிரிப்பும்தான் புனிதா. இண்டைக்கு ஒரு கதை கேள்விப்பட்டனான் தெரியுமே! இந்தக் கொரோனாவுக்குத் தனியச் சின்னக்கடை வச்சிருக்கிற முதலாளிமாருக்கு அரசாங்கம் ஒரு தொகை காசு கொடுத்து உதவினாங்களாம். சில முதலாளிமார் நியாயமாக சனத்துக்கு விற்றார்களாம். ஆனால் சில எங்கட முதலாளிமார் இந்த உயிர்போற நேரத்திலகூட கொள்ளை லாபம் வைத்து விற்றதோட அங்க வேலை செய்யிறதுகளுக்கும் சம்பளத்தை சரியாக் கொடுக்காமல் அதைத் தங்களுக்குள்ள அமுக்கிப் போட்டாங்களாம்''

''பார்த்தியே எங்கட சனத்தின்ர விளையாட்டை. சீ.. இதுகள் என்ன மனிசரப்பா?''

''அந்தக் காசில இலங்கையில தங்கட ஊரில கட்டடங்கள் கட்டி எழுப்பிக்கொண்டிருக்கினமாம் புனிதா''


''எங்கட சனத்தை திருத்த ஏலாது ராஜி. கொரோனா அமைதியாக உலகத்தை மிகக்கொடுமையாக ஆட்டிப்படைத்தாலும் ஆசையை மட்டும் எங்கடையாக்கள் விடாதுகள். எறும்புகள், தேனீக்கள், கறையான்கள் இதுகளெல்லாம் சேமிச்சு சேமிச்சு கடைசியாக எல்லாத்தையும் பறிகொடுக்கிறது தானே நடக்குது! ஏன் எங்கடையாக்களுக்கு இது விளங்குதில்ல?''

''எனக்கு இப்போ ரஷ்ஃபோட் மாதிரி பெரிசா இல்லாட்டிலும் சமைக்கிற சாப்பாட்டில வசதியில்லாதவைக்கும் குடுக்கவேணும் போல இருக்குது புனிதா''

''நல்ல யோசனை வந்துட்டுது உங்களுக்கு. சின்ன சின்ன உதவிகள்கூட சிறப்பான விசயம் தான் ராஜி''

# எலிகளை உயிர்ப்பூட்டிய விஞ்ஞானிகள்...!

முதுகெலும்பில் காயங்கள் ஏற்பட்டு அதன் காரணமாக முடங்கிப் போன எலிகளை மீண்டும் நடக்க வைப்பதற்கு ஜேர்மனிய ஆராய்ச்சியாளர்கள் மேற்கொண்ட முயற்சி வெற்றியளித்துள்ளது என்கிற விஞ்ஞான உலகின் தகவல் உங்களுக்குப் புதிதாக இருக்கலாம். பாலூட்டிகளில் சரி செய்யமுடியாததாகக் கருதப்படும் இந்த முக்கிய நரம்பியல் இணைப்பைப் புரதத்தைப் பயன்படுத்தி விஞ்ஞானிகள் சாத்தியப்படுத்தியுள்ளனர் என்கின்றன ஆங்கில ஊடகங்கள்.



இந்த முன்னேற்றமானது இனி மனிதர்களுக்கும் கரம் கொடுக்கலாம் என்பது அனைவரினதும் கணிப்பு. அதாவது குறிப்பிட்ட வயதுக்குமேல் மனிதர்களுக்கு முதுகெலும்புப் பிரச்சினை உண்டாகிறது, பெரும்பாலும் விளையாட்டு அல்லது போக்குவரத்து விபத்துக்களால் காயங்கள் ஏற்படுகின்றன. இதனால் வாழ்க்கையே முடங்கிப்போகின்றது. தசைகள் மற்றும் மூளைக்கு இடையில் தகவல்களைக் கொண்டு செல்லும் நரம்பு இழைகள் மீண்டும் வளர முடியாதுபோவதால் பெரும் பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது.

இந்த நிலையில்தான் ஜேர்மனியின் ரூர் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் முடங்



கிப்போன எலிகளின் நரம்பு செல்களைப் புரதத்தைப் பயன்படுத்தி மீளுருவாக்கம் செய்துள்ளனர். இதன்மூலம் புரதத்தைக் கொண்டு உருவாகும் நரம்பு செல்களைத் தூண்டுவதற்கு மட்டுமல்லாமல், அது மேலும் (மூளை வழியாகவும்) தொழிலாற்றுவது தெரியவந்துள்ளது. இந்த விஞ்ஞான வழியில் அதிக எண்ணிக்கையிலான நரம்புகள் தூண்டப்படுவதால் பாதிக்கப்பட்ட எலிகள் மீண்டும் நடக்கின்றன.

முடங்கிக் கிடந்த கொறித்துண்ணிகளுக்கும் இந்தச் சிகிச்சையளிக்கப்பட்டபோது அவையும் இரண்டு மூன்று வாரங்களுக்குப் பிறகு நடக்க ஆரம்பித்துள்ளன. ஹைப்பர்-இன்டர்லூகின்-6 எனப்படுகின்ற புரதத்தை உற்பத்தி செய்வதற்காக மரபணுத் தகவல்களின் கூட்டுகளை மூளைக்குள் செலுத்துவதே இந்தச் சிகிச்சை என்கின்றது இந்த ஆராய்ச்சிக் குழுவின் இணையத்தளத் தகவல்.

இந்தப் புதிய முறை எலிகள் மற்றும் கொறித்துண்ணிகளுக்குப் பயனளித்தாலும் மனிதர்களுக்குப் பாதுகாப்பானதா என்பதை உறுதிப்படுத்த வேண்டும் என்பதும் அந்தக் குழுவின் தகவல்தான்...!






# கெழுத்தி முட்டைப் பொரியல்...!

என்ன இது கெழுத்தி முட்டைப் பொரியல்...? கோழி முட்டைப் பொரியலை உண்கிற எமக்கு இது விநோத முட்டைப் பொரியலாக இருக்கிறதே...? என்கிற எண்ணம் உங்களுக்குள் எழுந்திருக்கும். ஆம்...! இது யாழ்ப்பாணக் கிராம மக்கள் குழுமம் ஒன்றின் தனித்துவமான உணவு. இதன் சுவை அலாதியானது.

சாதாரண கோழி முட்டைப் பொரியலை விடவும் உன்னத சுவையைத் தருவது. சாவ கச்சேரி, கச்சாய், கிளாலி, கெற்பேலிக் கரையோர மீனவர்கள் சமூகத்திலும் கோவிலாக்கண்டி, தனங்களப்பு, மறவன்புலவுக் கரையோர மீனவ சமூகத்திலுமாக இந்த உணவு வகை பிரபல்யம் பெற்றது.

குறித்த பகுதிக் களப்புக் கடற்கரைகளையொட்டிக் கிடைக்கின்ற (சாவாகச்சேரி ஈறாக ஆணையிறவு, பரந்தன் வரையும், மறுபுறம் சங்குப்பிட்டிப் பகுதி, தனங்களப்பு, மறவன்புலவு, கோவிலாக்கண்டிக் கடல் வரையும்) கெழிறு என்கிற மீன் வகையே இந்த உணவின் தோற்றத்துக்கு முக்கிய காரணம். வருடம் முழுதும் இந்தக் கெழுத்தி மீன் கிடைத்தாலும், சில பருவங்களில் மாத்திரம் வயிற்றில் முட்டைகளுடன் அரிதாகப் பிடிபடுகின்ற கெழுத்தி மீனின் முட்டைகளில் இருந்தே அவ்வப்போது இந்த முட்டைப் பொரியலைச் செய்து உண்கிறார்கள் அந்தப் பகுதி மக்கள்.

ஊர்க்கோழி முட்டைப் பொரியலின் ஊட்டத்தையும், சுவையையும் இழந்து இன்றைக்கு "லக்கோன்" எனப்படுகின்ற கோழியின் முட்டையை அதிகம் உள்ளெடுக்கப் பழகிவிட்ட நமக்கெல்லாம் இந்த முட்டைப்பொரியல் ஆச்சரியப் பொருள்தான்....! இந்தக் கெழுத்தி மீன் முட்டையுடன் ஊர்க்கோழி முட்டை ஒன்றையும் கலந்தே இந்தப் பகுதி மக்கள் பொரித்துண்கிறார்கள்.

**என்னென்ன பொருள்கள் தேவை?**

இதன் முதன்மைப் பொருளான கெழுத்தி மீன் ஒன்றில் கிடைக்கின்ற முட்டைகள் அனைத்தையும் முதலில் எடுத்துக்கொள்ள வேண்டும். ஊர்க்கோழி முட்டை ஒன்று. சிறிய வெங்காயம் 50 கிராம். பொடியாக்கப்பட்ட செத்தல் மிளகாய் (கட்டத்தூள்), உப்பு, சீரகத்தூள், மிளகு தூள் ஆகியன தேவையான அளவு. மரக்கறி எண்ணை பொரித்தெடுக்கத் தேவையான அளவுக்கு.

**எப்படிப் பொரிக்கிறார்கள்...?**

கெழுத்தி முட்டைகள் சிறியளவானவை. நூற்றுக்கணக்கில் ஒரு திரட்சியாக இருக்கும். அவற்றைக் கைகளால் நன்கு பிசைகிறார்கள். பிசைந்த பிற்பாடு ஊர்க்கோழி முட்டையைச் சேர்ந்துக் கலக்கிறார்கள் (பொரிப்பதற்கு முட்டை அடிப்பதுபோல). பிற்பாடு வழமையான முட்டைப்பொரியலைத் தயார்செய்வதுபோல வெங்காயம், செத்தல் மிளகாய்த்தூள், சீரகத்தூள், மிளகு தூள், உப்பு ஆகியனவற்றைக் கலந்து அடிக்கிறார்கள். பின்னர் முட்டைப் பொரியலைவிடவும் மெலிதாகப் பொரித்தெடுக்கிறார்கள். அவர்களின் குடும்ப அங்கத்தவர்களின் தொகை கிட்டத்தட்ட 7 பேர் அல்லது அதைவிடவும் அதிகம் இருப்பதால் அவர்கள் அனைவருக்கும் தேவையான அளவுக்குத் தோசையைப்போல மெலிதாக இதைப் பொரித்தெடுக்கிறார்கள். கிடைத்தால் ஒருதடவை சுவைத்துப்பாருங்கள். ஊட்டமும் சுவையும் மிகுந்த உணவு இது.



# கலியுகத்தில் கால்பதிக்கிறார் “மாறா” நாயகி...!

கலியுகம் என்பது பிரபு, ரகுவரனின் நடிப்பில் 1988ஆம் ஆண்டு வெளி வந்த திரைப்படம். அதே பெயரில் புதிதாக வரவிருக்கிறது மற்றொரு கலியுகம் என்கிற படம். பிரமோத் என்பவரின் இயக்கத்தில். அதில் அண்மையில் வெளியாகி வரவேற்பைப் பெற்ற “மாறா” திரைப்படத்தின் நாயகி முதன்மைப் பாத்திரம் ஏற்கிறார் என்கிற தகவல் வெளியாகியுள்ளது.

மாறா திரைப்படத்துக்கு முன்னர் நேர்கொண்ட பார்வை திரைப்படத்தில் நடித்ததன் மூலம் பிரபலமான ஷ்ரத்தா ஸ்ரீநாத் தான் இதிலும் நடிக்கவுள்ளார். முன்னணி நடிகர் அஜித் நாயகனாக நடித்திருந்தாலும் பிங் என்கிற ஹிந்திப் படத்தின் மறுஆக்கமாக வெளியாகிய நேர்கொண்ட பார்வையில் ரசிகர்களைக் கவர்ந்த பெண் பாத்திரமாக ஷ்ரத்தா ஸ்ரீநாத் இருந்தார். இந்த நிலையில்தான் அவருக்கு மற்றுமொரு பட வாய்ப்புக் கிடைத்துள்ளது.

அதுபோக அண்மையில் வெளியாகிய மாறாவில்கூட அதிகம் சிலாகிக்கப்பட்டார் அவர். விறு விறுப்பான திகில் படப் பாணியில் இதன் திரைக்கதை இருக்கின்றது என்றும் இதுபோன்ற படங்களில் நயன்தாரா, அனுஷ்கா, சமந்தா, அமலாபால் என முன்னணி நாயகிகள் நடித்திருந்தாலும் ஷ்ரத்தா ஸ்ரீநாத்தின் நடிப்பு அவர்களில் இருந்து வேறுபட்டு வித்தியாசமாக அமையும் என்றும் அவரது இரசிகர் பட்டாளம் பெரு ஆவலில் இருக்கிறது....!



# அழகுக்கு அழகு சேருங்கள்



சண்முகதேவி கௌரிதரன்
(அழகுக் கலை நிபுணர்)



**அரிசி மாவைப் பயன்படுத்தி முக அழகு பெறுவது எப்படி என்பதைப் பற்றி இந்த வாரம் பார்க்கலாம்.**

நாள் முழுவதும் வெயிலில் அலைந்து திரிப வர்களுக்கு வெயிலின் கோரத்தினால் சருமம் கறுத்து முகம் அழுக்குப் படிந்து பொலிவிழந்து காணப்படும். இவ்வாறு வெயில் காலத்தில் ஏற்படும் சரும பிரச் சினையைச் சரி செய்ய அரிசிமா ஒரு சிறந்த அழகு சாதன பொருளாக விளங்குகிறது.

அரிசி மாவுடன் வேறு சில பொருள்களைச் சேர்த்து முகத்தில் பூசி வருவதனால் கருமைகள் அனைத்தும் நீங்கி முகம் அழகுடன் காட்சிய ளிக்கும்.



ஒரு சுத்தமான பாத்தி ரத்தில் மூன்று கரண்டி அரிசிமா, சிறிதளவு மஞ்சள் தூள், ஒரு கரண்டி எலுமிச்சை சாறு இவை அனைத்தையும் ஒன்றா கச் சேர்த்து நன்றாகக் கலந்து கொள்ள வேண்டும். பின்னர், இந்தக் கலவையை முகத்தில் நன்றாகப் பூசவேண்டும். 15 நிமி டங்கள் வரை காய வைத்து பின் முகத்தை குளிர்ந்த நீரால் கழுவ வேண்டும். இவ்வாறு தொடர்ந்து செய்து வந்தால் முகம் பொலி வடைவதுடன் பளிச் சென்று அழகாகக் காட்சியளிக்கும்.

மேலும், எலுமிச்சைச் சாறுக்குப் பதிலாகத் தயிர், தேன், கற்றாழைச் சாறு போன்றவற்றைப் பாவித்து அரிசிமாவுடன் கலந்து பூசி வந்தால் கரும்புள்ளிகள், பருக்கள் இல்லாமல் மறைந்துவிடும். அத்துடன் வாழைப்பழம் சில துண்டுகள் விளக்கெண்ணெய் (ஆமணக்கு எண்ணெய்) சிறிதளவு போன்றவற்றையும் அரிசி மாவுடன் சேர்த்து கலந்து பூசினால் கரு வளை யம் போன்றனவும் நீங்கி முகம் அழகு பெறும்..!!

## இந்த வார சுடோக்கு - 25



| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 6 | | | | 9 | | 8 | 5 |
| 9 | 4 | | | | 6 | | | 2 |
| | 8 | 1 | | | 4 | | | 3 |
| 6 | | | | | | 1 | | 8 |
| | | | | 3 | | | | |
| 2 | | 8 | | | | | | 9 |
| 3 | | | 1 | | | 8 | 4 | |
| 8 | | | 6 | | | | 5 | 7 |
| 4 | 7 | | 2 | | | | 3 | |

இந்த சுடோக்கு விளையாட்டு தர்க்க ரீதியாக எண்களை ஒரொழுங்கில் அடுக்கு வதற்கானது. நேராகவும் கிடையாக வும் 9 பெட்டிகளைக் கொண்டுள்ள இந் தச் சதுரத்தினுள் ஒவ்வொரு சிறிய பெட்டி யினுள்ளும் 1 முதல் 9 வரையான ஒரு எண் இடப்பட வேண்டும். பெரிய பெட்டியின் கிடை மற்றும் நேர் வகிடு களிலும் இரண்டாவது மற்றும் மூன்றா வது நிலைப் பெட்டிகளின் நேர் மற்றும் கிடை வகிடுகளிலும்கூட ஒரு எண் இரட் டிப்பாகக்கூடாது என்பதே விதி. முயற்சி செய்து பாருங்கள். சரியாக நிரப்பி விட்டீர் களானால் அதனை அப்படியே வெட்டி

**செம்மண்**
சுடோக்கு,
551 A, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்

என்னும் முகவரிக்கு, உங்கள் முழுப் பெயர், வயது, தபால் முகவரி, தொடர்பு எண் என்பவற்றுடன் அனுப்பி வையங் கள். சரியாக எழுதி வெற்றிபெறும் ஒரு அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 250 பரிசாக வழங்கப்படும். விடையும் வெற்றிபெற்ற வரின் விவரங்களும் அடுத்தவார பத்தி ரிகையில் வெளியாகும். வெற்றிபெற்ற வர் பரிசுத் தொகையை செம்மண் அலு வலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

கடந்த வாரம் வெளியாகிய சுடோக் கிற்கான விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 7 | 1 | 6 | 9 | 3 | 2 | 4 | 8 |
| 9 | 3 | 6 | 2 | 8 | 4 | 1 | 7 | 5 |
| 8 | 4 | 2 | 5 | 1 | 7 | 6 | 3 | 9 |
| 7 | 8 | 9 | 3 | 2 | 5 | 4 | 6 | 1 |
| 2 | 6 | 5 | 1 | 4 | 9 | 7 | 8 | 3 |
| 3 | 1 | 4 | 7 | 6 | 8 | 5 | 9 | 2 |
| 1 | 5 | 3 | 9 | 7 | 6 | 8 | 2 | 4 |
| 4 | 9 | 7 | 8 | 5 | 2 | 3 | 1 | 6 |
| 6 | 2 | 8 | 4 | 3 | 1 | 9 | 5 | 7 |

குறிப்பு:
**கிறீன் மீடியா கவுஸ் நிறுவனத்தின் ஊழியர்கள் மற்றும் சக நிறுவன ஊழி யர்கள் இப் போட்டியில் கலந்துகொள்ள முடியாது.**

## எங்களை நாங்களே...

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

பண்ணி அதைவிட குறைஞ்ச விலைக்கு கேக்க விடுவான், அப்பிடி கேக்கேக்க நான் முதல் கேட்ட வனுக்குத்தானே குடுத்திட்டு வருவன்.. உப்பிடி எங்களுக்குள்ள நாங்களே ஏமாத்திக் கொண்டும், துரோகம் செஞ்சு கொண்டும் இருந்தம் எண்டா நாங்கள் எங்க முன்னேறுறது..??"

"இண்டைக்கு ஒருத்தன் முன்னுக்கு வாறான் எண்டா அவனை எங்க விழுத்தலாம் எண்டு தான் நினைக்கிறாங்களே தவிர, அவன் இன்னும் முன்னேற என்ன வழி எண்டு சொல்லுறாங்கள் இல்ல.. சொந்தத்துக்க ஒருத்தன் குளப்படியா இருந்து திடீரெண்டு மாறி நல்லமாதிரி வந்திட் டான் ஏண்டா, அவனை எங்க குத்திக் காட்டலாம், அவன்ல என்ன குறை பிடிக்கலாம் எண்டுதான் நினைக்கினம்.. இப்பிடி நாங்களே எங்களுக்குள்ள புடுங்குப்பட்டுக் கொண்டிருந்தா என்னெண்டு முன்னுக்கு வாறது.. எல்லா விதத்தாலையும் எதிர்பும், குழப்பமும் எண்டு வந்துகொண்டிருந்தா எதிர்கொள்ளுறவனும் இன்னும் வேகமாத்தான் ஓடிக் கொண்டிருப் பான்.."

தனது இனம், தனது மக்கள், தனது மண் என்று ஆறாக் காதல் கொண்டி ருக்கும் மகேந்திரத்தா ருக்கு கொட்டித் தீர்ப்ப தற்கு இன்னும் நிறைய ஆதங்கங்கள் இருக் கின்றன.

(தொடரும்)

## சித்திரமே...

(17ஆம் பக்கத் தொடர்ச்சி)

களிலும் துணிகளிலும் படரத் தொடங் கின. இன்று நவீன டிஜிட்டல் சாதனங் களில் அவற்றின் ஆதிக்கம் மிக அதி கம்.

எங்கள் சிறுவர்கள் கண்கொட்டப் பார்க்கும் கார்ட்டூன்களும் எம்மை வாப் பிளக்க வைக்கும் அனிமேஷன் திரைப் படங்களும் அன்று குகை மனிதர்கள் சொன்ன சித்திரக் கதைகளின் புதிய வடி வங்களே!

இவற்றை எவ்வாறு உருவாக்குகிறார்கள்? அச்சில் வரும் சித்திரக் கதைகளுக்கும் அசை வுறு (அனிமேஷன்) படங்களுக்குமான தொடர்பு என்ன? வரும் வாரங்களில் பேசுவோம்!

அடுத்தவாரம் - 'இரும்புக்கை' மாயாவி!





அண்ணா
விரைவுப் பொதிகள் சேவை

3-6 நாட்கள்

077 8889388
075 3305500
070 3305500

லண்டன் ⇨ 1000/=

15,000 /= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்

லண்டன்,பிரான்ஸ்,ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை

உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும். (யாழ் மாவட்டம் முழுவதும்)

எம்முடன் இணைந்து உங்களிடத்தில் பொதிகள் சேவை தொடங்குவதாயின் தொடர்புகொள்ளவும்

யாழ்ப்பாணம்
சங்கானை
கல்வியங்காடு
ஆவரங்கால்
நெல்லியடி

சங்கத்தானை
பளை
கிளிநொச்சி
புதுக்குடியிருப்பு
முல்லைத்தீவு

கனகராயன்குளம்
மல்லாவி
மன்னார்
வவுனியா
கொழும்பு

செம்மணி





## சம்பந்தர் கடையடிச் சமா...

மாரி முடிஞ்சுதெண்டதால இப்ப கொஞ்ச நாளாப் பிந்தி இருட்டிறது எங்கள் தரவளிக்கு நல்ல வாய்ப்பாய்ப் போச்சுது பாருங்கோ...

இப்ப ஒவ்வொரு நாளும், சமா முடிஞ்சு போறதுக்கு லேட் ஆகுது... ஆனால் வீட்டில ஒரு பிரச்சினையும் இல்ல பாருங்கோ... நல்ல பிள்ளையளப் போல எல்லாரும் இருட்டுறதுக்குள்ள வீடுகளுக்குப் போய்ச் சேர்ந்திடுவம்.... இங்க அலட்டுறதுக்கு எங்களுக்கு இப்ப பெரிசா ஒண்டுமில்லையுங்கோ...

"அண்ணை என்ன மாதிரி மணியின்ற பட்ஜெட்" எண்டு தொடங்கினான் சுப்பன்...

"சும்மா போங்கோடாப்பா.... நெடுக உதைப் பற்றிக் கதைச்சு என்னாகப் போகுது...?"

"இல்லயைண்ண ஒண்டச் சொன்னால்... அது முடியும் மட்டும் அப்டேட் இல்லாட்டி... பத்தியப்படாது... சொல்லண்ண... சொல்லு..." அந்தரம் பிடிச்சான் அப்பன். பூராயமெண்டா எங்கட ஆக்களுக்கு அவல் தான் பாருங்கோ...

"மணியின்ர பட்ஜெட் வெல்லும் எண்டுதான் நானும் நம்புறன்... ஆனாலும் முன்னாள் முதல்வர் கொஞ்சம் குழப்பப் போகுது போலதான் கிடக்குது... அவர் தானும் பெரும் புத்திசாலி எண்டு கடுமையாக் காய் நகர்த்திக்கொண்டிருக்கிறாராம்.

சைக்கிள் கோஸ்டியில இருக்கிற 3 பேரையும், தன்ர ஆக்கள் 16 ஓட... யூ.என்.பி, விஜியகாந் எண்டு மொத்தம் 23 பேரைத் தனக்கு ஆதரவா வைச்சிருக்கிறன் எண்டு நம்பிக்கொண்டு பட்ஜெட்டை எதிர்க்கிறதுக்குக் காய் நகர்த்துறாராம்...."

"பொறண்ணை... பொறு.... உதில ரெண்டு சந்தேகம் எனக்கு....."

"என்னடாப்பா...? சொல்லு...!"

"அண்ணை...! அண்டைக்கு முன்னாளை முதல்வராத் தெரிய வேண்டாம் எண்டு கட்சிக் கூட்டத்தில நிண்ட அந்த மூண்டு பேரும் இந்த முறையும் அவற்ற திட்டத்தை எதிர்த்தா என்ன செய்வார்...? அதுக்குள்ள... அந்தப் போட்டோத் தம்பி வேற சபை கலைய விடக் கூடா எண்டு ரகசியமா ஆள் சேர்க்குதாம்.... அப்பிடி இருக்க அவர் எப்பிடி பட்ஜெட்டைத் தோக்கடிக்கப் போறார்....? மற்றது... அண்டைக்கு குளப்பின அந்த மெம்பர் இண்டைக்கு ஆதரவளிப்பார் எண்டு இவர் எப்பிடி எதிர்பார்க்கிறார்....?"

"ஓம் தம்பி... நீ கேக்கிறதும் சரிதான்... உன்ர சந்தேகம் உங்க கனபேருக்கு இருக்கு.... அதுதான் அவரின்ட ராஜதந்திரம்.... தன்ர கட்சிக்காரர் எல்லாரும் தான் சொல்லுறபடி கேக்க வேணும் எண்டதுக்காக... சீனியரையும் கூட்டுச் சேர்த்துக்கொண்டு... வெருட்டல் வேலையள்ள இறங்கி இருக்கிறாராம்.... அண்டைக்கு முதல்வர் தேர்தலுக்கு வாக்களிக்காம விட்ட மெம்பருக்கு எதிரா அக்ஷன் எடுக்க வேணும் எண்டு கட்சித் தலைமைக்கு குடுக்கிறதுக்காக மற்ற மெம்பர் மாரிட்டைக் கையெழுத்து வாங்கிக்கொண்டு திரியுறார்.

அதுகும், தான் ஒண்டும் தெரியாத பாப்பா.... எண்டது போல முன்னாள் ஈ.பி.டி.பி. மெம்பர் - இப்ப கூட்டமைப்பில மெம்பரா இருக்கிற ஒருத்தரிட்டை கடிதத்தை அடிச்சுக் குடுத்து கையெழுத்து வாங்கி வாங்கோ எண்டு அனுப்பி இருக்கிறாராம்.... தமிழரசுக் கட்சியில இருக்கிற 10 பேரில நாலு பேர் அந்தக் கடிதத்தில கையெழுத்து வச்சிருக்கினமாம்.... மிச்சப் பேரில நாலு பேர் கையெழுத்து வாங்க வந்தவருக்கு லெப்ற் அன்ட் ரைட் குடுத்து அனுப்பிப் போட்டினமாம்...."

"அண்ணை! உவற்ற கடிதத்தை வச்சு... கட்சி என்ன நடவடிக்கை எடுக்கும்? அட தம்பியா.... கட்சி நடவடிக்கை எடுக்க முன்னம் ஒண்டைப் பாக்க வேணுமெல்லே.... மொத்தம் 10 பேரில நாலு பேர் - இவரைச் சேர்த்தாலும் 5 பேர் கையெழுத்து வச்ச கடிதத்தை எப்பிடி ஏற்கிறது? மிச்சம் அரைவாசிப் பேர் கையெழுத்து வைக்கேல்லையெல்லே?

அதை விட... கையெழுத்து வைக்காத மெம்பர் ஒருத்தர் அண்டைக்கு கட்சி தோத்ததுக்கு... தலைமைதான் பொறுப்பெடுக்க வேணும் எண்டு வேற எழுதிக் குடுத்திருக்கிறாராம்... அதை விட கட்சி நடவடிக்கை எடுக்கிறதெண்டாலும்... மத்திய குழு கூடாம நடவடிக்கை எடுக்கேலாதாம்.... பொதுச் செயலாளர்தான் விளக்கம் கேக்க வேணுமாம்...."

"அண்ணை! உதெல்லாம் தெரியாமலே... முன்னாள் கடிதத்தில கையெழுத்துச் சேர்க்குது?"

"அதில்லைத் தம்பி... கட்சி நடவடிக்கை எடுக்காட்டியும் ஒரு வெருட்டு வெருட்டுறதுக்குத்தான் உந்த வேலை.... சரியோ பிழையோ... பட்ஜெட்டை எதிர்க்கிறது எண்டு கட்சி சொன்னால்... யாராவது மாறிவிடக் கூடாது எண்டதுக்காகத் தான் உந்தக் கடிதம்.... ஆரும் மாறினியளோ... உங்களுக்கும்.... உதுதான் நிலமை.... எண்டு காட்டப் பாக்கிறாராக்கும்...

ஏன் தெரியுமே... இப்பிடியே மணியை ஆட்சிக் கதிரையில விட்டா.... பழைய கணக்குகளைப் பாத்து, தன்னைப் பிழையான ஆளாக் காட்டிப் போட்டால் என்ன செய்யிறது எண்டு பயம்தான் எல்லாத்துக்கும் காரணம். தான் கட்டுற வீட்டுக்கும்.... இறக்கி காபரில வந்து நிக்கிற காருக்கும் கணக்கு கேட்டால், இனி அங்க இஞ்ச எண்டு பிச்சுப் பிடுங்கி எல்லாத்தையும் சமாளிக்கிறது கொஞ்சம் கரைச்சல்தானே! சபையைக் கலைச்சு விட்டுட்டா உந்தச் சங்கடங்கள் எல்லாம் இல்லைத்தானே!

எப்பிடி எங்கட ஐயான்ர பிளான்?"

சரி இருட்டுது நான் வாறன் போட்டு.

- ஆதிரன்.

# மெல்ல கபளீகரம்...

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒருவரின் பங்குபற்றுதலுடன் தொடக்கி வைக்கப்பட்டது.

குருந்தூர் மலைப் பகுதியில் அமைந்திருந்த ஆதிசிவன் ஐயனார் ஆலயமானது பலஆண்டுகால வரலாறு கொண்டு குறித்த பகுதி வாழ் சைவமக்களால் வழிபடப்பட்டு வந்திருந்தது. 2018ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் நான்காம் திகதியன்று குருந்தூர் மலைப் பகுதியில் புத்தர் சிலை ஒன்றினை வைக்கும் ஆயத்தங்களுடன் இரண்டு பௌத்த துறவிகள் அடங்கலான 12 பேர் கொண்ட குழுவினர் வந்திருந்தனர். அவர்களைக் குறித்த பகுதி மக்கள் மற்றும் அரசியல் பிரதிநிதிகள் இணைந்து தடுத்து நிறுத்தி அங்கிருந்து திருப்பியனுப்பினர்.

இரண்டு நாள்களுக்குள் அந்தப் பகுதி மக்கள் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. ஆய்வுப் பணியில் ஈடுபட வந்தவர்களுக்கு இடையூறு விளைவித்தார்கள் என்று அவர்கள் மீது குற்றஞ்சாட்டப்பட்டது. வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் து.ரவிகரன் உள்ளிட்ட பலர் மீது குற்றஞ் சாட்டப்பட்டது.

வழக்கை விசாரித்த நீதிமன்று தமிழ் மக்கள் குருந்தூர் மலையில் அமைந்துள்ள ஆலயத்தினை வழிபட எந்தத் தடையும் இல்லை எனத் தெரிவித்ததுடன், ஆராய்ச்சிப் பணிகள் இடம்பெற்றால் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தொல்பொருள் பீடம் சார்ந்தவர்களையும் யாழ். மாவட்ட தொல்பொருள் திணைக்களத்தவர்களையும் இணைத்துக் கொண்டு அதனை முன்னெடுக்குமாறு பணித்திருந்தது.

இவ்வாறான நிலையில், கடந்த வருடம் மார்கழி மாதமளவில் குறித்த பகுதியில் நிலஅளவை மேற்கொள்ளப்பட்டு, எல்லை நிர்ணயம் கணிக்கப்பட்டு வரைபடமும் தயாரிக்கப்பட்டிருந்தது. அதற்காகக் கொழும்பிலிருந்து அதிகாரிகள் அழைத்து வரப்பட்டிருந்தனர். அதன் பிற்பாடு கடந்த 18ஆம் திகதி அருங்கலைகள் மற்றும் கிராமிய சிற்பகலைகள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க மற்றும் தொல்லியல் திணைக்கள பணிப்பாளர் நாயகம் அனுர மானதுங்க உள்ளிட்ட குழுவினர் படையினர் பாதுகாப்புடன் குருந்தூர் மலைப்பகுதிக்கு வந்து குருந்தாசேவ பௌத்த விகாரையின் சிதைவுகள் அங்கு இருப்பதாகவும் 1932ஆம் வருடம் அரசிதழில் வெளியிடப்பட்ட விகாரையின் இடிபாடுகள் காணப்படுவதாகவும் கூறி அதனடிப்படையில் ஆய்வுகளை மேற்கொள்வதாகத் தெரிவித்து புத்தர் சிலை ஒன்று வைக்கப்பட்டு வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டது. குறித்த பகுதியில் காணப்பட்ட இந்துக்களின் வழிபாட்டுச் சின்னமாகிய சூலம் ஒன்றிருந்தது. அது இந்த பௌத்த வழிபாட்டின்போது பிடுங்கி எறியப்பட்டதாக தமிழ் ஊடகங்களும் சமூக ஊடகங்களிலும் தெரிவிக்கப்பட்டது. ஆனால் அதனை உறுதிப்படுத்தக்கூடிய தரவுகள் எவற்றையும் அவை வெளியிடவில்லை. இப்போது அந்தப் பகுதிக்குள் வெளியாட்கள் எவரும் செல்வதைத் தரைப் படையினர் தடுத்து நிறுத்தியுள்ள நிலையில் உண்மையில் அங்கு என்ன நடந்திருக்கிறது என்பதைச் செம்மண்ணால் உறுதிப்படுத்த முடியவில்லை.

இந்தச் செயற்பாடானது, முற்றுமுழுதாக நீதிமன்றினை அவமதித்துச் செய்யப்படுவதாகவும், தமிழர் பகுதிகளில் பௌத்தமயமாக்கல் இன வழிப்பின் தொடக்கம் என்றும் தமிழர் தரப்பில் குற்றச்சாட்டு எழுப்பப்படுகின்றது. இதையடுத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா சம்பந்தன் இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்கவிடம் ஒரு கோரிக்கையை முன்வைத்துள்ளார். இந்த இடத்தில் ஆய்வுகளை மேற்கொள்ளும்போது அதில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தொல்லியல் துறை பேராசிரியர்கள், மாணவர்களையும் உள்ளடக்கிக்கொள்ளுமாறு அவர் விடுத்த கோரிக்கையை அமைச்சரும் ஏற்றுக்கொண்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

◆ ◆ ◆

இந்தப் பிரச்சினை ஓய்வதற்குள் மீண்டும் தமிழர் தாயகப்பகுதியான யாழ்ப்பாணத்தின் நிலாவரைப் பகுதியில் தொல்பொருள் திணைக்களத்தினரால் மேற்கொண்ட தோண்டல் பணியும் சர்ச்சைக்குள்ளாகி இருக்கின்றது.

கடந்த 21ஆம் திகதி நண்பகல் வேளை, வலிகிழக்குப் பிரதேசபை எல்லைக்குள்பட்ட நிலாவரை ஆழ் கிணற்றின் அருகே சிங்கள மொழி பேசிய சிலர் நிலத்தைத் தோண்டத் தொடங்கியதை அடுத்தே அங்கு சர்ச்சை எழுந்தது. அந்த இடத்திற்கு வந்த பிரதேச சபைத் தலைவர் மற்றும் மக்களிடம் தாம் அந்த இடத்தில் தொல்பொருள் சான்றுகள் உள்ளனவா என்பதை ஆராய்வதற்காகக் குழிதோண்டுகிறார்கள் என்றும் தாம் யாழ். மாவட்ட தொல்லியல்துறை அலுவலர்கள் என்றும் அங்கிருந்த சிங்கள மொழி பேசியவர்கள் கூறியிருக்கின்றார்கள்.

இந்த நடவடிக்கையில் சந்தேகங்கொண்ட மக்கள் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தலைமையில் கூடி எதிர்ப்புத் தெரிவித்ததைத் தொடர்ந்து அந்த இடத்தில் புல்லுச் செருக்கும் நடவடிக்கை எடுக்கப்படுவதாகத் தம்மை தொல்லியல் அதிகாரிகள் எனக் கூறிக்கொண்டவர்கள் தெரிவித்திருக்கின்றனர். இதனால் சந்தேகம் மேலும் அதிகரிக்கவே மக்கள் எதிர்ப்புத் தெரிவித்து அவர்களை அங்கிருந்து வெளியேற்றியுள்ளனர்.

யாழ். மாவட்டத் தொல்பொருள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் நளின் வீரசிங்க தலைமையிலான அதிகாரிகளே இந்தச் சர்ச்சைக்குரிய நடவ டிக்கையில் ஈடுபட்டிருந்தனர் என்று பின்னர் உறுதிப்படுத்தப்பட்டது.

குறித்த நடவடிக்கையை மேற்கொண்டது சீருடை அணியாத படையினரே என்றும் மக்கள் எதிர்ப்புத் தெரிவிக்கத் தொடங்கியதை அடுத்து பிரச்சினைகள் ஏற்படக்கூடாது என்று தொல்பொருள் திணைக்களத்தினர் அந்த நடவடிக்கையைத் தாமே மேற்கொண்டனர் என்று பொறுப்பேற்றுள்ளனர் எனவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

கிடங்கு தோண்டி அதனுள் ஏதேனும் பௌத்த சின்னங்களை புதைத்து விட்டு பின்னர் பௌத்த சின்னங்களை மண்ணுக்குள் இருந்து எடுத்துள்ளோம், அதனால் இது பௌத்த வரலாற்றிடம் என்று தொல்பொருள் திணைக்களத்தினர் உரிமைகோரி விடுவார்களோ என்று மக்கள் அச்சம் கொண்டுள்ளனர்.

சம்பவங்களின் தொகுப்பு **என்.குமரன்**

# தடைகளைத் தகர்த்து இணையத்தில் தெறித்த நாடகம்!



> “மீள்வதற்கும் மீண்டும் நாடகங்களுக்கு உயிரூட்டுவ தற்குமான முயற்சியாகவே புதிய ஒழுங்கின் பலங்களைச் சாத்தியமாக்கிக்கொள்ள முயன்றிருக்கின்றோம்.”

கொரோனா பெருந்தொற்று முடக்கத்திலிருந்து இயல்பு வாழ்க்கைக்கு மீள்வதற்கான முயற்சிகளில் மனித இனம் தீவிரமாக இருக்கின்றது. பாடசாலைகள் தொடங்கப்பட்டுவிட்டன, நாட்டைப் பொருளாதாரச் சரிவிலிருந்து மீட்பதற்காக, ஆபத்துக்களிருந்தாலும் பரவாயில்லை என்கிற ரீதியில் வானூர்தி நிலையங்களைக்கூடத் திறந்துவிட்டார்கள். இயல்புக்குத் திரும்பும் இத்தகைய முயற்சிகளில் தீவிரம் காட்டப்பட்டாலும் புதிய ஒழுங்கின் (நியூ ஓடர்) கீழேயே அவை அனைத்தும் நடந்தாக வேண்டியிருக்கின்றது.

பொது முடக்கம் மற்றும் புதிய ஒழுங்குகளால் அதிகம் பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய துறைகளில் ஒன்று கலைத்துறை. திரையரங்குகள் மீண்டும் திறக்கப்பட்டாலும் 50 சதவீதம் பேருக்கு மட்டுமே அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. சுகாதாரக் கெடுபிடிகளுக்கு மத்தியில் திரையரங்குக்குப் போய் வில்லங்கத்தைத் தேடிக்கொள்வானேன் என்கிற மனோபாவம் விரிவாகியிருப்பதால், இணையவழி மூலம் பணம் கொடுத்துத் திரைப்படங்களைப் பார்ப்பதற்கு மக்கள் தயாராகிவிட்டார்கள். சூரரைப் போற்று, மாறா போன்ற படங்கள் அண்மையில் இவ்வாறு இணையத்தளங்கள் வழியாக வெளியாகி மக்களின் வரவேற்பைப் பெற்றிருக்கும் பெரிய படங்கள்.

ஆனால், நாடகத்துறைக்கு அந்த வாய்ப்புக்கூட கிடைக்கவில்லை. அது இன்னும் பொது முடக்கத்திலிருந்து வெளியே வரவில்லை. திரைப்படத்திலிருந்து வேறுபட்ட தனி அனுபவம் அது. பெரும் ஆளணியும் தேவைப்படும் ஒரு துறை, அதே நேரம் அந்தப் பெரும் ஆளணியும் பார்வையாளர்களும் நேரடியாகவே ஊடாடும் துறையும்கூட. அதனால் அந்த ஊடாட்டத்தின் ஊடே கொரோனாவும் தாலயம் ஆடலாம் என்கிற அச்சமோ என்னவோ நாடங்கள் இன்னும் புதிய ஒழுங்கின் கீழ் தம்மைத் தகவமைத்துக்கொள்ளாத நிலையே காணப்படுகின்றது.

இந்த நிலையில் இருந்து ஈழத் தமிழ் நாடகத்துறையை மீட்டு மீண்டும் ரசிகர்களின் கனவுகளைத் திறந்துவிட்டிருக்கின்றது செயல்திறன்



அரங்க இயக்கம். ஈழத் தமிழ் நாடக உலகில் கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாகத் தொடர்ந்து இயங்கிவரும் இந்த அரங்க இயக்கம் சிறுவர் நாடகங்களுக்குப் பெயர்போனது. அதே போன்று பல காத்திரமான அரசியல், சமூக நாடகங்களையும் தயாரித்தளித்திருக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் நல்லூர் திருவிழா காலங்களில் தொடர்ச்சியாக நாடகத் திருவிழாவை நடத்தி வந்திருக்கிறது. ஆனால், பொது முடக்கத்தின் பின்னர் கடந்த திருவிழாவில் அது இல்லை.

இதெல்லாவற்றிலிருந்து மீள்வதற்கும் மீண்டும் நாடகங்களுக்கு உயிரூட்டுவதற்குமான முயற்சியாகவே புதிய ஒழுங்கின் பலங்களைச் சாத்தியமாக்கிக்கொள்ள முயன்றிருக்கின்றோம் என்கிறார் செயல்திறன் அரங்க இயக்கத்தின் பணிப்பாளர், முன்னணி நாடக நெறியாளர் தே.தேவானந்த்.

சூம் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி நாடகங்களை ரசிகர்களிடம் கொண்டு சேர்க்கும் முயற்சியில் செயல்திறன் அரங்க இயக்கம் வெற்றியடைந்திருக்கிறது. வண்டியும் தொந்தியும் என்கிற சமூக அதிகார வர்க்கங்களை கேலியினூடாகக் கடுமையாக விமர்சிக்கும் நாடகம் 10 நாட்களுக்குள் இரண்டு தடவைகள் நிழக்த்தப்பட்டிருக்கின்றன.

"ஒளிப்பதிவு செய்யப்பட்டு நாடகங்களைத் தயாரிக்கவில்லை. மேடையில் நிகழ்வதை சூம் செயலி மூலம் ஒளி பரப்புவதன் மூலம் பார்வையாளர்களுக்கு மேடை நாடகத்தின் அதே உணர்வைக் கடத்தவே முயன்றிருக்கின்றோம்" என்கிறார் தேவான்ந்த்.

இந்த முயற்சியில் இரண்டு தடவைகளிலும் 70இற்கும் 85இற்கும் இடையிலான பார்வையாளர்கள் இந்த நாடகத்தைப் பார்வையிட்டிருக்கின்றனர்.

பிரதீபன் மற்றும் சாய்ராம் ஆகிய இரு நடிகர்களை மட்டுமே கொண்டு அரை மணி நேரம் நடக்கிறது நாடகம். தேவானந்த் நெறியாள்கை செய்திருக்கிறார். இசை விரிவுரையாளர் த.றொபேட் இசையமைத்திருக்கிறார். குளிரூட்டப்பட்ட அறைகளில் இருந்துகொண்டு அதிகாரிகள் செய்பவற்றை பெரு நடிப்புக்குள்ளாக்குவதன் மூலம் கேலிக்குள்ளாக்கி விமர்சிக்கின்றது நாடகம்.

பிரதீபன் நீண்டகாலமாக நாடகத்துறையில் இருக்கும் அனுபவம் வாய்ந்த நடிகர். அவரது நடிப்பும் அங்க அசைவுகளும் நாடகத்திற்குப் பெரும் பலம். சாய்ராம் அவருக்கு ஈடுகொடுக்க முயற்சிக்கிறார்.

குறுகிய அறை, குறைந்தளவு சாதனங்கள், மட்டுப்படுத்தப்பட்ட ஒளி ஒலி வளங்கள் என்று போதாமைகள் அதிகம் இருக்கின்ற போதும் தடைகளைத் தகர்த்து இணையத்தைத் தெறிக்க விட்டிருக்கின்றது இந்த முயற்சி.

நாடகங்களைப் பார்ப்பதே அருமை என்கிற ஈழத் தமிழ்ச் சூழலில் அவை முற்றிலும் காணாமற்போய்விட்ட நிலையிலிருந்து அதனை மீட்டெடுத்து, எல்லைகளைத் தாண்டி, நாடுகளைத் தாண்டி புலம்பெயர் தமிழர்களையும் தமிழகத் தொப்புள் கொடி உறவுகளையும்கூட அரங்கக் களத்தில் இணைக்க முடிந்திருப்பது பெரும் பாய்ச்சல். இது இன்னும் பல முயற்சிகளுக்கும் உந்து சக்தியைக் கொடுக்கும் என்று நம்பலாம்.

நாமும் நமக் கென்றோர் நலி யாக் கலையுடையோம் என்ற மகா கவியின் வாக்கியங்களை அனைவரும் அறியும் வகையில் சாத்தியமாக்கியிருக்கிறது செயல்திறன் அரங்க இயக்கம்.

சூம் செயலி வழியிலான அபத்தங்களுக்கு இங்கும் குறைவில்லை என்ற போதும் வருங்காலங்களில் தொழில்நுட்ப வல்லுநர்களையும் சேர்த்துக்கொண்டு இன்னும் மேம்பட்ட ஆற்றுகைகளை உலகத் தமிழர்களுக்காக செயல்திறன் அரங்க இயக்கம் வழங்க வேண்டும். ■

---

# மருந்துக்குக் கட்டுப்படாத கொவிட் -19

● மருத்துவர் **சி.யமுனாநந்தா**



தற்போது உலகில் கொவிட் வைரஸ் பரம்பலில் மூன்று வகையான விகாரமடைந்த கொவிட் வைரஸ்கள் இனம் காணப்பட்டுள்ளன. இவற்றின் பரவல் வேகம் குறைவாகக் காணப்பட்டாலும் புதிதாக மாற்றமடையும் இந்த உருமாறிய கொவிட் கிருமியினால் ஏற்படும் பாதிப்புக்கள் தற்போது மீளவும் உலகை அச்சுறுத்தி உள்ளன.

தடுப்பூசிகள் கண்டுபிடிக்கப்பட்டுவிட்டன... அவை நமக்குக் கிடைக்கவிருக்கின்றன என்கிற நம்பிக்கையிலும் எதிர்பார்ப்பிலுமாக மக்கள் அனைவரும் சுகாதாரப் பழக்கவழக்கங்களைப் புறந்தள்ளிவருகின்ற சூழலில் இந்தச் செய்தி வந்தடைந்துள்ளது. பிரித்தானியாவில் உருமாறிய புதிய கொவிட் வைரஸ் பரவலானது இப்போது வரை உலகில் 55 நாடுகளில் அடையாளம் காணப்பட்டுவிட்டது. தடுப்பூசிகளுக்குக் கட்டுப்படாமலும் இவை செயலாற்றுவது தெரிய வந்துள்ளது. இவ்வாறு புதிய விகாரத்தினால் உருமாறும் கொவிட் கிருமிகளினால் ஏற்படும் பாதிப்புக்களைக் கட்டுப்படுத்த மீளவும் தொடக்கத்தில் இருந்து முயற்சி எடுக்கவேண்டிய அவல நிலை ஏற்பட்டுள்ளது.

கொவிட் கிருமிகள் விகாரமடைய பல காரணிகள் துணைபோகலாம். குறிப்பாக மருத்துவமனைகளில் கொவிட் நோயாளிகளுக்கு எக்ஸ் கதிர் மூலம் பரிசோதனைகள் செய்யும்போது கொவிட் கிருமிகள் மேலும் விகாரமடையலாம்.

சமூகத்தில் குறித்த சிலருக்குக் கொவிட் தடுப்பு மருந்து கொடுக்கும்போது ஏனையவர்களில் விகாரமுற்ற கொவிட் கிருமிகள் உருவாகலாம். இவை யாவும் எதிர்வரும் இரண்டு வருடங்களுக்கு உலகளாவிய ரீதியில் சவால்களாக அமையும். இந்த நிலையில் பயணக்கட்டுப் பாடுகள், சமூக இடைவெளி பேணல், தனிமைப்படுத்தப் படல், முகக்கவசம் அணிதல், கைகளை அடிக்கடி சவர்க்காரமிட்டுக் கழுவுதல் போன்ற சுகாதார எச்சரிக்கைக் காப்புக்களை கடைப்பிடித்தல் அவசியம். ஏனெனில் சீனாவில் இருந்து பரவிய வைரஸ் போல் இன்று உலகின் எந்த மூலையில் இருந்தும் புதிது புதிதாக கொவிட் வைரஸ் விகாரமடைந்து பரவலாம். அதற்கு உரிய தடுப்பு மருந்து தயாரிப்பதற்கு முன்பே மீண்டும் அது பெரிய அழிவினை ஏற்படுத்தலாம். எனவே சுகாதாரப் பழக்கங்களே இப்போதைக்குக் கொவிட் வைரஸை உலகில் இருந்து முற்றாக அகற்ற உதவும். அதற்காக இன்னும் இரண்டு வருடங்களுக்காவது நாம் அனைவரும் சுகநல வழிகளில் கவனமாக இருத்தல் வேண்டும்.

இவ்விதழ் யாழ்ப்பாணம் இல. 551ஏ, கஸ்தூரியர் வீதியிலுள்ள கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிமிட்டட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 23.01.2021 அன்று வெளியிடப்பட்டது. தொடர்பு: 0214927781